# உதயன்



27

www.onlineuthayan.com

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 286 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (07/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


# கோப்பாயில் 550 பரப்புக் காணி பறிபோகின்றது படையினரிடம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சம்மதம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 7

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் படைமுகாம்களை அமைப்பதற்குப் படையினர் கோரியிருந்த 550 பரப்புக் காணியை அவர்களுக்கு வழங்குவதற்குச் சம்மதம் வெளியிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கான சம்மதம் பெறப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இதனால் இந்த 550 பரப்புக் காணி படையினரின் கைக்குப் பறிபோகவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இறுதியாக கூட்டத்தின் அனுமதி பெறவேண்டிய தீர்மானம் பிரதேச செயலரினால் வாசிக்கப்பட்டது.

கோப்பாயில் ஜே/261 கிராம சேவையாளர் பிரிவில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த சிறைச்சாலைக்கென ஒதுக்கப்பட்ட 333.09 பரப்புக் காணியை இலங்கைப் பாதுகாப்புப் படைப்பிரிவின் 51ஆவது படைத் தலைமையகம் அமைக்க வழங்குவது எனவும், நீர்வேலி ஜே/269 கிராம சேவையாளர் பிரிவில் பன்னாலை பகுதியிலுள்ள 36.37 பரப்பு அரச காணியை இலங்கை பாதுகாப்புப் படையினர் முகாம் அமைக்க வழங்குவது எனவும்,

தம்பாலை– கதிரிப்பாய் ஜே/287 கிராம அலுவலர் பிரிவில் 179.43 பரப்புக் காணியை இலங்கைப் பாதுகாப்புப் படையினரின்

பார்க்க பக்கம் 4

## பொன்னாலை வரதராஜப்பெருமாளுக்கு இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், செப்.7

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த் திருவிழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறும்.

*(சிறப்பிதழ் உள்ளே)*


*சீருடை, பாதணிகள் தராவிட்டால் பனிப்புறக் கணிப்பில் குதிக்கப் போவதாக பல்கலை கல்விசாரா ஊழியர், அரசுக்கு எச்சரிக்கை.* 2

*இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு வடக்கின் பங்களிப்பு வெறும் 3.7 வீதமே என மத்தியவங்கி தகவல்.* 5

*சூரியசக்தி மூலம் இயங்கும் ரிக்ஷாவை தமிழக இளைஞர் உருவாக்கி புதிய சாதனையை நிலை நாட்டி உள்ளார்.* 8

*பிரிட்டன் இளவரசர் ஹரியின் நிர்வாண கோலத்தை சித்திரிக்கும் கார்ட்டூன் விளையாட்டு வெளியாகிறது.* 9


## மன்மோகனை இந்தியாவில் மஹிந்த சந்திக்கும் சாத்தியம்

கொழும்பு,செப் 7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குப் பயணம் செய்யும்போது இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய பிரதேச மாநிலத்தில் நடைபெறவுள்ள பௌத்த விழாவொன்றில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்கிறார்.

இந்தப் பயணத்தின் போது மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்குப் பிரதமர் மன்மோகன் சிங்கின் விருப்பத்தை இந்தியா தெரியப்படுத்தியுள்ளது என இந்திய அரச வட்டாரங்கள்

உறுதிப்படுத்தியுள்ளதாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான அமெரிக்க அனுசரணையுடனான பிரேரணைக்கு

பார்க்க பக்கம் 4

## கோப்பாய் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள் எவரும் பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், செப்.7

இராணுவத்தினரால் காணிகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் கண்டன அறிக்கைகளை வெளியிட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது பிரதேச சபை உறுப்பினர்களோ எவரும் கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதில் ஈ.பி.டி.பியின் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் இராணுவத்தினருக்குக் காணிகள் வழங்குவது தொடர்பில் ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லை.

கோப்பாய் பிரதேச செய

பார்க்க பக்கம் 4

## மீனவர் பிரச்சினை குறித்துப் பேச தமிழகக்குழு கொழும்பு வருகை

### மன்மோகனுடன் நேரில் பேசிய நிலையில் இலங்கை அதிகாரிகளுடனும் சந்திப்பு

கொழும்பு, செப். 7

இந்தியா தமிழ்நாட்டிலிருந்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் குழுவொன்று இம்மாதம் நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளது. இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ள நிலையிலேயே இந்தக் குழுவின் இலங்கை பயணம் அமைந்துள்ளது.

இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தின் ஆலோசகர் டி.தேவதாஸ் தலைமையில் இலங்கை வரவுள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள அதேவேளை,

இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இருநாட்டு மீனவர்களும்

பார்க்க பக்கம் 4

## இலங்கையர் மீதான தாக்குதலுக்கு புலிகளைச் சந்தேகிக்கின்றது அரசு

### அமைச்சர் கெஹலிய நேற்றுத் தகவல்

கொழும்பு,செப் 7

இலங்கைக்கு எதிராக இந்தியாவில் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுவதாக இலங்கை அரசு நேற்று குற்றம் சாட்டி உள்ளது.

ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்.

இந்திய ஊடகங்கள் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் நாட்டில் இடம்பெற்று வரும் இலங்கை எதிர்ப்புப் போராட்டங்களின் பின்னணி இங்கிருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளாக இருக்கக் கூடும் என நாம் நினைக்கிறோம். ஆயினும் அதனை உறுதியாகக் கூறமுடியாது. அண்மைக் காலமாக இந்தியா

பார்க்க பக்கம் 4

## துருக்கிக் கடலில் கவிழ்ந்தது படகு அகதிகள் 58 பேர் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, செப்.7

ஐரோப்பாவுக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் மீன்பிடிப் படகொன்று நேற்று துருக்கியின் மேற்குப் பகுதிக் கடலில் பயணித்துக்கொண்டிருந்த வேளை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 58 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக துருக்கியின் அனடோலியா செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

43 பேரின் சடலங்கள் கடலில் இருந்தும் 15 பேரின் சடலங்கள் படகிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளதாக துருக்கியின் இஸ்மீர் மாகாணத்தின் ஆளுநர் தெரிவித்ததாக அச்செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

படகில் பயணம் செய்தவர்களில் 46 பேர் காப்பாற்றப்பட்

பார்க்க பக்கம் 4

## புதிய அமெரிக்கத் தூதுவர் இன்று இலங்கை வருகிறார்

கொழும்பு,செப் 7

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மைக்கேல் சிசன் இன்று வெள்ளிக்கிழமை இலங்கை வருவார் என்று அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் அவர் இலங்கையர்களுக்குத் தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளும் வகையிலான வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதில் இலங்கையுடன் உறவினை வளர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் குறித்து ஆராயவிருப்

பார்க்க பக்கம் 4

## கொழும்பு வர்த்தகர்கள் கடையடைப்புப் போர்

கொழும்பு,செப் 7

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

தமிழகத்தில் இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பை வெளியிட்டு நேற்றுப் பிற்பகல் ஒரு மணியுடன் கோட்டை,

பார்க்க பக்கம் 4

## இலங்கை - பாகிஸ்தான் இடையே வலுவான பாதுகாப்பு ஒத்துழைப்பு

### இஸ்லாமாபாத் பேச்சில் இணக்கம்

இஸ்லாமாபாத்,செப் 7

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கமான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக, இஸ்லாமாபாத்தில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

குறிப்பாகப் பாதுகாப்பு உற்பத்திகள் மற்றும் பயிற்சிகள் குறித்து இந்தப் பேச்சுகளில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சின் செயலர் லெப்.ஜெனரல் சகீட் இக்பாலுக்கும், இலங்கை இராணுவ உயரதிகாரியான பிரிகேடியர் ரி.என்.ஜெயசூரியவுக்கும் இடையில்,

பாகிஸ்தான் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்தச் சந்திப்பின்போது இராணுவ மட்ட ஒத்துழைப்பை விருத்திசெய்துகொள்ள வேண்டிய தேவைகள் குறித்து வலியுறுத்

பார்க்க பக்கம் 4


**ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாநாடு ஒத்திவைப்பு**

செப்[illegible] 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். நகரில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட மாநாடும் அங்கஜன் இராமநாதன் பிரதம அமைப்பாளராகப் பதவியேற்று இரு வருடங்கள் பூர்த்தியாவதையொட்டிய நிகழ்வும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்படுகின்றன என்பதை அன்பார்ந்த மக்களுக்கும், அழைப்பாளர்களுக்கும், கட்சி அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம். புதிய திகதி பின்னர் அறியத் தரப்படும்.

அங்கஜன் இராமநாதன், பிரதம அமைப்பாளர்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, யாழ். மாவட்டம்

(22485)(6.8.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் கல்வியைத் தொடர வழி செய்யுங்கள்

## கல்விசாரா ஊழியர்கள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.7

''பல்கலைக்கழகங்களில் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்து, மாணவர்கள் கல்வியைத் தொடர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்பதைனை வலியுறுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், அரசுக்கும் கோரிக்கை விடுத்து அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஒரு மணி நேர கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களும் பல்கலை நுழைவாயிலில் நேற்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




'சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு பல்கலைக் கழகங்களைத் திறந்து கல்விச் செயற்பாட்டை ஆரம்பி', 'போதனை சாரா ஊழியர் பிரதிநிதிகளுடனான உடன்பாட்டை உடனே நடைமுறைப்படுத்து', 'ஆசிரியர்களுக்கும் ஊதியப் பிரச்சினை, ஊழியர்களுக்கும் ஊதியப் பிரச்சினை, மாணவர்களுக்கோ பெரிய பிரச்சினை, நிர்வாகமோ ஆழ்ந்த நித்திரை', 'விரிவுரையாளர்கள் வீதியில் - ஊழியர்கள் வீதியில் - மாணவர்களும் வீதியில் பல்கலைக்கழகங்களோ இருட்டில்', 'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரே வெளியேறு', 'பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன, பல்கலைக்கழக அமைப்புக்கள் சீரழிக்கப்படுகின்றன, ஏன் இன்னும் மௌனம், போராடுவோம் இறுதிவரை போராடுவோம்', 'அதிகாரிகள் தடை போட்டாலும் நாம் நம் பாதையில் செல்வோம்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்வி சாரா ஊழியர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து முதல் ஒரு மாதம் வேலை நிறுத்தப் போராட்டம் செய்தனர். பின்னர் பல்கலைக்கழக ஆசிரிர்கள் இரண்டு மாதங்களாக ஆசிரியர்களின் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுகின்றனர். மூன்று மாதங்களாக மாணவர் கல்வி சீரழிக்கப்படுகிறது. எனவே மாணவர்கள் கல்வியைத் தொடர நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாகக் கூறினர். (த-4)

### ஐ.தே.க. தலைமையகம் மீளத் திறப்பு

கொழும்பு,செப். 7

புதுப்பிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் ஸ்ரீகோத்தா தலைமையகம் நேற்று மீண்டும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் 66ஆவது வருடநிகழ்வின்ஒரு அங்கமாக இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்று நடைபெற்ற கட்சியின் 66ஆவது வருட நிகழ்வில், கட்சியின் பிரதித்தலைவர் சஜீத் பிரேமதாஸ மற்றும் முன்னாள் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. (த)

### மாநாடு ஒத்திவைப்பு

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு பிற்போடப்பட்டுள்ளதாக கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பங்குபற்றவிருந்த ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ வரமுடியாத காரணத்தினாலேயே இந்த மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (16)

### விபத்தில் முதியவர் சாவு

யாழ்ப்பாணம், செப்.7

நேற்று முற்பகல் நாயன்மார்கட்டில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் சிகிச்சை பயனின்றி நேற்றுப் பிற்பகல் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் நாயன்மார்கட்டைச் சேர்ந்த மாணிக்கம் தம்பிராசா (வயது 75) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

குறித்த நபர் வீதியை கடக்க முற்பட்ட வேளை வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் சாரதி யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-4)

## கைதிகள், காணாமல் போனோருக்காக 1008 தேங்காய் உடைத்து பிரார்த்தனை

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்

கொழும்பு,செப். 7

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டியும் காணாமல் போனவர்களைப் பாதுகாப்பாக மீட்டுத் தர வேண்டியும் 1008 தேங்காய் உடைத்து காளியிடம் சிறப்புப் பிரார்த்தனை செய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

சர்வதேச கைதிகள் தினமான எதிர்வரும் 12ஆம் திகதி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் காணாமல் போனவர்கள் வீடு திரும்புவதற்கும் வவுனியா, குருமண்காட்டில் உள்ள காளிகோவிலில் முற்பகல் 10 மணிக்கு 1008 சிதறு தேங்காய் உடைத்துச் சிறப்புப் பிராத்தனை செய்யப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகள் ஆகியும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் இருப்பது எமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. எனினும் அவர்களின் விடுதலை தொடர்பாக நாம் மேற்கொண்ட பல முயற்சிகளும் பலனற்றுப் போயுள்ளன.

இதுமட்டுமன்றிச் சிறைக்கூடங்கள் கூட தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பாதுகாப்பான இடமாகத் தோன்றவில்லை. சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் நிமலரூபன், டில்ருக்ஷன் ஆகியோர் மரணமடைந்தனர். சதீஸ்குமார் நினைவிழந்த நிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார்.

சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், சர்வதேச கைதிகள் தினத்தன்று இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது - என்றுள்ளது. (த-400)

## சீருடை, பாதணி வழங்காவிடின் விரைவில் பணிநிறுத்தப் போர்

### யாழ். பல்கலை கல்விசாரா ஊழியர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.07

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தமக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய சீருடை, பாதணி என்பனவற்றை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் மேலதிக நேரக்கொடுப்பனவை விரைவாக வழங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி உள்ளனர். இவற்றை உடன் நிறைவேற்றத் தவறின் தாம் போராட்டத்தில் குதிக்கப் போவதாக ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராஜா தெரிவித்தார்.

இது தொடர்பான எச்சரிக்கை துண்டுப் பிரசுரங்கள் யாழ்.பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தங்கராஜா தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு வருடத்துக்குமான சீருடை, பாதணி என்பன வருட ஆரம்பமான ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது எட்டு மாதங்களாகிவிட்ட போதும் அவை வழங்கப்படவில்லை.

இராமநாதன் கட்டடத் தொகுதியில் மின்சாரமின்மை மலசல கூடமின்மை, வாகனத் தரிப்பிடப் பற்றாக்குறை மற்றும் சிற்றூண்டிச் சாலைகளில் தாமதம் எனப் பல பிரச்சினைகள் தொடர்கின்றன. இவை சீர்செய்யப்படவில்லை.

25,30,35,40 ஆகிய வருடங்களை நிறைவு செய்தவர்களுக்கு நான்கு கட்டடங்களில் நான்கு வகையான பதக்கங்கள் வழங்க வேண்டும். அவை இதுவரை எவருக்கும் வழங்கப்படவில்லை. மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை இதுவரை வழங்கப்படவில்லை. அவற்றை உடன் வழங்க வேண்டும்.

நிதிக் கிளை அதிகாரி மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்பது, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஒருவருக்கு சம்பள முற்பணம் வழங்கப்பட்டதிலிருந்து தெரியவருகிறது. இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். பல்கலைக் கழகத்தில் இந்த வருடம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பணிபுரிந்த பணியாளர்களின் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. அதனை உடனே வழங்க வேண்டும்.

ஊழியர் சம்பளக் கணிப்பீட்டிலுள்ள தவறுகள் திருத்தப்படாமலேயே சம்பளக் கணிப்பீடு இடம் பெறுகிறது. அதனை உடனே திருத்த வேண்டும்.

வாகனச் சாரதிகளுக்கான வாகனங்கள், கடமைகள் வழங்குவதில் பாகுபாடு காட்டப்படக்கூடாது. பேருந்து உதவியாளர் நியமிக்கப்பட வேண்டும்.

இவற்றை விரைவில் தீர்த்து வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டி வரும் என்றார்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் காண்டீபனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார். (த-14)

## யாழ். - வவுனியா தனியார் பஸ்களின் திடீர் புறக்கணிப்பால் பயணிகள் அவலம்

யாழ்ப்பாணம், செப்.7

தனியார் பஸ் சேவைக்கான நேர அட்டவணைக் குழறுபடி காரணமாக நேற்று முன்தினம் சுமார் 15 மணி நேரம் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குமான தனியார் பஸ் சேவைகள் எதுவும் இடம்பெறாத காரணத்தால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினர் சுழற்சி முறையில் வவுனியா - யாழ்ப்பாணம் தனியார் பஸ் சேவைக்கான நேர அட்டவணை ஒன்று கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நேர அட்டவணை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் பஸ்களுக்கு பொருந்தாத வகையில் அமைக்கப்பட்டிருப்பதால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்ற தனியார் பஸ்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு பின்னர் சேவையை இடைநிறுத்தியிருந்தன.

திடீரென இடைநிறுத்தப்பட்ட தனியார் பஸ் சேவையால் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தரவிருந்த பயணிகள் நேற்று முன்தினம் பெரும் அவல நிலையை எதிர்கொண்டனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது ;-

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் சுழற்சி முறையில் வெளியிடப்பட்டுள்ள நேர அட்டவணை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் பஸ்களுக்கு பொருந்தாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் சேவையில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிட்டனர். இது தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் தெரிவித்த போது கொழும்பு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் எதிர்வரும் 15 ஆம் திகதி கலந்துரையாடி முடிவு எடுக்கும் வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் புதிய நேர அட்டவணைப்படி பஸ் சேவையை நடத்துமாறும் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட தனியார் பஸ் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது வழமை போன்று சேவை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7-14)

## ஐ.நா.தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைமை இம்முறையும் இலங்கைக்கு

கொழும்பு,செப். 7

ஆசிய பசுபிக் வலயத்தில் தகவல் தொழில் நுட்ப சமூகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமான மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைவராக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

25 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் ஏகோபித்த முடிவின் படியே அந்த நியமனம் இடம்பெற்றது. ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைவர் பதவி இலங்கைக்குக் கிடைத்திருப்பது இது மூன்றாவது தடவையாகும்.

இலங்கையில் தகவல் தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்துறைக்கு வழங்கியுள்ள அரசியல் தலைமைத்துவம் போன்றவையே இலங்கைக்கு இத்தகைய கௌரவத்தைப் பெற்றுத் தந்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தமது தலைமை பதவியை ஏற்றுக்கொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் வெளியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.7

யாழ். கல்லுண்டாய் வெளியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு எரிக்கப்படுவதோடு மலக் கழிவுகளும் கொட்டப்பட்டு சுகாதார சீர்கேடு நிலவுவதால் அப்பகுதியால் பயணிப்பவர்கள் குறிப்பாக அராலி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்தச் சீர்கேட்டை நீக்கி நகரப் பகுதி மக்களைப் போன்று தாமும் சுகாதாரமாக இருக்க நடவடிக்கை எடுக்குமாறு அராலி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். நகர முதல்வர், சங்கானைப் பிரதேச செயலர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு மக்கள் சார்பில் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ். நகரில் இருந்து அராலி, வட்டுக்கோட்டைக்குச் செல்லும் வீதிக்கு இடையில் காக்கதீவு, நாவாந்துறையிலிருந்து கல்லுண்டாய் மஞ்சள் பாலம் வரையிலான பகுதியில் பல வருடங்களாக கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டும் எரியூட்டப்பட்டும் வருகிறது. இரவு நேரத்தில் மலக்கழிவுகளும் இந்தப் பகுதியில் கொட்டப்படுகிறது.

நகரப் பகுதியில் சுகாதாரத்தினைப் பேணுவதற்காக தமது கிராமப் பகுதியில் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாட்டினை மேற்கொள்வதன் மூலமாக தாம் சுகாதாரமாக வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்- என்றுள்ளது.

இதுதொடர்பாகயாழ். மாநகர ஆணையாளர் சே.பிரணவநாதனுடன்தொடர்பு கொண்டு கேட்டபோது கழிவுப் பொருள்களை அந்த இடத்தில் வைத்து முகாமைத்துவம் செய்து சுகாதார சீர்கேட்டைப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இது தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு. முரளிதரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

யாழ். மாநகர சபை போதிய நிலப்பகுதி உத்தியோகபூர்வமாக அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அந்த நிலப் பகுதியை மாநகர சபையிடம் ஒப்படைக்கும் பட்சத்தில அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் தவிர மாகாண காணி ஆணையாளரது அனுமதியும் தேவை, பிரதேச மட்ட அமைப்புகளது சம்மதமும் தேவை. இந்த மாதம் நடைபெறவுள்ள பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதுபற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று முரளிதரன் தெரிவித்தார். (16-4-9)

# 10 ஆயிரம் பனை நாற்றுக்களை இம்முறை நடுவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், செப்.7

யாழ். மாவட்டத்தில் இந்த போகத்தில் 10 ஆயிரம் பனை நாற்றுக்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாவட்டம் தோறும் 5ஆயிரம் பனை நாற்றுக்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 10 ஆயிரம் பனை நாற்றுக்களை நட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒரு தொகுதி நாற்றுக்கள் சேமிக்கப்பட்டுள்ளன.

பொது இடங்கள், பாடசாலைகள், அரச, தனியார் காணிகள், வைத்தியசாலை போன்ற இடங்களில் இடவசதிக்கு ஏற்ப இவற்றை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடப்படும் இந்த நாற்றுக்களை மிகவும் பாதுகாப்பாக வளர்த்து எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் கூறினார். (ம-17)

# திருநெல்வேலி சந்தையில் வாழைக்குலை விற்பனைப் பிரிவு

யாழ்ப்பாணம், செப்.7

திருநெல்வேலிச் சந்தையின் கீழ் மாடியில் வாழைக்குலை மொத்த விற்பனைப் பிரிவை விரைவில் ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சந்தைக் கட்டடத்தின்கீழ்மாடியின்புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

புனரமைப்பு பணிகள் நிறைவுற்றதும் இங்கு வாழைக்குலை விற்பனைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்படும்.

அதனைவிட இந்தக் கீழ் மாடியின் ஒரு பகுதியில் சைக்கிள் தரிப்பிடமும் திறந்து வைக்கப்படும்.

இந்தப் பகுதியில் நிரந்தர சைக்கிள் தரிப்பிட வசதி ஒன்று இல்லாதமையால் மக்கள் சைக்கிள்களை வீதியோரங்களில் நிறுத்தி விட்டு செல்கிறார்கள்.

சைக்கிள்கள் இவ்வாறு வீதியோரம் நிறுத்துவதால் ஆடியபாதம் வீதி, பலாலி வீதி ஆகியவற்றில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது-என்றார். (த-17)

# வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உதவி

## வேலணை சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் வழங்கியது

யாழ்ப்பாணம், செப் 7

வேலணை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான உதவியாக பணக் கொடுப்பனவுகளையும் சங்கம் நடத்திய பரிசுச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் வழங்கியுள்ளது.



நேற்று வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலகத்தில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதிகளைச் சேர்ந்த 96 பிள்ளைகளுக்கு தலா 500 ரூபா வீதம் வழங்கப்பட்டது. சமுர்த்தி அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியால் பெறப்பட்ட இந்தப்பணம் ஐந்து மாத காலத்துக்கு மாணவர்களுக்குப் பகிர்தளிக்கப்படவுள்ளது என்று பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தெரிவித்தார். இது தவிர சங்கத்தால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இந்த உதவி வழங்கலுக்காக இடம்பெற்ற கொடி விற்பனையில் அதிக தொகை வசூல் செய்த உத்தியோகத்தர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சமுர்த்தி மாவட்ட ஆணையாளர் எஸ். மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வேலணை உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. மீரா, வேலனை பிரதேச சபைத்தலைவர் எஸ். சிவராசா, மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பாளர் எஸ். ரகுநாதன், சிங்கர் நிறுவன யாழ். கிளை முகாமையாளர் எஸ். கிரிசன் ஆகியோர் பரிசில்களை வழங்கினர். (ம-7)

# இறங்குதுறைகளின் புனரமைப்பு ஆரம்பம்

குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவு இறங்குதுறைகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு துறைகளும் ஆழமாக்கப்பட்டுப் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இறங்குதுறைகளில் ஒரே நேரத்தில் படகுகள் மற்றும் கடற்பாதை என்பன தரித்து நின்று பயணிகளைச் சிரமமின்றி ஏற்றிச்செல்ல வசதியாகப் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குறிகாட்டுவான்-நயினாதீவு இடையே கடற்பாதைச் சேவையை ஆரம்பிப்பதற்காகக் கடற்பாதையைச் சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர் இறங்குதுறைகளின் புனரமைப்புப் பணிகள் முடிவடையும் எனவும் அவர் கூறினார். (த-17)

# பிரதம தபாலக வளாகத்தில் மரக்கறிச் செய்கை வெற்றி

யாழ்.பிரதம தபாலக வளாகத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட மரக்கறிச் செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது. கத்தரி, வெண்டி, பயற்றை போன்ற மரக்கறிப் பயிர்கள் யாழ்.பிரதம தபாலக வளாகத்தின் தோட்டத்தில் பயிரிடப்பட்டது. பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்த மரக்கறிச் செய்கை பெரும் வெற்றியளித்துள்ளதோடு தபாலகத்துக்கு ஒரு வருமானத்தையும் ஈட்டிக் கொடுத்துள்ளது என்று தபாலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் பெறப்பட்ட பணத்தில் தொலைக்காட்சி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு தபாலகத்தின் கருமபீடத்தில் மக்கள் பார்வைக்குப் பொருத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (த-17)

ஓவியர்கள் தேவை
சுவர் விளம்பரம்
எழுதக்கூடிய அனுபவம்
உள்ள ஓவியர்கள்
தேவை.
தொடர்புகளுக்கு :
077 2023857, 077 2718108
(22559)(67-9)

# அராலி-வேலணை கடற்பாதை அபிவிருத்தி செய்வது எப்போது?

## பிரதேச சபையினர் கேள்வி

யாழ்ப்பாணம், செப்.7

அராலி-வேலணை கடலுக்கு ஊடான பாதையை அபிவிருத்தி செய்வது குறித்து யாழ்.-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்து 10 மாதங்கள் கடந்துள்ளபோதும் இதுவரையில் இந்தப் பாதையின் அபிவிருத்தி குறித்து எந்தப் பதிலும் கூறப்படவில்லை.

தீவகமக்களும்-வலிகாமம் மக்களும் இதை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர் என்று பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஊடான அபிவிருத்தி எனும் தலைப்பில் கருத்து தெரிவிக்கப்பட்ட போதே மேற்படி விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இந்த மாத முற்பகுதியில் இடம்பெறும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

ஆனால் கடந்த கால கூட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள் இதுவரை உள்ளூராட்சி சபைகளுக்கு கிடைக்கவில்லை.

முன்னேற்ற அறிக்கைகளை உடனுக்குடன் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கோரியும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இடம்பெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி புறநெகும மற்றும் பல அபிவிருத்திகளுக்கான திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அராலி-வேலணை கடற்பாதை அபிவிருத்தி குறித்தும், நிதி ஒதுக்கீடு குறித்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபை கருத்திட்டத்தை முன்வைக்க வேண்டும்.

அத்துடன் இந்த அபிவிருத்தி எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் எனவும் அறிவிக்க இணைப்புக் குழுத் தலைவர் முன்வர வேண்டும்.

முன்னாள் அரச அதிபர் க.கணேஷ் காலத்தில் மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய், நல்லூர் உள்ளிட்ட பிரதேச சபைகளை நகர சபைகளாக தரம் உயர்த்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழிந்து 4 வருடங்கள் கழிந்த நிலையிலும் இந்த விடயம் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வடக்கில் சிறுவர் வைத்தியசாலை அமைய வேண்டும் என பல கோரிக்கைகள் முன்வைத்த போதும் இதுவரை பதில் இல்லை.

இவ்வாறான விடயங்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஊடாக நல்லதொரு அபிவிருத்தி ஏற்பட வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றனர். அத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் எத்தனை தீர்மானங்களுக்கு ஒருங்கிணைப்புக் குழு ஊடாக அபிவிருத்தி எய்தப்பட்டது?

அபிவிருத்தி எய்தப்படாமல் எத்தனை தீர்மானங்கள் உள்ளன என்பன பற்றியும், மாவட்ட அரச அதிபர் வழங்கி உதவ முன்வர வேண்டும் எனவும் அவர்கள் கேட்கின்றனர். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதியை வெட்டிய இருவர் ஓட்டோவுடன் மாயம்

## முல்லைத்தீவில் நேற்று அதிகாலை சம்பவம்

கிளிநொச்சி, செப்.7

ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திய இருவர் அதன் சாரதியை கத்தியால் வெட்டிவிட்டு ஓட்டோவைக் கடத்திச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் ரெட்பானா விசுவமடுவைச் சேர்ந்த க.பிறையாளன் என்பவர் கழுத்தில் கத்திவெட்டுக்கு இலக்காகி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

கோயில் திருவிழா ஒன்றுக்கு ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திய வேளை ஓட்டோச் சாரதி அவர்களை ஆலயத்தில் இறக்கிவிட்டு புதுக்குடியிருப்புப் பகுதியைநோக்கிச் சென்றுள்ளார். இதன்போது மீண்டும் இருவர் ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். ஓட்டோ வள்ளிபுனம் பகுதியைச் சென்ற வேளை சாரதியை கத்தியால் வெட்டித் தாக்க முற்பட்டுள்ளனர். கத்தி வெட்டுக்கு இலக்கான சாரதி அவர்களிடமிருந்து விடுபட்டு தப்பியோடிய வேளை இருவரும் ஓட்டோவைக் கடத்திச் சென்றுள்ளனர். ஊராரின் உதவியுடன் காயமடைந்தவர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

NP-TL-3758 என்ற இலக்கமுடைய குறித்த ஒட்டோ கிளிநொச்சி ஓட்டோ சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் இதன்போது கோயிலுக்கு குறித்த ஒட்டோவை வாடகைக்கு அமர்த்திய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10-6)

## புதிய அமெரிக்கத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பதாகவும், குறிப்பாக வர்த்தக, பொருளாதார, சுற்றுலா வாய்ப்புகள் குறித்து அவதானம் செலுத்தவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தாம் மக்களின் சக்தி குறித்து நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## இலங்கையர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வில் குறிப்பாக தமிழகத்தில் இலங்கை எதிர்ப்பு போராட்டங்களும், கருத்துகளும் வலுத்து வருகின்றன. இது குறித்து இலங்கை அரசு கரிசனை கொள்கிறது. ஆயினும் இந்த நடவடிக்கைகளால் இந்தியா - இலங்கை இடையேயான உறவில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

இலங்கை மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் தமிழ்நாட்டுக்கான பயண எச்சரிக்கை பரிசீலனை செய்யப்படும் - என்றார்.

தமிழ்நாட்டில் இலங்கையர்களுக்கு எதிரான செயற்பாடுகள், முற்றுகைகள், தாக்குதல்கள் கடந்த காலங்களில் அதிகரித்துள்ளன.இதன் காரணமாக தமிழ்நாட்டுக்கான பயண எச்சரிக்கையை இலங்கை அரசு இந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# கேரளாவில் இலங்கையரின் உண்ணாவிரதப் போர் நிறைவு

புதுடில்லி,செப். 7

கேரளாவின் - கொல்லம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட நிலையில், நாடு கடத்துவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 இலங்கையர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மேலும் 150 பேருடன் கொல்லம் ஊடாக ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் குறித்த 14 இலங்கையரும் கடந்த மாதம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிரான நீதி நடவடிக்கையின் போது அவர்கள் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் அவர்களை நாடுகடத்துவதாக அறிவிக்கப்பட்ட போதும், அதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து அவர்கள் கடந்த ஒகஸ்ட் 18ஆம் திகதி முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் அவர்களை நாடுகடத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் 12ஆம் திகதிக்குள் பூர்த்தியாகும் என்று அதிகாரிகள் உறுதியளித்த பின்னர், தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர். (த)

# சம்பள அதிகரிப்பு வேண்டும் இல்லையேல் பணிப்புறக்கணிப்பு

## மருத்துவர்களும் அறிவிப்பு

கொழும்பு, செப்.7

சம்பள வீதங்கள் அதிகரிக்கப்பட வேண்டும், போக்குவரத்து மற்றும் ஏனைய விசேட படிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தாம் விரைவில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க மருத்துவர்கள் நேற்று அறிவித்துள்ளனர்.

அரச சேவையில் மருத்துவ வாண்மையாளர்களை தக்கவைத்துக்கொள்வதற்காக, அவர்களின் சம்பளம் மற்றும் படிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என பல வருடங்களாக தாம் கோரி வருவதாகவும் ஆனால் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

ஏற்கனவே பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது சம்பள அதிகரிப்பை வழங்கக்கோரி கடந்த 3 மாதங்களாக பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (16)

## துருக்கிக் கடலில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டுள்ளதாகவும் உயிர் தப்பியவர்களில் படகின் இயக்குநர் அவரின் உதவியாளர் ஆகியோரும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிரேக்க தீவான டஹ்சின் குர்ட் பெயோக்லூவுக்கு அருகிலுள்ள துருக்கிய நகரான அஹ்மெத்பெய்லியிலிருந்து இப்படகு புறப்பட்டதாகவும் பின்னர் பாறையொன்றில் மோதியதாலேயே விபத்து இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இப்படகில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் சிரியா மற்றும் ஈராக் முதலான நாடுகளை சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனவும் இவர்களுள் சிறார்களும் அடங்குவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். இந்தப் படகில் இலங்கையர்கள் எவராவது பயணித்தார்களா என்பது தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. (16)

## கொழும்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

புறக்கோட்டையைச் சேர்ந்த வர்த்தகர்கள் அனைவரும் கடைகளை மூடியுள்ளனர்.கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்று கூடிய இவர்கள் இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது எனக் கோரி மனு ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்த மனு இலங்கைக்கான இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பழைய சோனகர் தெரு முன்னாள் வர்த்தகர் சங்கத் தலைவர் சுந்தரம் பழனியாண்டி தெரிவித்தார்.

தமிழகத்துக்குப் பயணம் செய்யும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(த)

## மன்மோகனை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தியா ஆதரவாக வாக்களித்த பின்னர் இரு தலைவர்களும் தனியாகச் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேசும் முதல் சந்தர்ப்பமாக இது அமையும்.

அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்தமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விருவரும் கடந்த ஜூன் மாதம் பிரேஸிலில் நடைபெற்ற ரியோ - 20 உச்சிமாநாட்டின்போது சந்தித்தனர். எனினும் அந்தச் சந்திப்பின்போது இரு தரப்பு விவகாரங்கள் குறித்துப்

பேசுவதற்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை என 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். (த)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தப்பட்டதாகப் பாகிஸ்தான் ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் அனுகூலத்தை ஏற்படுத்தும் வகையிலான ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.அத்துடன், எல்லா வழிகளிலும் இலங்கைக்குப் பாகிஸ்தான் தொடர்ந்து உதவிகளை அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது. இராணுவப் பயிற்சி, போர் ஒத்திகைகள், புலனாய்வுத் தகவல் பரிமாற்றங்கள், தீவிரவாத முறியடிப்பு போன்ற துறைகளில் நெருக்கமான ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளவும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது,அதேவேளை, இலங்கைக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கி வருவதற்கு பாகிஸ்தானுக்கு பிரிகேடியர் ஜெயசூரிய நன்றி தெரிவித்துள்ளார். (த)

## மீனவர் பிரச்சினை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள், எல்லைப் பிரச்சினை விவகாரம், இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் திட்டமிட்டுத் தாக்குகின்றனர் எனக் கூறப்படும் சம்பவம் உட்பட கடற்றொழில் சார்ந்த முக்கிய பல விடயங்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட சந்திப்புகளின் போது இந்திய தமிழ்நாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் விரிவாகக் கலந்துரையாடவுள்ளனர்.

அதேவேளை, இருநாட்டு மீனவர்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படாமல் இருக்கும் வகையிலான சில முன்மொழிவுகளை இந்தியத் தரப்பு, இவ்விஜயத்தின்போது சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக, இருநாட்டு மீனவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், சிதைந்துபோயுள்ள சுமுக உறவுகளை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கிலேயே தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் குழு இலங்கை வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தை நேற்று 'உதயனி'டம் உறுதிப்படுத்திய இலங்கை- இந்திய மீனவர் சமுதாயப் பேரவையின் இணைப்பாளர் எஸ்.பி. அந்தோனிமுத்து, தமிழகப் பிரதிநிதிகள் இம்மாதத்துக்குள் இலங்கை வருவர் என்றும் குறிப்பிட்டார்.

1867ஆம் ஆண்டுமுதல் 1983 ஆம் ஆண்டுவரை இலங்கை - இந்திய மீனவர்களிடையே சுமுகமான உறவு காணப்பட்டது. ஆனால், அதன்பின்னர் அந்த உறவில் அவ்வளவு இறுக்கமில்லை எனக் கருதப்படுவதால் இருநாட்டு மீனவ சமூகத்துக்குமிடையேயான உறவை மீண்டும் கட்டியெழுப்புதல் தொடர்பில் இந்தியத் தரப்பு இலங்கை விஜயத்தின்போது கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது.

அதேவேளை, தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண இந்திய அதிகாரிகள் முன்னிலையில் இந்திய - இலங்கை மீனவர்கள் அடங்கிய முத்தரப்பு பேச்சுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் எனத் தமிழக மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் அந்நாட்டின் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழகக் கடலோர விசைப்படகு மீனவர்கள் நலச் சங்கத்தின் தலைவர் எஸ். வேணுகோபால், பொதுச் செயலாளர் என்.கே.போஸ் உட்படப் பல்வேறு தமிழக மீனவர்கள் சங்கத்தைச் சேர்ந்த 11 பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்துப் பேசியபோதே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தச் சந்திப்பையடுத்தே தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் குழு இலங்கை வருகின்றது எனவும் அறிய முடிகின்றது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவதால் இலங்கை மீனவரின் வாழ்வாதாரம் மற்றும் கடல்வளம் பாதிக்கப்பட்டு வருகிறது என அண்மைக்காலமாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

## கூட்டமைப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்துக்குச் சகல திணைக்களங்களின் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பாதுகாப்புத் தரப்பினர், சிவில் சமூகத்தினர், சாதாரண பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொள்ள முடியும்.

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இறுதியாக கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்றது. 9 மாதங்களின் பின்னர் இந்தக் கூட்டம் நேற்று மீண்டும் நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கும் கடந்த மாதம் 30 ஆம் திகதி தபால் மூலமாக அழைப்பு அனுப்பப்பட்டதாகக் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலோ ஐ.தே.க. சார்பில் எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் இதில் கலந்துகொள்ளவில்லை.

மேலும் ஈ.பி.டி.பியின் பிரதேச சபை உறுப்பினர் 3 பேரும் நாடாளுமன்ற உறுப்பினரும் கலந்துகொண்டனர். படையினருக்குக் கோப்பாயின் 4 பகுதிகளில் காணி வழங்குவதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. (த -5)

## கோப்பாயில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தேவைக்கு வழங்க நில அளவை செய்யப்பட்டுள்ளது எனவும், நீர்வேலி ஜே/268 கிராம அலுவலர் பிரிவில் பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 2 பரப்புக் காணியை இலங்கைப் பாதுகாப்புப் படைக்கு வழங்குவது எனவும் பிரதேச செயலர் தீர்மானங்களைக் கூட்டத்தில் வாசித்தார்.

மேற்படி பகுதிகளில் உள்ள காணிகளையும் படையினருக்கு வழங்குவதற்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பங்குபற்றிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உட்பட எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை.

தொண்டமானாற்றுப் பகுதியில் விருந்தினர் விடுதி அமைப்பதற்கான அனுமதிகோரப்பட்ட போது திருமதி அமுதா சிறீஸ்கந்தராஜா என்பவர் குறித்த காணி தனியொருவருக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து ஆட்சேபம் தெரிவித்தார்.

இதனை விட மயிலிட்டி மக்களை, தொண்டமானாறு அக்கரைப் பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கும் படையினர் மேற்கொண்ட முயற்சிக்கும் இந்தப் பெண்மணி எதிர்ப்பு வெளியிட்டார். ஆயினும் முன்னர் குறிப்பிடப்பட்ட நான்கு காணிக்கும் ஆட்சேபம் தெரிவிக்காமையினால் அவை கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைய படையினருக்கு வழங்கப்படும் என்று கோப்பாய்ப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவருமான சில்வெஸ்திரி அலென்ரினிடம் படையினருக்கு காணிகளை வழங்க உடன்படுகிறார்களா எனக் கேட்டபோது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் [illegible] தீர்மானத்தில் தான் [illegible] ஒப்பம் இடவில்லை என அவர் [illegible] 2 மணியளவில் தெரிவித்தார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வாக்குகளின் மதிப்புணர்ந்து செயற்படுங்கள் கிழக்கு மக்களே!

நாளை விடிந்தால், கிழக்கு, சப்ரகமுவ, வடமேல் ஆகிய மூன்று மாகாண சபைகளுக்கும் காலம் முந்திய தேர்தல்கள். சப்ரகமுவ, வடமேல் மாகாண சபைகள் அரசாங்கக் கட்சியின் அதிகாரத்திலும், கிழக்கு மாகாண சபை அரசாங்கத்துக்கு ஆதரவான கூட்டுக் கட்சிகள் இணைந்த ஐ.ம.சு முன்னணியின் அதிகாரத்திலும் இயங்கின.

எனினும், இந்த வேளையிலும், அரச மற்றும் அரச சார்புக் கட்சிகளையே மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று அனைத்துலகத்துக்குக் காட்டும் பொருட்டே நாளைய தேர்தல்கள் நடைபெறுகின்றன என்று பொதுவாக விமர்சிக்கப்பட்டது.

அதிலும் குறிப்பாக, எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பூகோள மீளாய்வு கூட்டத் தொடரின் போது, இலங்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளதால், அதற்கு முன்னதாக இந்நாட்டின் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அரச கொள்கைகளையும், செயற்பாடுகளையும் ஆதரிக்கிறார்கள், ஆமோதிக்கிறார்கள் என்பதனை அனைத்துலகத்துக்கு எடுத்துக் கூறுவதற்கான பல உத்திகளில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலும் ஒன்று.

எதுவோ, எப்படியோ, குட்டித் தேர்தலுக்கான பிரசாரப் பீரங்கிகள் முழங்கி ஓய்ந்துவிட்டன. தமது தரப்பு வெற்றிபெறுவதால், மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வரப் பிரசாதங்கள் எவையாக இருக்கும் என்று போட்டியிடும் தரப்புகள் வேக வேகமாக கொட்டித் தீர்த்துவிட்டன.

எதுவானாலும் வாக்காளர் (மக்கள்), தமது பொன்னான வாக்குகளை எவரது வற்புறுத்தலுமின்றி தமது சொந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் பயன்படுத்த வேண்டும். அதுவே ஜனநாயக உரிமம்.

தமிழ், முஸ்லிம் வாக்காளர்களைப் பொறுத்தவரையில் உடனடிப் பலன்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல்-

கிழக்குத் தேர்தல் மூலம் எதனை எட்ட வேண்டும் என்பதில், தத்தம் சமூகங்களுக்கு இப்போதுள்ள பல வேண்டத்தகாத இன்னல்கள், இடர்களில் இருந்து விடுபடுவதற்கு வழி சமைக்கக்கூடிய பொது நோக்கங்களை நாடிச் செயற்பட வேண்டிய-

முன்னர் எப்போதும் இல்லாத, பெருந்தேவை உண்டு.

நாளை நீங்கள் ஒவ்வொருவரும் இடும் புள்ளடி- வாக்கு - உங்கள் சொந்த நலன்களை நாடியவையாக இருப்பதனை விடவும், உங்கள் சமூகங்களின் எதிர்கால வாழ்வியலின் நலன்நாடியவையாக இருப்பதே ஒப்பீட்டளவில் நன்மைபயக்கும் என்பதனை உணர்வது மிகவும் அவசியம்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவுடன், அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களும் அவை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் ஓய்ந்துவிட்டன. ஆகையால் உங்கள் வாக்கு எந்தக் கட்சிக்கு, எந்த வேட்பாளருக்கு என்பதனை நீங்கள் நிதானத்துடன் புத்திசாலித்தனமாக முடிவு செய்யவேண்டும்.

உங்களுக்கு உள்ள தெரிவை மற்றெவரும் தீர்மானிக்க இடமளியாதீர்கள். உங்களுக்குரிய அந்தச் சுதந்திரத்தில் வேறு எவரும் தலையிட அனுமதிக்காதீர்கள். அவர்கள் தரப்போவதாக வாக்களிக்கும் சலுகைகளின் (அவை பெரிதாக இருப்பினும்) பக்கம் திரும்பியும் பார்க்காதீர்கள்.

கிழக்கு மாகாணத்தில், ஏற்கனவே தேர்தல் விதிமுறைகள் 148 தடவைகள் மீறப்பட்டுவிட்டதாக தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது. ஆகையால் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கு இடம்கொடுக்கலாகாது என்பதில் மிக அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பது உங்களின் பெரும் கடமை.

மேலும், கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நீதியும் நியாயமுமாக இடம்பெறுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். தேர்தல் அன்றும் அதற்கடுத்த நாள்களிலும் தேர்தல் வன்முறைகள் உண்டாகாது, உண்டாக்கப்படாது தடுக்கும் முழுப்பொறுப்பும் அதனுடையதே.

தேர்தல் வெற்றி தோல்விகளை வைத்து நாளை சனிக்கிழமையும், அடுத்த நாள்களிலும் வன்செயல்கள் இடம்பெறாது தடுப்பதும், தவிர்ப்பதும் முழுக்க முழுக்க அரசாங்கத்தின், அதன் அங்கங்களின் பொறுப்பு. முந்திய காலங்களில் தேர்தல் வன்செயல்களைக் கண்டும் காணாமலும் அவற்றுக்கு உடந்தையாகவும் பொலிஸார் மற்றும் ஆயுதப் படையினர் செயற்பட்டது உண்டு. நாளைய தேர்தலில் அதற்கு இடந்தராமல் தடுக்கும் பொறுப்பு சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய அரசாங்கத்தையே பொறுத்தது.

நாளை நடைபெறும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் கிழக்குத் தேர்தல் என்ன செய்தியைச் சொல்லப்போகிறது?

அங்கு தேர்தல் மீறல் சம்பவங்கள் நடைபெறுமா என்பதனையும், தேர்தல் நாளன்று சட்டத்தையும், ஒழுங்கையும் அரச தரப்பு, அதன் பாதுகாப்பு அங்கங்கள் உரிய முறையில் நிலைநாட்டுமா அல்லது மறுவளமாகச் செயற்படுமா என்பதனையும் அனைத்துலகம் கண்களை அகல விரித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதிகாரத் தரப்பு அசந்தும் அதனை மறந்துவிடலாகாது.

கிழக்கு மாகாணத்தில், நீதியும் நியாயமுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதில் மக்களைப் போலவே அரச அலகுகளும் கண்ணும் கருத்துமாக விழித்திருந்து செயற்படுவது மிக அவசியம். தேர்தல் முறைகேடுகளும், வன்செயல்களும் தலையெடுக்காது தடுக்கும் சக்தி அரச உயர் பீடங்களுக்கு இயற்கையாகவே அவற்றிடம் உதிக்க வேண்டும்.

இல்லையேல்-

இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டுக்கள் எழுந்தது போன்று அனைத்துலக மட்டத்தில் அசிங்கப்பட நேரிடலாம்.

முந்திய பல தேர்தல்களில் அரசாங்கங்களே, அதன் அலகுகளே, தேர்தல் குழறுபடிகளுக்கும் மோசடிகளுக்கும் உடந்தையாக இருந்தன என்பதனை மறந்து செயற்படக் கூடாது. அது ஒரு வகையில் சரித்திரமாகிவிட்டது.

அனைத்துலக நாடுகள், மிகக் குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள், நாளைய தேர்தலை, சிவப்புக் கண்ணாடி அணிந்து மிகக் கூர்மையாக அவதானிக்கப்போகின்றன என்றவாறு தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

நாளை நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில், ஏனைய இரண்டு மாகாணங்களையும்விட கிழக்கிலேயே விதிமுறை மீறல்கள் அதிகரித்துள்ளன என்பதால்-

அங்கு பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு முகவர் நிலையங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன என்பதும், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஜனநாயகத்தின் ஆணி வேர் தேர்தல்; மக்களின் வாக்குகள், அவை மோசடி செய்யப்பட்டால், அல்லது வாக்களிப்பது ஏதோ வகையில் தடுக்கப்பட்டால், அது ஜனநாயகத்தின் மூல வேரை வெட்டிச் சாய்ப்பதற்கு ஒப்பானதாகும்.

# இலங்கையின் மொத்த உற்பத்திக்கு வடக்கின் பங்களிப்பு போதாது

## 3.7 வீத பங்களிப்பே வழங்கியுள்ளது

**2011ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உற்பத் திக்கு ஒவ்வொரு மாகாணங் களும் பங்களிப்பு தொடர் பான விவரங் களை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், செப்.7

இலங்கையின் மொத்த உற்பத்திக்கு வட பிராந்தியம் 3.7 சதவீத பங்களிப்பையே வழங்கியுள்ளது. 2010 ஆம் ஆண்டில் 3.4 சதவீதமாக காணப்பட்டபங்க ளிப்பு 2011ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ள போதிலும் ஏனைய மாகாணங்களைவிட வடமாகாணம் பின் தங்கியதாகக் காணப்படுகின்றது.

2011ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உற்பத்திக்கு ஒவ்வொரு மாகாணங்களும் பங்களிப்பு தொடர்பான விவரங் களை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. இதில் மேல் மாகாணம் கடந்த ஆண்டு 44.4 சதவீத பங்களிப்பை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கி முதல் நிலையில் உள்ளது.

இருப்பினும் 2010ஆம் ஆண்டு 44.8 சதவீத பங்களிப்பை வழங்கிய மேல் மாகாணம் 0.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் 2010ஆம் ஆண்டு 3.4 சத வீத பங்களிப்பை வழங்கியுள்ளது. இது 2011 ஆம் ஆண் டில் 0.3 சதவீதத்தால் அதிகரித்து 3.7 சத வீதமாகியுள்ளது.

வட மாகாணத்தின் இந்த வளர்ச்சி வீதமானது ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடு கையில் அதிகமாகவே உள்ளது. வடமாகாணத்தின் உள் நாட்டு உற்பத்திக்கான மொத்த பங்களிப்பு 241 பில்லியன் ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

## விசாரணைக் குழு நியமனம்

வலி வடக்கு, செப். 7

வட மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் வலி தெற்கு, வலி தென் மேற்கு பிரதேச சபைகள் மீது விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண உள்ளூராட்சி மன்றத்தின் செயலாளர் ம.ஜெகூ இதனை நியமித்துள்ளார்.வட மாகாணத்தின் பிரதம செயலாளர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிட்டு வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பிரதியிட்ட கடிதத்தின் பிரசாரம் இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட கட்டடங்களை கையளித்தல் தொடர்பான விசாரணை என தலைப்பிட்ட கடிதத்தின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட பிரதேச சபைகளின் மீது விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## வலிகாமம் தெற்கு பிரதேச கலாசார விழா

வலி வடக்கு, செப். 7

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் கலாசார விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவில் இளம்தொண்டர் சபை மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பகல் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விவரவியல்துறைப் பேராசிரியர் ஆர்.விக்கினேஸ்வரன், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.தேவி, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரனும் கலந்துகொள்வர்.

இதில் உடுவில் நிருத்திய நிகேதா நாட்டியாலயத்தின் நடன நிகழ்வும் ஏழாலை அபிநயா நிலையத்தின் கிராமிய நடனம் சுதேசிய கலா மன்றம் வழங்கும் அன்னை நிலம் என்னும் நாடகமும் இடம்பெறும்.

தேசிய கலை இலக்கியப் போட்டியில் பிரதேச, மாவட்ட மட்டங்களில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல் மற்றும் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற சித்திரப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி க.தேவராசா, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம், யாழ். பல்கலைக்ககழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-86)

## நல்லூர் கோட்டத்தில் 4 பாடசாலைகள் அபிவிருத்திக்கு

வலி.வடக்கு, செப்.7

நல்லூர் கோட்டத்தில் 4 பாடசாலைகள் அபிவிருத்திக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளையும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கோண்டாவில் வடக்கு றோ.க.த.க, கொக்குவில் கிழக்கு நாமகள், கோண்டாவில் சி.சி.த.க., கொக்குவில் மேற்கு ஸ்தான சி.சி.த.க ஆகிய பாடசாலைகளே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு தலா 5 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## அச்சு உடைந்ததால் கடலில் பாய்ந்தது வாகனம்

யாழ்ப்பாணம், செப்.7

புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த ''றோட்மாற்' ரக வாகனம் முன் அச்சு உடைந்ததில் பண்ணைக் கடலில் வீழ்ந்தது.

வாகனத்தின் உரிமையாளர் ரி.நாகமணி (வயது-47) என்பவரும் அவருடன் வந்த ஏனைய இருவரும் வாகனத்துடன் கடலில் விழுந்த போதும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.இந்த வாகனத்தைக் கொள்வனவு செய்து ஒருமாதம் கூட ஆகாத நிலையில் புதிய வாகனத்தின் அச்சு உடைந்தது குறித்து விசனம் தெரிவித்தனர்.

வாகனத்தைக் கொள்வனவு செய்த நிறுவனத்திடமும் இது தொடர்பாக அறிவித்துள்ளதாகவும் கூறியுள்ளனர். (ம-7)

## கலைத்துறையில் உள்ளோருக்கு அ.அட்டை வழங்க ஏற்பாடு

கெருடாவில், செப்.7

18 வருடங்களுக்கு மேலாகக் கலைத்துறையில் ஈடுபட்டு வருபவர்களுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

உரியவர்கள் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-253)

## ஆறு.திருமுருகனுக்கு ஸ்கந்தாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், செப்.7

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 20 ஆண்டுகள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக அளப்பெரும் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள கலாநிதி ஆறு.திருமுருகனுக்கு பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஒறேற்றர் மண்டபத்தில் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் க.சிவாஜி தலைமையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன், யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம், இந்தியப் பிரதித் தூதுவர் கே.மகாலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் இ.குமார வடிவேல், ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெ.இருதயநாதன், ஸ்கந்தாவின் பழைய மாணவரும் தாய்ச் சங்கத்தலைவருமான சு.பரமநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கு எந்த இடமும் கிடையாது: கூட்டமைப்பு

## மறிச்சுக்கட்டியில் முஸ்லிம்களின் வீடுகள் எரிப்பு குறித்து அறிக்கை

மன்னார், செப்.7

முஸ்லிம் மக்களின் வீடுகள் தீ வைத்த சம்பவம் மற்றும் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் ஆகியவற்றின் மூலம் இந்த நாட்டில் சிறுபான்மையினருக்கென இடங்கள் எவையும் இல்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

மன்னார் மறிச்சிக்கட்டி மரைக்கார் நகர் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களின் குடிசைகளுக்குத் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக முசலிப் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வாழ்ந்து வந்த தமிழ், முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களிலும், அயல் கிராமங்களிலும் தற்காலிகமாக வசித்து வந்தனர்.

இந்த நிலையில் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மறிச்சிக்கட்டி மரைக்கார் நகர் கிராமத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் புத்தளம் மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் மறிச்சிக்கட்டி மரைக்கார் நகர்க் கிராமத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது கிராமத்தில் மீளக் குடியமர்ந்தனர். இதன் போது இந்த மக்கள் தற்காலிக கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் குறித்த தற்காலிக வீடுகளை உடைத்துச் சேதப்படுத்தியதோடு ஏனைய வீடுகளுக்குத் தீ வைத்து கொளுத்தியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் சுமார் 21 குடும்பங்கள் வரை தமது இருப்பிடங்களை இழந்த நிலையில் உள்ளன. குறித்த சம்பவத்தில் கடற்படையினரே ஈடுபட்டதாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற போரால் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் தமது சொந்த மண்ணில் குடியமர்வதற்குப் பல்வேறு சிரமங்களையும் எதிர் கொண்ட இந்த முஸ்லிம் மக்கள் தமது சொந்தக் கிராமத்தில் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்த போதும் குறித்த சம்பவம் அவர்களுக்குப் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அரச தரப்புடன் இருக்கின்ற எவராக இருந்தாலும் சரி அவர்கள் அரசை விட்டு வெளியில் வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களுடன் இணைந்து ஒருமித்துச் செயற்படத் தயாராக உள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் அரசு துரித விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அத்துடன் குறித்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு குறித்த சம்பவத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என்றுள்ளது. (க-12)

# கிரவல் மண் அகழ்வால் பல்வேறு பாதிப்புக்கள்

அக்கராயன், செப்.7

அக்கராயன்குளத்தை அண்டியுள்ள பகுதியில் கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்படுவதால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பகுதிக்குக் கொண்டு செல்வதற்கென அகழ்ந்தெடுக்கப்படும் கிரவல் மண் அக்கராயன் மகா வித்தியாலயச் சூழலிலும், பாலங்குளம் வயல் வெளிகளிலும், வீதியோரங்களிலும் குவிக்கப்பட்டிருப்பதனால் இந்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தக் கிரவல் மண்ணினால் மக்களின் வாழ்விடங்களும், வயல் நிலங்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

குடியிருப்புக்கள் கிரவல் மண் நிறைந்த பகுதிகளாக தோற்றமளிக்கின்றன. வயல் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் அக்கராயன் குளத்தை அண்டிய பகுதியில் காடுகள் பெரியளவில் அழிக்கப்பட்டுக் கிரவல் மண்ணை அகழும் வேலைகள் இடம்பெறுகின்றன.

**கிரவல் மண்ணினால் மக்களின் வாழ்விடங்களும், வயல் நிலங்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. குடியிருப்புக்கள் கிரவல் மண் நிறைந்த பகுதிகளாக தோற்றமளிக்கின்றன.**

இதேபோன்று அக்கராயன் திருமுறிகண்டி வீதியிலுள்ள நாலாம் கட்டைப் பகுதியிலும் வீதியின் இரு மருங்கிலுமுள்ள காடுகள் அழிக்கப்பட்டுக் கிரவல் மண்ணை அகழும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் துணுக்காய் செல்லும் வீதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கிரவல் மண் அகழ்வு தொடர்பாகச் சிறந்த திட்டமிடல்கள் தேவையெனச் சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

# முருங்கனில் நாட்டுக் கூத்து

மன்னார், செப்.7

மன்னார் முருங்கன் தூய யாகப்பர் ஆலய சபையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தூய சில்வெஸ்திரியார் வாசாப்பு நாட்டுக்கூத்து முருங்கனில் நடத்தப்பட்டது. முருங்கன் பங்குத்தந்தை தலைமையில் இடம்பெற்ற இந்த நாட்டுக் கூத்து நாடகத்தை அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளாரின் தந்தையான முருங்கன் தூய யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அமரர் புலவர் சந்தான் பாவிலு எழுதி இருந்தார்.

குறித்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டார்.

அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆறு கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-12)

# கண்டாவளையில் 7,430 குடும்பங்கள் இதுவரையில் மீள்குடியமர்வு

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் 7 ஆயிரத்து 430 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 978 பேர் மீளக்குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 2 ஆயிரத்து 286 குடும்பங்களுக்கு விவசாயச் செய்கைகளுக்கான வாழ்வாதார உதவிகளும் ஆயிரத்து 205 குடும்பங்களுக்கு வியாபார நடவடிக்கைகளுக்கான வாழ்வாதார உதவிகளும், 627 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற வாழ்வாதார உதவிகளும் 381 குடும்பங்களுக்கு மீன்பிடித் தொழிலுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட ஆயிரத்து 50 குடும்பங்கள் சொந்தக் காணிகள் இல்லாத நிலையில் உள்ளன. இந்தக் குடும்பங்களுக்கான வீட்டு வசதிகள் மற்றும் ஏனைய இதர வசதிகள் இதுவரை கிடைக்காத நிலையே காணப்படுகின்றது. காணியற்றவர்களுக்குக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# பாவற்குளம் அம்மனுக்கு சிறப்பான பொங்கல் விழா



நெடுங்கேணி, செப்.7

நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள பட்டிக்குடியிருப்புக் கிராம சேவகர் பிரிவில் அமைந்திருக்கும் பாவற்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்தின் பொங்கல் விழா சிறப்புடன் இடம்பெற்றுள்ளது.

ஆலயப் பூசகர் மு.வன்னியசிங்கம் தலைமையில் வெகு சிறப்பான முறையில் இந்தப் பொங்கல் விழா இடம்பெற்றுள்ளது.

1984 . ஆம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாக இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். போர் முடிவுக்கு வந்ததால் சுமார் 20 வருடங்களுக்குப் பின்னர் இவர்கள் தற்போது மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இந்தநிலையில் நீண்டகாலத்துக்குப் பின்னர் இந்த ஆலயத்தில் வெகு சிறப்பான முறையில் பொங்கல்விழா இடம்பெற்றுள்ளது.

கிராம மக்கள் தமது நீண்டகால நேர்த்திக் கடன்களை நிறைவு செய்யும் வகையில் காவடிகள், பாற்செம்புகள் ஏந்தியும் அங்கப்பிரதட்சணை செய்தும் அம்பாளின் அருளை வேண்டி நின்றமையை அவதானிக்க முடிந்தது.

இங்கு பூசைகள் வெகு சிறப்பாக இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)



வவுனியா மாவட்ட ஆங்கிலச் சங்கம் நடத்திய ஓயாசிஸ் ஆங்கில இறுவட்டு வெளியீட்டு விழாவின்போது முன்னாள் ஆங்கில பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பூபாலசிங்கம் மங்கல விளக்கை ஏற்றி வைக்கின்றார். (க-421)

### அதிகாரிகள் எப்போது வருவார்களோ...?

# திறக்கப்படாது காத்திருக்கும் பூநகரி பொதுநூலகக் கட்டடம்

பூநகரிப் பிரதேசத்தில் நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள பொது நூலகம் திறக்கப்படாமல் மூடிய நிலையிலுள்ளதால் கவலை தெரிவித்துள்ள வாசகர்கள் நூலகத்தை விரைவாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பூநகரிப் பிரதேசத்திலுள்ள வாடியடிப் பகுதியில் அமைந்திருந்த பிரதேச [illegible] ஆகியனஇயங்க முடியாத வாறு சேதத்துக்குள்ளாகியிருந்தன.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டதை அடுத்து பிரதேச சபைக் கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டு இயங்கி வருகின்றது. பொது நூலகம் அருகிலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டடத்தில் வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருகிறது.

வாசகர்களின் நலன் கருதிப் பிரதேச சபைக் கட்டடத்துக்கு அருகில் நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன்பல லட்சம் ரூபா செலவில் பொது நூலகம் கட்டப்பட்[illegible] நிலையில் இருந்தபோதும் கட்டடம் திறக்கப்படாமல் மூடியிருப்பது வாசகர்களுக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அதிகாரிகளின் வருகையை எதிர்பார்த்திருக்காமல் வாசகர்களின் நலன் கருதி நூல் நிலையத்தைத் திறந்து வைக்குமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். இதே வேளை ஜெயபுரம் உப அலுவலகத்துக்கு அருகில் சிறு கொட்டிலில் இயங்கிவரும் பொது நூலகமும் விரைவில் புதிதாகக் கட்டப்படவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை பிரதேச சபைத் தலைவர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

# சித்திரம், விவாத போட்டிகள்

கிளிநொச்சி, செப்.7

டயலொக் தொலைத்தொடர்பு நிறுவனமும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் சித்திரப் போட்டி, விவாதப் போட்டி என்பனவற்றை நடத்தவுள்ளன.

இதில் பங்குபற்ற இருக்கும் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் நாளை துணுக்காய் கல்வி வலயத்துக்குப் பெயர், விவரங்களை அனுப்பி வைக்குமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

சித்திரப் போட்டி பிரிவு 1 தொடக்கம் பிரிவு 5 வரை நடைபெறவுள்ளது.

பனை மரத்தோற்றம், சமயப் பண்டிகை நிகழ்வு, மட்பாண்டங்கள் செய்தல், தகவல் தொடர்பாடலினால் ஏற்படும் நன்மை என்பனவற்றை உள்ளடக்கியதாக சித்திரம் வரைதல் வேண்டும்.

விவாதப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் போட்டி விதிமுறைகளை நேரடியாகத் துணுக்காய் கல்வி வலயத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேசசபை, கைதடி பொது நூலகர் மகேஸ்வரனின் அன்புத்தந்தை

## வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர் உத்தியோகத்தர்கள்,
சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர் நலன்புரிசங்கம்.

(சி/3135)(8.14)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் தம்பிராசா



நாயன்மார் கட்டு, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தம்பிராசா நேற்று (06.09.2012) வியாழக்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் இராசபூபதியின் அன்புக் கணவரும், செல்வச்சந்திரன், பிரபாசங்கர், காலஞ்சென்ற சதீஸ் சந்திரன் மற்றும் வாசுகி, சுதாகர் (கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், உதமதாசன், வசந்தாதேவி, பகீரதாசன் ஆகியோரின் அன்பு மாமனும், அஜயந்தன் (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), கஜந்தினி, துசாந்தினி, பகீரதன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பசுபதி, சதாசிவம், வண்ணமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் பூபதி, மங்களம், சிவஞானம், சிவலிங்கம், லீலாவதி, திலகவதி, சிவகுமார், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2012) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணிக்கு செம்மனி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாரதி வீதி,
நாயன்மார் கட்டு. (22603)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்) நேற்று (06.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற ராஜா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கனகசபாபதியின் சகோதரனும், மகேஸ்வரன் (சாவகச்சேரி பிரதேச சபை, கைதடி, பொது நூலகம்), மங்களேஸ்வரி (ஆசிரியை, கோப்பாய் மகாவித்தியாலயம், மைதிலி (ஆசிரியை மட்டுவில் தெற்கு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை), பேல்நம்பி, வாணிஸ்ரீ, ஜனார்த்தனன் (தென்மராட்சி கிழக்கு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்), துவாரகா (மருத்துவமாது -மீசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபத்திரா (வலி தென்மேற்கு பிரதேச சபை ஆனைக்கோட்டை பொது நூலக நூலகர்), நந்தகுமார், ஈஸ்வரன், விக்கேஸ்வரன், சுரேந்தினி (ஆசிரியை தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விடத்தற்பளை,
மிருசுவில். (சி/3134)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பயிலும் முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட பயில்நிலை, புகுமுக மாணவர்கள் அனைவரையும்கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## அம்பலவன்பொக்கணையில் மக்கள் இன்று மீள்குடியமர்வு

வவுனியா, செப்.7

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அம்பலவன்பொக்கனை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் இன்று தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர்.

இறுதிக் கட்டப் போரின்போது இடம் பெயர்ந்து மெனிக்பாம் பகுதியிலுள்ள ஆனந்தகுமாரசாமி, கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த சுமார் 127 குடும்பங்களைச் சேர்ந்த 459 பேரே இவ்வாறு தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்தப்படவுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் நேற்றைய தினம் நலன்புரி நிலையங்களிலிருந்து அவர்களுடைய உடைமைகளுடன் அழைத்து வரப்பட்டு இரணைப்பாலை மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு மீளக்குடியமர்வதற்கான பதிவுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணங்கள் என்பன வழங்கப்பட்டன. இவர்கள் அனைவரும் இன்று தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தைச் சேர்ந்த மக்கள் நாளை தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்காக அழைத்து வரப்படவுள்ளனர்.

அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(க-400)

## மோசடி வர்த்தகர்கள் செலுத்தினர் தண்டம்

கிளிநொச்சி, செப்.7

கிளிநொச்சியில் அதிகூடிய விலையில் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் பலர் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரிடம் மாட்டிக் கொண்டதுடன் தண்டமும் செலுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி நகரம் மற்றும் உமையாள் புரம், பரந்தன் ஆகிய பகுதிகளில் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கைகளின் போது அரிசி விலையைக் காட்சிப்படுத்தாமல் அதனை விற்பனை செய்த நான்கு வர்த்தகர் களுக்குத் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

(க-6)

## தேசிய அறுவடை விழா

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் தேசிய பயிர் உற்பத்தி திட்டத்தின் முதலாவது தேசிய அறுவடை விழா மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பழுகாமத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஹரிகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எம்.சார்ள்ஸ், விவசாய திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எம்.எஸ்.ஹுசைன், உட்பட அதிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் மறுவயல் உற்பத்தி பொருள்களான சோளம், வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவுப் பயிர்களின் வெளிநாட்டு இறக்குமதியை நிறுத்தி உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கும் வகையில் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(16)

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட மீசாலை கிழக்கு பிரிவு குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி துவாரகா விக்னேஸ்வரன் அவர்களின் பாசமிகு தந்தையார் **இ.வே. கணபதிப்பிள்ளை**

நேற்று (06.09.2012) இறைவனடி சேர்ந்தார் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் பிரார்திக் கின்றோம்.

சு.வை.அ. பணிமனை,
சாவகச்சேரி (சி/3132)(8.14)

சுகாதார வைத்திய அதிகாரியும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்

# கண்ணீர் அஞ்சலி

கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக் களத்தினால் கடற்தொழில் பரிசோதகராக பணிபுரியும் எமது சக உத்தியோகத்தர் தம்பிராஜா சுதாகர் அவர்களின் அன்புத்தந்தை

## மாணிக்கம் தம்பிராசா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

(22600)(8.14)
யாழ்ப்பாணம்.

கடற்தொழில் நீரியல் வளத்துறை,
திணைக்கள உத்தியோகத்தர்கள்

# கண்ணீர் அஞ்சலி



கடந்த 05.09.2012 புதன்கிழமை இறைபதமடைந்த

## நல்லதம்பி மகாராசா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பிள்ளையார்வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.

அயலவர்கள்.

# மரண அறிவித்தல்

## செல்லையா கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)



பூநகரியைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், தெஹிவளையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கொண்ட செல்லையா கனகரத்தினம் நேற்று (06.09. 2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருதிருமதி செல்லையா- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கனகரட்ணம்- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குணமணியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரி, காயத்திரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன் (ஆசிரியர், றோயல் கல்லூரி), ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஜனகன் (றோயல் கல்லூரி 8D வகுப்பு மாணவன்), விஸ்ணவி, சஜீவ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான திருதிருமதி செல்லத்துரை, திரு திருமதி செல்வநாயகம், திருதிருமதி தருமலிங்கம் மற்றும் நவரத்தினம், இரத்தினம், மதியாபரணம் ஆகியோரின் சகோதரனும் சோதிமணியின் மைத்துனரும், பாலசிங்கத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.09.2012) வெள்ளிக் கிழமை காலை 7 மணி முதல் அஞ்சலிக்காக காலி வீதி கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பி.ப. 3.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11, 4/6, இனிசியம் றோட்,
தெகிவளை. (சி/3219)(3.14)

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### அருணாசலம் அகிலதாஸ்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி வரலாற்றில் மைல்க்கல்லாகத் திகழ்ந்து பல்வேறு சாதனைகளை நிலை நாட்டி கல்லூரியின் புகழ் பூத்த அதிபராக விளங்கிய உயர்திரு அருணாசலம் அகிலதாஸ் அவர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (மாணவர் அபிவிருத்தி) பதவி உயர்வு பெற்றமையை இட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.
(சி/3131)(3.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### அ.அகிலதாஸ்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி இப்பொழுது தென்மராட்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக (மாணவர் அபிவிருத்தி) பதவியுயர்த்தப்பட்ட அ. அகிலதாஸ் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.
(சி/3131)(3.14)

## வாகனம் விற்பனைக்கு

யப்பான் கெண்டர்ரக mazda-2006 model பவர் ஸ்ரேரிங் வெள்ளை நிற வாகனம் (PS-xxxx) உடன் விற்பனைக்குண்டு.
T.P: 0776228287
(22596)(3.14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.



தோற்றம் 26✱02✱1976 — மறைவு 08✱08✱2012

### மரியதாஸ் நேவீஸ் டெல்றொக்சன்

கடந்த (08.08.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த மரியதாஸ் நேவீஸ் டெல்றொக்சன் அவர்களது 31 ஆம் நாள் நினைவு நாளான (07.09.2012) வெள்ளிக்கிழமை இன்றைய தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் இறுதிச் சடங்கு நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

29/2, செபஸ்ரியன் வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
(22599)(3.14)

## காணிவிற்பனைக்கு

நாவற்குழியில், A9 வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில், கிறிஸ்தவ ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக $10\frac{3}{4}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773024293
(22589)(3.14.6)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Discover- 125 மோட்டார் வாகனம் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:- 0775691263
(22592)(3.8.14)

After O/L or A/L புதிய பிரிவுகள்,
(Per Course 2000 Rs Discount + 9 Free)
கணினி கம்பஸ் கல்வியங்காட்டில்
ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு
9 Diploma Course fee Free
ஆரம்பத்தில் இருந்து கற்கலாம்
பூரண அறிவிற்கான உத்தரவாதம்.
Ms office, Hardware, Networking DTP, Accounting, Multimedia, Web Design, English, Singalam
Engineering-USA
MCSE, MCP, MCTS, MCITP
USA Authorized Training Partner & Testing Centre in JAFFNA
கணனிப் பொறியியலாளர் கற்கைநெறி.
Microsoft-USA வழங்கும் சான்றிதழ்,
வருமானம் கூடிய வேலை வாய்ப்புக்கள்
இலங்கை அரசாங்கம் ICTA ஊடாக வழங்கும் 60$ Scholorship
MTA Exam Fee 55
மேலதிக விபரங்களுக்கு
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243,Adiyapatham Road
Qualified Lectures panel, 12 Years Experience Facebook : MCAI CAMPUS

## மரண அறிவித்தல்

### செல்வி. மதிவதனா கைலாசசுந்தரம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி.மதிவதனா கைலாசசுந்தரம் நேற்று (06.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கைலாசசுந்தரம் - சிவஞானவதி தம்பதியரின் அன்பு மகளும் நாகேந்திரன் (லண்டன்), சந்திரவதனி காலஞ்சென்ற ரஞ்சிதபவானி ஆகியோரின் சகோதரியும், அருள்ஞானசுந்தரம் (கனடா), நடேசலிங்கம், சத்தியபாமா (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ரமணனின் (கனடா) பெரியதாயும், துளசியின் (லண்டன்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு.
தகவல்: குடும்பத்தினர்.
(22597)(3.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் கதிர்காமநாதன் சுரேஸ்குமா கடந்த (03.09.2012) திங்கட்கிழமை கனடாவில் அகால மரணமான செய்தி கேட்டு ஆறாத்துயர் கொள்வதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். நண்பர்கள்
(22573) (4.5.6.7)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தர்மராஜன்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அஞ்சல் அத்தியட்சகர் சின்னத்தம்பி தர்மராஜன் நேற்று (06.09.2012) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக்கணவரும், Dr. ஆனந்தி (பிரதேச வைத்திய சாலை, அச்சுவேலி), Dr.வினோதன் (வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்திய சாலை, பருத்தித் துறை), ஜெயந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr. தில்லையம்பலராஜா, Dr.நிவேதினி (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), புவிராஜ் (வலய முகாமையாளர் HNB Assurance) ஆகியோரின் மாமனும், கோபிசாந், தோகன்யா, யுகராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், புவனேஸ்வரி (மட்டக்களப்பு), புவேந்திரராஜா (கொழும்பு), காலஞ்சென்ற இந்திராணி மற்றும் செல்வராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற அரசேந்திரன் மற்றும் இராசேந்திரன் (மட்டக்களப்பு), செல்வமணி (கொழும்பு), ஸ்ரீஸ்கந்தராஜா (வத்தளை), அனுஷியா (கொழும்பு) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2012) பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாக்கி வில்லா கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (22598)(8.14)
தகவல்: Dr.வினோதன் (மகன்).

## ஸ்கந்தாவின் நன்றிப் பெருவிழா

### எங்கள் இனிய அதிபர் கலாநிதி ஆறுதிருமுருகன்



தலைமை : திருமிகு .க. சிவாஜி அவர்கள் (ஓய்வு நிலை அதிபர்)
காலம் : நாளை [08.09.2012] சனிக்கிழமை பிற்பகல் 1 மணி
இடம் : ஒரேற்றர் சுப்பிரமணியம் அரங்கு பிற்பகல் 1.00 மணிக்கு விழாநாயகரை அழைத்துவருதல்
ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் [நல்லை ஆதீனம்]
வரவேற்புரை : லயன் சி. கஜன் அவர்கள் [அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் பிரதேச செயலகம் காரைநகர்]
தலைமையுரை : திருமிகு க. சிவாஜி அவர்கள் [ஓய்வு நிலை அதிபர் -ஸ்கந்தா]
வாழ்த்துரைகள்:
இ. ஈஸ்வரதாசன் அவர்கள் [முதல்வர் - ஸ்கந்த வரோதயக் கல்லூரி]
சு .அருமைநாயகம் அவர்கள் [அரச அதிபர் - யாழ். மாவட்டம்]
கே. மகாலிங்கம் அவர்கள் [பிரதித்தூதுவர் - இந்தியத்தூதுவராலயம் , யாழ்]
ப. விக்னேஸ்வரன் அவர்கள் [பிரதிச் செயலாளர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்]
பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் [யாழ். பல்கலைக்கழகம்]
திருமதி ஜெ. இருதயநாதன் அவர்கள் [ஓய்வு நிலை வலயக்கல்விப்பணிப்பாளர்]
சு. பரமநாதன் அவர்கள் [தலைவர் - ஸ்கந்தா பழையமாணவர் தாய்ச்சங்கம்]
நன்றியுரை :
லயன் சி. ஹரிகரன் அவர்கள் [செயலாளர் - விழாக்குழு, உறுப்பினர் - வலி - வடக்கு பிரதேசசபை]
விழா நாயகர் கௌரவிப்பு
ஏற்புரை : கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள்
ஸ்கந்தா மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறும்.
ஸ்கந்தாச்சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையில் மக்களின் வீடுகளை படையினர் விரைவில் விடுவிப்பர்

## ஊரிக்காட்டில் புதிய படைமுகாம்

வடமராட்சி, செப்.7

ஊரிக்காட்டில் படைமுகாம் அமைக்கப்பட்டு படையினர் அங்கு சென்றதும் வல்வெட்டித்துறையில் படையினர் வசமுள்ள பொதுமக்களது வீடுகள் விடுவிக்கப்படும் என்று பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வல்வெட்டித்துறை நகரில் பொது மக்களின் 25 வீடுகளில் படையினர் குடிகொண்டுள்ளார்கள். அந்த வீடுகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு குடியிருப்பாளர்கள் கோரி வருவதாக அந்தப் பகுதிக்கான கிராம சேவையாளர் அங்கு குறிப்பிட்டார்.

இதன் போது மாற்று இடங்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் இடம் கிடைத்ததும் வீடுகளை விட்டு நாம் வெளியேறிவிடுவோம் என அங்கு பிரசன்னமாக இருந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

ஊரிக்காட்டில் இருந்த படைமுகாம் காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. காணிக்காரருக்குரிய நஷ்டஈடு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதற்கான நிதி திறைசேரியிலிருந்து கிடைத்ததும் குறித்த காணி சுவீகரிக்கப்பட்டதும் படையினர் பொது மக்களின் குடியிருப்புகளிலிருந்து வெளியேறுவார்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதே போல் பருத்தித்துறை நகரில் துறைமுகத்தை அண்டிய பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களின்வீடுகளையும் தபால் நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் ஆகியவற்றையும் மீள ஒப்படைக்கவும், துறைமுகவீதியையும் திறந்துவிட வேண்டும் என சபையோரால் கேட்கப்பட்டது.

இதற்கும் அதே பதில் தான் என இராணுவ அதிகாரி தெரிவித்தார். அதாவது பொருத்தமான இடம் கிடைத்ததும் இராணுவத்தினர் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறிவிடுவார்கள் என்பதாகும்.

பருத்தித்துறை பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்தப் பிரதேசத்தில் குற்றச் செயல்கள் வெகுவாக குறைந்துவிட்டன. ஆனால் இரவில் மதுபானம் பாவிப்போரின் தொல்லைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்த உரிய தகவல்களைத் தந்துதவினால் நடவடிக்கைகளை எடுப்போம் எனத் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனின் வழிகாட்டலுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உதவி திட்டப்பணிப்பாளர் திருமதி தபேந்திரா ஜெயராஜா, பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.ரவீந்திரன், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் மற்றும் இந்த சபைகளைச் சேர்ந்த ஆளும், எதிர்தரப்பு உறுப்பினர்கள், பிரதேச இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ம-8)

# சந்நிதி திருவிழாவிலும் திருட்டு இடம்பெறவில்லை

வடமராட்சி, செப்.7

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் பெருந் திருவிழாவில் எந்த விதமான திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறவில்லை.

இதற்குப் பொலிஸாரின் சிறப்பான பணிகளே காரணம் என்று பருத்தித் துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் , வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் ஆகியோர் தனித் தனியே இந்தப் பாராட்டுக்களைத் தெரிவித்தனர். வல்லிபுரக் கோவில் பெருந் திருவிழாவிலும் பொலிஸார் இந்தப் பணியை மேற்கொண்டு திருட்டுக்கள், அசம்பாவிதங்கள் ஏற்படாமல் பாது காத்துக் கொள்ள வேண்டும் என பிரதேச செயலாளர் பருத்தித்துறை பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**வல்லிபுரக் கோவில் பெருந் திருவிழாவிலும் பொலிஸார் இந்தப் பணியை மேற்கொண்டு திருட்டுக்கள், அசம்பாவிதங்கள் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்**

வல்லிபுரக் கோவில் பெருந் திருவிழாக் காலத் தில் உரிய பாதுகாப்பு ஒழுங்கு தயாராக இருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நல்லூர்க் கந்தன் உற்சவத்திலும் இம்முறை திருட்டுக்கள் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-8)

# பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு விரைவில் ஆலோசனைச் சபை

யாழ்ப்பாணம், செப்.7

கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலையத்துக்கு ஆலோசனைச் சபை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் ஆராய்ச்சிப் பணிகள் தொடர் பான திட்டங்களை இந்த ஆலோசனைச் சபையின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வியியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்கள், பனை சார்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இந்த ஆலோசனைச் சபை அமைக்கப்படவுள்ளது. ஆராய்ச்சி நிலையத்தின் பணிகள் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காகவே இந்தச் சபை அமைக்கப்படவுள்ளது. (த-17)

# சுகாதார நடைமுறைக்கு அமைய செயற்படாமையால் அபராதம்

அளவெட்டி, செப். 07

சுகாதார நடைமுறைக்கு அமைவாகச் செயற்படாத ஐஸ்கிறீம் கடை ஒன்றின் உரிமையாளருக்கு மல்லாகம் நீதிமன்றால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் திருவிழாக்காலத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த ஐஸ்கிறீம் கடைகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை செய்த போது சுகாதார நடைமுறைக்கு அமைவாக செயற்படாமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து குறித்த கடை உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம- 36)

# விளையாட்டாக மூட்டிய தீ விபரீதத்தில் முடிந்தது

## எரிகாயங்களுக்கு ஆளானவர் கவலை

அளவெட்டி,செப்.7

*மனைவியுடன் ஏற்பட்ட சிறு தகராறு காரணமாக நான் காட்டிய விளையாட்டு விபரீதத்துக்குள் என்னைக் கொண்டு சென்றது.*

*இவ்வாறு எரிகாயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள விஜயகுமார் (வயது-36) என்பவர் கவலை தெரிவித்தார்.*

*இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*குடும்பத் தகராறு இவ்வளவு விபரீதத்தை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை.*

*என் மனைவியுடன் ஏற்பட்ட சிறு தகராறு காரணமாக எனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி விளையாட்டாகப் பற்ற வைத்தேன். இரண்டு தடவைகள் தீக்குச்சியைத் தட்டிப் பாசாங்கு காட்டினேன்.*

*மூன்றாவது தடவை தீக்குச்சியைத் தட்டிப் போட்டபோது நிலத்தில் ஊறிய மண்ணெண்ணெயில் தீ பிடித்து என்னையும் பற்றிக் கொண்டது.*

*தண்ணீரை அள்ளி ஊற்றினேன் முடியவில்லை. மேலும் தீ பற்றியது. எனது அவலக்குரல் கேட்டு, ஓடிவந்த அயலவர்கள் தீயை அணைத்தனர் என்று கவலையுடன் கூறினார்.* (ம-36)

# காரைநகர்—ஊர்காவற்றுறை கடற்பாதைச் சேவை நிறுத்தம்

## திருத்தப்பணி மேற்கொள்வதற்காக

யாழ்ப்பாணம். செப். 7

காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வரும் கடற்பாதைச் சேவை நேற்று வியாழக்கிழமை முதல் நான்கு நாள்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது.

பழுதடைந்துள்ள இந்த கடற்பாதையைத் திருத்தியமைப்பதற்காக நான்கு நாள்கள் சேவை இடம்பெற மாட்டாது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் .

கடற்பாதைச்சேவை நிறுத்தப்பட்டுள்ளதையடுத்து காரைநகர் ஊர்காவற்றுறை இடையே படகுச் சேவையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.

(த- 17)

# மோ.சைக்கிளில் வந்த 'காவாலிகள்' அறுத்துச் சென்றனர் சங்கிலியை

வலி.வடக்கு, செப்.7

வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணின் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சுன்னாகம் காளி கோயில் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் நின்று கதைத்துக் கொண்டிருந்த காவாலிகள் அந்த வீதியால் வந்த பெண்ணின் சங்கிலியை அபகரித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடியுள்ளனர். இந்த விடயம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.(ம-86)

# நாய்க்கடிக்கு ஆளாகிய நிலையில் ஓகஸ்டில் மட்டும் 93 பேர் சிகிச்சை

அளவெட்டி, செப். 07

நாய்க்கடிக்கு ஆளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 93 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதியில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களே இவர்களைக் கடித்துள்ளன.

இவர்களில் 73 பேருக்கு விசர்நாய்க்கடி தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

நாய்க்கடிக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அண் மைக் காலமாக அதிகரித் துக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

(ம-36)

# பளை பஸ் நிலையத்தை பயன்படுத்த வழிமுறை

வலி.தென்மேற்கு,செப்.7

மக்களால் பயன்படுத்தப்படாமல் கால்நடைகளின் தங்குமிடமாக மாறிவரும் பளை பஸ் நிலையத்தை பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுத்துள்ள பிரதேச சபையினர் பஸ் நிலையத்துக்கு முன்பாக தனியார் நிறுவனம் ஒன்றால் ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்புக் குடையை வேறிடத்துக்கு மாற்றுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

பளை பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் நன்மை கருதி சுமார் 50 லட்சம் ரூபா செலவில் பஸ் நிலையம் அமைக்கப்பட்டது.

ஆனால் இரு மாதங்களுக்கு மேலாகியும் இந்த பஸ் நிலையத்துக்கு பஸ்கள் செல்வதில்லை.

இதனால் பஸ் நிலையம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. ஏ-9வீதியால்செல்லும்அனைத்து பஸ்களும் வீதி யில் நின்றே பயணிகளை ஏற்றுகின்றன.

இதைக் கருத்தில் கொண்ட பிரதேச சபையினர் பஸ் நிலையத்தை மக்கள் பயன்படுத்துவதற்காக ஏ-9 வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பு குடையை வேறிடத்துக்கு மாற்றுவதற்கு முன்வந்துள்ளனர்.

இதேவேளை, பஸ் நிலையக் கட்டடத்தில் அமைந்துள்ள இரு கடைகளையும் குத்தகைக்கு வழங்கி இயங்க வைப்பதற்கும் பஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள வீதி [illegible] புனரமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-115)

# தார் இன்றி நிறுத்தப்பட்ட வீதி திருத்தப்பணி ஆரம்பம்

வடமராட்சி, செப்.7

தார் இன்றி இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, நெற்கொழு மற்றும் பொலிகண்டி குடியேற்றம் ஆகிய பகுதிகளில் வீதிகள் அமைக்கும் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வீதிகள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் தார் கிடைக்காத காரணத்தால் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட தார் [illegible] வல்வெட்டித்துறை நகரசபைக்கு வந்து சேர்ந்துள்ளதால் உடனடியாக இடைநிறுத்தப்பட்டிருந்த வீதிவேலைகளை ஆரம்பிக்குமாறு நகர சபைத் தலைவர் ந.ஆனந்தராஜ் பணித்துள்ளார்.

**இந்த வீதிகள் அமைக் கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் தார் கிடைக்காத காரணத்தால் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.**

அத்துடன் உரிய காலத்துக்குள் இந்த வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறு ஒப்பந்தகாரர்களை அவர் கேட்டுள்ளார்.

நகரசபை நிதியில் இருந்தும், நெல்சிப் திட்டத்தின் கீழும் வீதிகள் புதிதாக அமைத்தல், புனரமைத்தல் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக சபை நிதியில் இருந்து மயிலியதனை மயானத்துக் கான முகப்பு சுற்று மதில் அமைத்தல், வாடி ஒழுங்கை வடிகால் அமைத் தல் மற்றும் பொலிகண்டி குடியேற்ற குறுக்கு வீதி அமைத்தல் ஆகியவற்றுக்கான வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரையில் சிங்களவர் பணிபுரியும் விடுதி ம.தி.மு.கவினரால் முற்றுகை

மதுரையில் தனியார் விடுதியை முற்றுகையிட்ட ம.தி.மு.க.வினர் 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

மதுரை கோச்சடை பகுதியில் பிரபல தனியார் விடுதி உள்ளது. இந்த விடுதியில் இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீநித் டி சில்வா பொது மேலாளராகவும், தலைமைச் சமையலராக முரைஷ் என்பவர் உட்பட 16 பேர் பணி புரிந்து வருகிறார்கள்.

அவர்களை உடனடியாக இலங்கைக்கு அனுப்பக் கோரி ம.தி.மு.க. மாநில தொண்டரணி செயலாளர் பாஸ்கர சேதுபதி தலைமையில் 15 பேர் நேற்று முன்தினம் காலை அந்த விடுதியை முற்றுகையிட்டனர். அப்போது இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பினார்கள்.



முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட ம.தி.மு.க. வினர் 15 பேரை பொலிஸார் கைது செய்து வானில் ஏற்றினர்.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்றனர்.

விடுதிக்குள் நுழைய முயன்ற ம.தி.மு.க.வினரை பொலிஸார் தடுத்தனர். அப்போது பொலிஸாருக்கும் ம.தி.மு.கவினருக்கும் இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட ம.தி.மு.க.வினர் 15 பேரை பொலிஸார் கைது செய்து வானில் ஏற்றினர். அதையடுத்து அந்த விடுதிக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மதுரையில் நேற்று முன்தினம் சிங்களவர்களுக்கு எதிராக நடைபெற்ற இந்த முற்றுகைப் போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (வ)

# செலவைக் கட்டுப்படுத்தவும் மன்மோகனுக்கு உத்தரவு



டில்லி, செப்.7

தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொள்ளுமாறு காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன்சிங்குக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மகாத்மா காந்தி, நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா, ராஜீவ் போன்ற, மறைந்த தலைவர்களது பிறந்தநாள் மற்றும் நினைவு தினங்களை யொட்டி, அரசு சார்பில் செய்யப்படும் பிரம்மாண்டமான விளம்பரங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆடம்பரமான முறையில் விளம்பரங்கள் செய்து, அரசுக்குத் தேவையற்ற செலவுகளை ஏற்படுத் துவதற்கு பதிலாக, மறைந்த தலைவர்கள் மீது, மரியாதை வைத்துள்ளவர்கள் பங்கேற்றால் அதுவே போதும். முடிந்தவரையில், பொதுமக்களுக்கு எந்தவிதமான இடர்பாடுகளும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (வ)

## மேற்கு வங்கத்தில் ஆயுள் கைதிகள் 17 பேர் விடுதலை

மேற்கு வங்க மாநில சிறைகளில்தண்டனைபெற்றுவரும் ஆயுள் தண்டனைக் கைதிகள் சுமார்17 பேரை விடுவித்து முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு மேற்கு வங்க மாநிலத்தில் மம்தா பானர்ஜி அரசு பொறுப்பேற்றது தொடக்கம் 57 அரசியல் கைதிகள் மற்றும் 66 ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இந்தநிலையில் தற்போது மேலும் 17 ஆயுள் கைதிகள் விடுவிக்கப்படப் போவதாக மம்தா அறிவித்துள்ளார். இதன்படி விடுதலை செய்யப்படும் கைதிகளின் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்துள்ளது.



ஆசிரியர் தினத்தையொட்டி, மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் நடந்த விழாவில் ஆசிரியர் ஒருவருக்கு விருது வழங்குகிறார் முதல்வர் மம்தா பானர்ஜி. (வ)

## ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு:
# சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வார் முன்னாள் அமைச்சர்



டில்லி, செப்.7

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் சாட்சியான ஸ்ரீவத்சாவை முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஆ. ராசா குறுக்கு விசாரணை செய்ய டில்லி சிறப்பு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

தொலைத்தொடர்புத் துறையில் துணை இயக்குநராகவும் ராசாவின் செயலராகவும் பணியாற்றியவர் ஏ.கே.ஸ்ரீவத்சவா. இவரிடம் ஸ்வான் தொலைத்தொடர் நிறுவனத்தின் ஷாகித் பல்வா தரப்பு குறுக்கு விசாரணை செய்தது முடிவடைந்த நிலையில் தம்மை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கக் கோரி ஆ.ராசா நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

தம்மை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கக் கோரி ஆ.ராசா நேற்று மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீது நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது ஆ.ராசா, ஸ்ரீவத்சாவை குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் தேவை என்றும் தமது வழக்கறிஞர் சுஷில்குமார் இந்த வாரம் நீதிமன்றத்துக்கு வர இயலாத நிலை இருப்பதாகவும் கூறினார்.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஸ்ரீவத்சாவிடம் குறுக்கு விசாரணை செய்யலாம் என்று நீதிமன்றம் தெரிவித்தது. (வ)

# சோலர் ரிக்ஷாவை உருவாக்கி தமிழக இளைஞர் சாதனை



*சூரிய சக்தி மூலம் இயங்கும் சோலர் ரிக்ஷா ஒன்றை தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.*

*திருப்பூரைச் சேர்ந்த சிவராஜ் முத்துராமன் எம்.பி.ஏ (வயது 26) என்ற மாணவர் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத புதிய ஓட்டோ ரிக்ஷாவை வடிவமைத்துள்ளார்.*

*'ஈக்கோ ப்ரீ கேப்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ரிக்ஷாவில் 3 பேர் வரை பயணம் செய்யலாம்.*

*மூன்று மணித்தியாலம் மின்னேற்றம் செய்தால் 45 மைல் வேகத்தில் 150 கி.மீ. வரை இந்த சோலர் ரிக்ஷாவில் பயணம் செய்யலாம்.*

*சூரிய மின்சக்தி தீர்ந்து விட்டால் கூட சைக்கிளை ஓட்டுவது போன்று 'பெடலிங்' செய்து ஓட்ட முடியும் என்பது இந்த ரிக்ஷாவின் மிகச்சிறப்பு ஆகும்.*

*இதுகுறித்து சிவராஜ் கூறுகையில், இந்த சோலர் ரிக்ஷாவை தயாரிக்க 3 ஆண்டுகள் ஆகின. முதலில் பல தொழில்நுட்பக் குறைபாடுகள் இருந்தன.*

*பின்னர் அவற்றையெல்லாம் சரி செய்து தற்போது இதற்கான தொழில் நுட்பத்தை உருவாக்கிவிட்டேன். வணிக ரீதியில் அறிமுகம் செய்ய வேண்டுமானால் 80 ஆயிரம் ரூபாயில் விற்பனைக்கு கொண்டு வரலாம்-என்றார். (வ)*

# பட்டாசுத் தொழிற்சாலை வெடிவிபத்தில் 7 பேர் கைது

சிவகாசியில் உள்ள பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வெடிவிபத்து தொடர்பில் இதுவரையில் 7 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தொழிற் சாலையின் பணிப்பாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்கள் மீது கொலைமுயற்சி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெடிப்புச் சம்பவத்தில் 56 பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சிவகாசியில்700 இற்கும் அதிகமான பட்டாசுத் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

இந்தியாவின் 90 சதவீதமான பட்டாசு வெடி பொருள்கள், இந்த தொழிற்சாலைகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

# தமிழகம் வரும் சிங்களவரைத் தாக்கக் கூடாது

## தமிழருவி மணியன் கருத்து

சென்னை, செப்.7

தமிழகம் வரும் அப்பாவி சிங்கள மக்களைத் தாக்கக் கூடாது என்று காந்திய மக்கள் இயக்கத்தின் தலைவர் தமிழருவி மணியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டின் வழிபாட்டுத் தலங்களில் வழிபடுவதற்காக வந்த சிங்களவர் மீது நடத்த முயன்ற தாக்குதல் எந்த வகையிலும் நாகரிக சமுதாயத்தின் நல் அடையாளம் இல்லை.

இலங்கை இராணுவத்



துக்கு இந்திய மண்ணில் பயிற்சி அளிப்பதை கடுமையாக எதிர்த்துப் போராடுவது வரவேற்புக்குரியது.

ஆனால், அப்பாவி சிங்களவர்களை தமிழ் மண்ணில் தாக்க முயல்வது தமிழ் இனம் காலம் காலமாக பராமரித்து வரும் பண்பாட்டுக்கு எதிரானது.

கண்ணுக்கு கண்; பல்லுக்கு பல் என்ற காட்டுமிராண்டித் தனத்தை கையில் எடுப்பது இந்த இனத்துக்கு பெருமை தராது. இது போன்ற தாக்குதல்கள் உலக சமுதாயத்தின் ஆதரவு, ஈழத் தமிழர்களுக்கு வந்து சேர்வதைக் கெடுக்கும்.

ஈழத்தமிழர்களுக்காக அரசியல் உரிமைகளை அடைய முயல்வது வேறு; அப்பாவிச் சிங்களவர்களை தமிழகத்து மண்ணில் தாக்குவதன் மூலம் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது என்பது வேறு.

இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள வேற்றுமையை இன உணர்வாளர்கள் புரிந்து கொண்டு செயற்படுவதுதான் ஈழத்திலும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களுக்கு நன்மை பயக்கும்-என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்.பி.ஐ. இரகசியங்கள் அம்பலம்

## இணையத் தரவுத் திருடர்கள் கைவரிசை

அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ. யில் பணிபுரியும் அதிகாரி ஒருவரின் லப்ரொப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த 1.23 கோடி அப்பிள் ஐபோன், ஐபேட் குறித்த இரகசிய விவரங்களைத் திருடி, 'அன்டிசெக்' என்ற குழு, இணையத்தளம் வெளியிட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்பட்டுள்ளது

அமெரிக்காவில் கடந்த செவ்வாய்க்கிழமை இணையத்தளத்தைத் திறந்து பார்த்தவர்களுக்கு, அதிர்ச்சி தரும் செய்தி காத்திருந்தது. ஹாக்கர்கள் எனப்படும் கணினியில் வைரஸைப் பரப்பி இணையத்தளங்களை முடக்குவது, தகவல்களை திருடுவது போன்ற வேலைகளை செய்யும் 'அன்டிசெக்' என்ற குழுவே, இந்தச் செயலில் ஈடுபட்டிருந்தது.

அமெரிக்க புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ.யின் கணினியில் இருந்து ஒரு கோடி 23 லட்சத்து 67,232 அப்பிள் ஐபோன் மற்றும் ஐபேட்களின் யூடிஐடி (யூனிக் டிவைஸ் ஐடென்டி பையர்ஸ்), அவற்றின் உரிமையாளர் பெயர், கருவியின் பெயர், அது எந்த வகையைச் சேர்ந்தது, அப்பிள் புஷ் நோட்டி பிகேசன் டோக்கன்ஸ், சிப்கோட், செல்போன் எண்கள், முகவரிகள் என சகலவித விவரங்களையும் திருடி இணையத் தளத்தில் வெளியிட்டுவிட்டார்கள்.

ஐபோன் மற்றும் ஐபேட் வைத்துள்ளவர்கள் அவசர, அவசரமாக தங்களுடைய விவரங்கள் இடம்பெற்றுள்ளனவா என்று இணையத் தளத்தில் சரிபார்த்தபோது, அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஏனெனில், கனகச்சிதமாக அனைத்து தகவல்களும் இடம்பெற்றிருந்தன. ஐபோனில் வாடிக்கையாளர்கள் என்னென்ன விவரங்களைப் பார்க்கிறார்கள், எவற்றைச் சேகரித்து வைத்துள்ளார்கள் போன்ற பல விவரங்கள் அதில் இடம் பெற்றிருந்ததால், பலரும் கவலை அடைந்தனர்.

இதனால் உடனடியாக இந்தச் செய்தி காட்டுத்தீ போல பலருக்கும் பரவியது. எப்.பி.ஐ. யில் பணியாற்றும் சிறப்பு கண்காணிப்பு முகவர் கிறிஸ் டோபர் கே ஸ்டாங்கி என்பவரின் டெல் லப்ரொப்பில் இருந்துதான் இந்தத் தகவல்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது. ஆனால், எப்.பி.ஐ. நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தங்களுடைய அதிகாரி ஒருவரின் லப்ரொப்பில்இருந்து 1.23 கோடி அப்பிள் ஐபோன், ஐபேட் விவரங்கள் திருடப்பட்டதாக வெளியான தகவல் முற்றிலும் தவறானதாகும். அப்படி எந்த திருட்டும் நடக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

## தேர்தல் வெற்றிப் பேரணியில் கனடாவில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் சாவு



கனடாவின் கியூபெக் மாகாணத்தில் இடம்பெற்ற சிறுபான்மைக் கிளர்ச்சியாளர்களின் தேர்தல் வெற்றிப் பேரணியின் போது இனம் தெரியாத நபர் ஒருவர் உள்ளே புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இதில் அந்த இடத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டதுடன் இன்னொருவர் காயமடைந்து உள்ளார்.

சுமார் 9 வருடங்கள் எதிர்க் கட்சியாகத் திகழ்ந்த இந்தக் கிளர்ச்சியாளர்களின் PQ எனப்படும் (Parti Quebecois) கட்சி இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் சிறுபான்மைக் குழுக்கள் அடங்கிய அரசை இவர்களால் அமைக்க முடிந்துள்ளது. இதைப் பிடிக்காத ஏதேனும் ஒரு குழுதான் இத்தாக்குதலை நிகழ்த்தியிருக்கக் கூடும் எனக் கூறப்படுகின்றது.

PQ கட்சியின் தலைவர் பௌலினே மரொயிஸ் மொன்ட்ரியலில் தனது வெற்றி உரையை ஆற்றிக் கொண்டிருந்த போதே மண்டபத்தின் பின்னால் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. உடனடியாக மேடையில் இருந்து இறக்கப்பட்ட இவர் பாதுகாப்பாக உரிய இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை துப்பாக்கிச் சூடு நிகழ்த்திய மர்ம நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் இந்த நபரை உரிய முறையில் விசாரிப்பதன் மூலமே இவனுக்குப் பின்னால் இருந்து செயற்பட்டவர் யார் என்று அறிய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 'நிர்வாண' ஹரியை கேலி செய்யும் 'காட்டூன் கேம்'



ஸ்டார் உல்லாச விடுதியில் இளம்பெண்களுடன் பிரிட்டன் இளவரசர் ஹரி உல்லாசமாக இருந்ததைக் கேலி செய்யும் விதத்தில் கார்ட்டூன் விளையாட்டு வெளியாகியுள்ளது.

பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் - மறைந்த டயானா தம்பதியின் இளைய மகன் ஹரி (வயது-27). விடுமுறையைக் கழிக்க சில வாரங்களுக்கு முன்பு அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகருக்குச் சென்றிருந்தார். அங்குள்ள ஸ்டார் விடுதியில் இளம்பெண்களுடன் ஜாலியாக இருந்தார். விடுதி அறையில் இளம் பெண்ணுடன் அவர் நிர்வாணமாக இருப்பது போன்ற படங்கள் பத்திரிகைகள், இணையத் தளங்களில் வெளியாகின. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## ஹிலாரி – சீன ஜனாதிபதி சந்திப்பு



*அரசியல் இராஜதந்திர ஒருங்கிணைப்பைப் பேணுவது தொடர்பாக சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ உடன் அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சரான ஹிலாரி கிளின்டன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.*

*இந்தச்சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை பீஜிங்கில் உள்ள பொது மக்களுக்கான மிகப் பெரிய மண்டபத்தில் நடைபெற்றது.*

*ஹிலாரி கிளின்டன் தனது பதவிக் காலத்தின் போது இதுவரை 7 தடவை சீனாவுக்கு பயணம் செய்துள்ளார். இதில் 4 தடவை சீனா அமெரிக்கா இடையே பொருளாதார மற்றும் இராஜதந்திர பரிமாற்றத்துக்காகவும் 3 தடவை பொதுமக்கள் பரிமாற்றத்துக்கான உயர்மட்ட கலந்துரையாடல்களுக்காகவும் சென்றிருந்தார்.*

*ஹிலாரி தற்போது மேற்கொண்டுள்ள இந்த பயணம் ஆசிய நாடுகளில் சீன அமெரிக்க உறவை வளர்ப்பது தொடர்பாக விவாதிக்கவும் மேலும் வடகொரியா, ஈரான், சிரிய விவகாரங்கள் ஆகியனவற்றில் கவனம் செலுத்தவும் பயன்படுத்தப்படும் என்று அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது.*

*இதற்கு முன் ஹிலாரி மேற்கொண்ட பயணத்தின் போது ஆசிய பிராந்தியத்தில் சீனாவின் கடலோர எல்லை மற்றும் சிறு தீவுகள் தொடர்பான பிரச்சினை தொடர்பாக சீன வெளியுறவுத்துறை அமைச்சருடன் பேச்சு நடத்தியிருந்தார்.*

## கோஸ்டாரிகாவில் நிலநடுக்கம் 2 பேர் சாவு

மத்திய அமெரிக்க நாடான கோஸ்டாரிகா நாட்டில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் போது கட்டட இடிபாடுகளில் சிக்கி இருவர் உயிரிழந்தனர்.

ரிச்டர் அளவுகோலில் 7.6 எனப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலச் சரிவுகள் ஏற்பட்டன.

பெரும்பாலான கட்டடங்கள் குலுங்கியதில் குறைந்தது இருவர் உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். இந்த நிலநடுக்க மையம் தலைநகர் சான் ஜோஸுக்கு மேற்குப் பகுதியில் 87 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. அருகிலுள்ள பசிபிக்கடல் நாடுகளில் சுனாமி தாக்கக்கூடும் என அறிவிக்கப்பட்டு பின்னர் அது ரத்துச் செய்யப்பட்டது.

## சிரியாவில் கடந்த மாதத்தில் மட்டும் ஒருலட்சம் அகதிகள் வெளியேற்றம்



சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டு போரின் காரணமாக கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் என்று ஐ.நா. தகவல் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்ததாவது:-

சிரியாவில் மனித நேய உணர்வுகள் மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கின்றன.

இராணுவத்தினரும், போராட்டக்காரர்களும் பொது மக்களை பாதுகாக்க தவறிவிட்டனர். சர்வதேச மனித நேய சட்டம் என்பது அறவே இல்லாமல் போய்விட்டது.

எனவே அயல் நாடுகள் தங்களிடம் அடைக்கலம் தேடிவரும் மக்களிடம் அன்பு காட்டுங்கள்.

போரை நிறுத்துவதற்கு உதவி செய்யுங்கள். ஆயுதம் விற்பவர்களால் மேலும் மேலும் துயரங்கள்தான் அதிகரிக்கும். இதனால் ஏற்படும் விளைவுகளை சிறிதளவும் எண்ணிப் பார்க்க இயலவில்லை - என்றார்.

இதுவரையிலும் 235,300 இற்கும் அதிகமானோர் அகதிகளாக தம்மைப் பதிவு செய்யக் காத்திருப்பதாகவும் ஐ.நா. அறிக்கை தெரிவிக்கிறது.

(வ)

## பெர்லின் விமானநிலையம் அடுத்த ஆண்டு திறப்பு

ஜேர்மனியில் கடந்த ஜூன் மாதம் திறக்கப்போவதாக அறிவிக்கப்பட்ட பெர்லின் விமான நிலையம், அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் திறக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது பெர்லின் பிராண்டென்பர்க் சர்வதேச விமான நிலையப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுமானம் குறித்து அதன் நிர்வாகக்குழு கூடிப் பேசியதில் கட்டடம் திறக்க இன்னும் சிலகாலம் ஆகும் என்பது தெரியவந்தது.

பிராண்டென்பர்கின் மாநில முதல்வர் மத்தியாஸ் பிளாட்செக், விமான நிலையம் அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி திறக்கப்படும் - என்றார்.

இந்தக் கட்டடப் பணியில் ஊழல் நடந்திருப்பது பெர்லின் நகர மேயர் கிலாஸ் ஓவரீட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இவருக்கு பிரச்சினைகளின் தீவிரம் புரிவதே இல்லை. அவற்றைக் குறைவாக மதிப்பிடுகின்றார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

## கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு கொலம்பியா நடத்தவுள்ளது

கொலம்பியாவின் போர்க் கிளர்ச்சியாளர்களுக்கும் அந்த நாட்டு அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கொலம்பிய ஜனாதிபதி ஜுஅன் மனுவல் சான்ட்டோஸ் தெரிவித்தார்.

அடுத்த மாதம் நோர்வேயில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுகள், பின்னர் கியூபாவுக்கு மாற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குக் கிடைக்கப்பெற்றுள்ள ஒரு சந்தர்ப்பமாக இதனைக் கருதுகின்றேன்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தீர்வுத் திட்டங்களை முன்வைப்பதில் பல்வேறு சவால்களைச் சந்திக்க நேரிடும்- என்றார்.

நீண்டகாலமாக கொலம்பிய அரசுக்கும் போர்க் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போதைப் பொருள் கடத்தல் ராணி கொலம்பியாவில் சுட்டுக்கொலை



கொலம்பியாவில் பிரபல போதைப் பொருள் கடத்தல் ராணியான க்ரிசெல்டா பிளான்கோ சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

1970 மற்றும் 80ஆம் ஆண்டுகளில் போதைப் பொருள் கடத்தலுக்கு பெயர் போனவர் க்ரிசெல்டா பிளான்கோ (வயது 69).

புளோரிடாவில் நடந்த பல்வேறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்கு காரணமாக இருந்தவர். தவறுதலாக சுட்டுக் கொல்லப்பட்ட 2 வயதுக் குழந்தையின் கொலை வழக்கில் சிக்கி 1985ஆம் ஆண்டு அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட அவருக்கு 60 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் 20 ஆண்டுகளை சிறையில் கழித்த பின்னர் கொலம்பியாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். இந்தநிலையில் மெடலின் நகரில் உள்ள கறிக்கடையில் இருந்து வெளியே வந்த அவரை மோட்டார் சைக்கிளில் வந்த 2 பேர் சுட்டுக் கொன்றனர். இதில் க்ரிசெல்டாவின் தலையில் 2 குண்டுகள் பாய்ந்து அவர் இறந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்று சுட்டுக் கொன்றுவிட்டு தப்பியோடுவது க்ரிசெல்டாவின் 'சிந்தனை' யாக இருந்தது. தற்போது அவரது சிந்தனையைப் பயன்படுத்தி அவரையே கொன்றுவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியாவுக்காக 21 மி. டொலர்கள் அமெ. நன்கொடை

வொஷிங்டன்,செப்7

சிரிய அகதிகளின் மறு வாழ்வுக்காக 21 மில்லியன் டொலர்களை அமெரிக்க அரசு நன்கொடையாக வழங்க முன்வந்திருக்கிறது.

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் தலைவர் ராஜீவ் ஷா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

இந்த உதவித் தொகையுடன் சேர்த்து அமெரிக்கா இதுவரை சிரிய அகதிகளுக்காக 100 மில்லியன் டொலர்களை இதுவரை வழங்கியிருக்கிறது- என்றார். (வ)

# சிதறியது ஆயுதக்கிடங்கு

## துருக்கியில் 25 சிப்பாய்கள் உயிரிழப்பு



துருக்கியில் ஆயுதக் கிடங்கொன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் காரணமாக 25 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்றும் நால்வர் காயமடைந்தனர் என்றும் அந்தநாட்டு அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

துருக்கியின் மேற்கு பிராந்திய நகரான அவ்யோனில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்கு மாகாணத்தில் ஒரு தொகுதி கையெறி குண்டுகளை இராணுவ சேமிப்பகத்துக்கு இடம் மாற்றியபோதே இந்த விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளது என்று வனத்துறை அமைச்சர் வெய்செல் இரோக்லு தெரிவித்தார்.

காயமடைந்த சிப்பாய்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புச் சம்பவம் கேட்டவுடன், பூகம்பம் தாக்கியதாகத் தாங்கள் கருதினர் என்று அயலில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர். (வ)

## பாக் விமானத்தளத்தில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகளுக்கு உதவிய படையினர்

### காட்டிக்கொடுத்த கண்காணிப்பு கமரா

பாகிஸ்தான் விமானப் படைத் தளத்தில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு, விமானப் படை தள பாதுகாப்புப் பிரிவினர் உதவி செய்தது தற்போது தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானில் கம்ரா என்ற இடத்திலுள்ள விமானப் படைத் தளத்தின் மீது கடந்த மாதம் 16ஆம் திகதி தெஹ்ரிக்- இ- தலி பான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 தீவிரவாதிகளும், 2 இராணுவச் சிப்பாய்களும் உயிரிழந்தனர். இதில் மொத்தம் 3 விமானங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விமானப் படை உயர் அதிகாரிகள், விமானத் தளத்தில் இருக்கும் கண்காணிப்பு கமராக்களை ஆய்வு செய்ததில் தீவிரவாதிகளுக்கும், விமானப் படை தள பாதுகாப்புப் பிரிவு படையினருக்கும் தொடர்பு இருப்பது அம்பலமானது.

இந்த கமராக்களில் தீவிரவாதிகள் நடமாட்டம் குறித்த 14 நிமிட காட்சி இடம்பெற்றிருக்கிறது. அதில் பாதுகாப்பு வீரர்கள் ஓர் அறைக்குள் சென்று மறைந்து கொள்வது, தாக்குதலுக்கு முன்பு தீவிரவாதிகள் விமானப்படைத் தளத்தில் மேசையைச் சுற்றி அமர்ந்து விவாதிப்பது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. (வ)

# கரையொதுங்கிய ஆயிரக்கணக்கான செத்த எலிகள்



அமெரிக்காவில் வீசிய ஐசக் சூறாவளியில் சிக்கி உயிரிழந்த ஆயிரக்கணக்கான எலிகள் மிசிசிபி கடற்பகுதியில் கரை ஒதுங்கின. இதனால் அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தின் கடைசியில், அமெரிக் காவின் வடக்குப் பகுதியைத் தாக்கிய ஐசக் சூறாவளியால் பல பகுதிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகின.

லூசியானாவில் ஏராளமான சதுப்பு நிலப்பகுதிகள் உள்ளன. ஆயிரக் கணக்கான எலிகளின் வசிப்பிடமாக அப்பகுதிகள் திகழ்கின்றன. சூறாவளியின் வேகத்தில் இந்தப்பகுதியில் வெள்ளம் பாய்ந்து ஏராளமான எலிகள் இறந்தன. மேலும் பல ஆயிரக் கணக்கான எலிகள், வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு கடலில் தள்ளப்பட்டன.

சூறாவளியில் சிக்கி இறந்த எலிகள் நேற்று முன்தினம், மிசிசிபி கடற்கரையில் ஒதுங்கத் தொடங்கி உள்ளன. இதனால் அந்தப்பகுதி முழுவதும் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகிறது. இதனால் நோய்க் கிருமிகள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவைகளை அகற்றும் பணியில் ஒப்பந்ததாரர்கள் பலர் ஈடுபட்டு, 16 ஆயிரம் இறந்த எலிகள் அகற்றப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர பாம்பு, முயல், மான் போன்றவையும் இறந்த நிலையில் கரையில் ஒதுங்கி வருவதாக ஒப்பந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்



ஒரே நேரத்தில் இரண்டு பதவிகள் வகிப்பது தொடர்பாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரிக்கு லாகூர் உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பாகிஸ்தானின் ஜனாதிபதியாக இருப்பவர் ஆசிப் அலி சர்தாரி. இவர் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் துணைத் தலைவராகவும் இருந்து வருகிறார்.

இந்நிலையில் முகம்மது அசார் சித்திக் என்பவர், அதிகாரத்தைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கட்சியை வளர்ப்பதாக சர்தாரி மீது வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு லாகூர் உயர் நீதிமன்றத்தில் நான்கு பேர் கொண்ட குழு முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது சர்தாரி சார்பில் வாதாடிய சட்டத்தரணி அப்துல் ஹைகலானி, சட்டமா அதிபர் இர்பான் காதிர் பலுசிஸ்தான் சென்றிருப்பதால் அடுத்த வாரம் இது குறித்த மனுதாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக இரு பொறுப்புகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் வகிக்கும் படி நீதி மன்றம் கடந்த ஆண்டே உத்தர விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மறுபடியும் வழக்குத் தொடரப்பட்டுள்ளதால், நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றாதது குறித்து விளக்கம் அளிக்கக் கோரி ஜனாதிபதி சர்தாரிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.


## வீடு தேவை

இரண்டு அங்கத்தவர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குதேவை.

தொடர்பு: 077 0724 810
(22575) (45.6.7) 077 0724 811


## கண்ணீர் அஞ்சலி

### செல்வி முருகர் சோதிமலர்

(அதிபர், கிளி. புனித அந்தோனியார் றோ.க.வி. முரசுமோட்டை)




06.09.2012 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த எங்கள் அதிபரின் ஆத்ம சாந்திக்காக பாடசாலைச் சமூகம் இப்பாரினிலே என்றென்றும் மனதார மன்றாடி அஞ்சலிகளைக் காணிக்கையாக்கு கின்றோம்.

இத்தரணிதன்னில் இவ்வேளை தனில் இந்நாளிதனில்...

பாடசாலை சமூகம்,
கிளி/ புனித அந்தோனியார் றோ.க.வி,
முரசுமோட்டை.

(13319)(6-7-8)

## முதலாம் ஆண்டு



மலர்வு 10 ★ 05 ★ 1942

உதிர்வு 09 ★ 09 ★ 2011

### அமரர் தம்பையா சண்முகரத்தினம்

பாசத்தின் பிறப்பிடமே குடும்பத்தின் குலவிளக்கே
மாசற்ற நெஞ்சுடனும் மலர்ந்த முகத்துடனும்
வாழ்ந்து காட்டிய எம் தெய்வமே
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீண்டிருக்கும் நினைவுகளை
நெஞ்சிலே சுமந்திருக்கும்

தங்கோடை, காரைநகர். (22525)(6.7.8) குடும்பத்தினர்.


உயர்தர பரீட்சைகளின் பின் "நல்லதோர் ஆரம்பம்"

Mega ஸ்கொலர்ஷிப் You can Win Upto 75%

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்

14 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவரும் ஸ்கொலர்ஷிப் மூலம் கொம்ப்யூட்டர் படிக்க சிறந்த வாய்ப்பு

இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்கொலர்ஷிப் பரீட்சை

September 2012

| Mo | Tu | We | Th | Fr | Sa | Su |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

செப்டெம்பர் 9th ஞாயிறு

CSC - ASIAN COMPUTER EDUCATION

இலவச பரீட்சை அனுமதிகளை எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/3044)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677 |
| நல்லூர் | 9, குமார வீதி, 021-2229191 |
| நெல்லியடி | கொடிகாமம் வீதி, 021-2262399 |
| சாவகச்சேரி | கட்டுக்காணி வீதி, 021-2270267 |
| கிளிநொச்சி | A9 வீதி, ஆனந்தபுரம், 021-2283925 |

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

மத்திய அரசின் முகாமைத்துவ உதவியாளர், கூட்டுறவு பரிசோதகர், வடமாகாணப் பரீட்சைகள் இவற்றுக்கான வகுப்பு ஒவ்வொரு ஞாயிறும் 12 மணிதொடக்கம் 4 மணிவரை நடைபெறும்

பொது அறிவு - 12 மணி தொடக்கம் ஒரு மணிவரை
பொது உளச்சார்பு - ஒரு மணி தொடக்கம் 3 மணிவரை
மொழித்திறன் - 3 மணி தொடக்கம் 4 மணிவரை

வினைத்திறன் காண் தடைப்பரீட்சை விசேட வகுப்புக்கள்

★ முகாமைத்துவ உதவியாளர் III இற்கானது ஒவ்வொரு சனிக்கிழமையும் 09 மணிதொடக்கம் 12 மணிவரை

★ கிராமசேவையாளர் தரம் III, முகாமைத்துவ உதவியாளர் II இலிருந்து தரம் I, தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்பவற்றிற்கான வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிறும் 12 மணிதொடக்கம் 3 மணிவரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்

(சி/3107) (45.6.9)


## அஞ்சலி நிகழ்வு



இலண்டன் சமூக அபிவிருத்தி மையம் அமைப்பின் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர், பாடசாலை மாணவர்களுக்கான நிதியுதவித்திட்டங்களை யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினூடாக நெறிப்படுத்திய பெருந்தகை

### பிரம்மஸ்ரீ இராமசாமி ஐயர் சுப்பிரமணியம்

(பொறியியலாளர் - இலண்டன்)

அவர்களின் மறைவினால் துயருற்றுள்ள அன்னாரது குடும்பத்தின் ஆறாத்துயரில் நாமும் இணைகிறோம்.

அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செய்யுமுகமாக இன்று (07.09.2012)வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 08.10.1951 மறைவு 30.08.2012

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

சி (3108)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(06)

விமான நிலையத்துக்கு வரும் வரை விமான ரிக்கெற்றை கான்சல் செய்து விட்டு ஒரு டாக்ஸியைப் பிடித்துக்கொண்டு சென்னைக்கு போய்விடலாம் என்று கூறிக்கொண்டே வந்தார்.

நான் பதில் சொல்லாமல் விமான நிலையத்துக்கு அழைத்து வந்துவிட்டேன். பம்பாயிலிருந்து பெங்களூர் வழியாக சென்னை வரும் விமானத்துக்காக நாங்கள் காத்திருந்தோம். நண்பர் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. கவலைக் குறியோடு வீற்றிருந்தார்.

நாங்கள் வரவேண்டிய விமானம் 737. தீடிரென்று நண்பர் இந்த விமான எண்ணைக்கூட்டினார். 8 வருகிறது. அந்த எண் எனக்கு ராசியில்லை. ஆகவே இந்த விமானத்தில் போக வேண்டாம் என்றார். நான் பதில் சொல்லாமல் புத்தகம் ஒன்றை படிக்கும் பாவனையில் வீற்றிருந்தேன். விமானமும் வந்தது. வேறு வழியில்லாமல் அவரும் என்னுடன் விமானத்தில் ஏறினார். குளிர்மை செய்யப்பட்ட விமான அறையிலும் அவருடைய நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பியிருப்பதைப் பார்த்தேன். எனக்குக் கூடக் கொஞ்சம் பரிதாபமாக இருந்தது. விமானம் புறப்படும் போது கண்ணை மூடிக்கொண்டார். அவருடைய இருக்கை பட்டியை நானே கட்டிவிட்டேன் அப்பொழுதும் அவர் கண்ணைத் திறக்கவில்லை.

விமானம் ஆகாயத்தில் கிளம்பி பறக்கத் தொடங்கியது. நானே இருக்கை பட்டியை அவிழ்த்து விட்டேன். திடுக்கிட்டவராக அசட்டுச் சிரிப்புடன் அவர் என்னைப் பார்த்தார். ஜன்னல் வழியாக பெங்களூரின் அழகைப் பாருங்கள் என்றேன். 'உனக்கு வேறு வேலையில்லை' என்று என்னைக் கோபித்துக் கொண்டார். எங்களுக்கு முன்னால் உள்ள பையிலிருந்த கார்டை எடுத்து அதிலுள்ள விடயங்களைப் படித்துப்பாருங்கள் என்றேன்.

விமானம் விபத்திற்கு உள்ளானால் பயணிகள் என்ன செய்ய வேண்டும் என்கிற குறிப்புகள் நிரம்பிய அட்டை அது.

அவருக்கு கோபம் வந்துவிட்டது. என்னை பயமுறுத்துவதற்காக இதையெல்லாம் படிக்கச் சொல்லுகிறீர்களா என்று அந்த அட்டையை மறுபடியும் பையில் சொருகி விட்டார். சென்னை வந்து விட்டது என்று விமானப் பணிப்பெண் தெரிவித்தாள். விமானம் பத்திரமாக மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கியது. அப்பொழுது தான் நண்பரின் முகத்தில் மகிழ்ச்சிக் குறியை நான் பார்த்தேன் . விமான நிலையத்திலிருந்து நாங்கள் வெளியே வந்த பிறகு எவ்வளவு வேகமாக நாம் சென்னை வந்துவிட்டோம் என்று நண்பர் கூறினார். நீங்கள் செய்கின்ற தொழிலுக்கு காலத்தை சிக்கனப்படுத்துவது அவசியம். ஆகவே நீங்கள் இனி விமானத்தில் தான் பயணம் செய்யவேண்டும் என்றேன் நான். நண்பர் மறுப்பேதும் சொல்லவில்லை.

இப்பொழுதுதெல்லாம் நண்பர் டெல்லிக்கும் கல்கத்தாவிற்கும் விமானத்தில் தான் பறந்து கொண்டிருக்கிறார். 'விமானத்தில் செல்வது எனக்கு மிகவும் உற்சாகமாக இருக்கிறது' என்கிறார். விபத்துக்கள் ஏற்படும் என்கிற பயம் அவருடைய பல வேலைகளுக்கு இடையூறாக இருந்தது. ஒரு முறை பயணம் செய்த பிறகு அந்தப் பயம் அவரை விட்டு நீங்கி விட்டது.

மனிதன் பல காரியங்களைச் சாதிப்பதற்கு இடையூறாக இருப்பது அவனிடம் குடிகொண்டுள்ள பயம் தான்.

இது நடக்குமோ, அது நடக்குமோ என அச்சப்பட்டு வாழ்க்கையில் எதையுமே செய்யாதிருப்பவர் போலக் கோழை எவருமேயில்லை.



நீந்தத் தெரிவது மனிதனுக்குத் தேவையான ஒரு காரியம். நீந்த வேண்டுமென்று பலரு ஆசைப்படுகிறார்கள். ஆனால் ரொம்பப் பேர் தண்ணீரில் இறங்குவதற்கே பயப்படுவார்கள். தண்ணீரில் இறங்காமல் ஒருவன் நீந்தக் கற்றுக்கொள்வது எவ்வாறு சாத்தியமாகும்? நீந்தும் பொழுது நீரைக் குடித்து அதன் விளைவாக முச்சுத்திணறல் ஏற்படலாம். சிறு சிறு விபத்தும் கூட ஏற்படலாம். இதைக் கண்டு பயந்து ஒருவன் தண்ணீரில் இறங்க மறுத்தால் அவன் ஒரு போதும் நீந்தக் கற்றுக் கொள்ளமுடியாது. எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் இடையூறுகளும் தடைகளும் இருக்கவே செய்யும்.

அதைக்கண்டு பயந்து ஒதுங்குகிறவர் எந்தக் காரியத்தையும் செய்ய லாயக்கில்லாதவராகி விடுவார்.

சைக்கிள் ஓட்டுவதை எடுத்துக் கொள்வோம். ஓட்டக் கற்றுக் கொள்ளும்போது கீழே விழ வேண்டியிருக்கிறது.சில சந்தர்ப்பங்களில் அடிபடவும் செய்யும். கீழே விழ வேண்டியிருக்குமே, அடிபடுமே என்று பயந்தால் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ளுவது முடியாமல் போகும்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# கல்விக்கும் தொழிலுக்கும் மட்டும் மின்சாரத்தைப் பயன்படுத்துங்கள்

## நானும் குப்பி விளக்கில் படித்தவன்தான் என்கிறார் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க

யாழ்ப்பாணம், செப்.7

சிறுவர்களின் கல்விக்காகவும் இளைஞர், யுவதிகளின் தொழில் நிலையங்களுக்காகவும், மின்சாரத்தைப் பயன்படுத்துங்கள். கல்விகற்றுள்ள இளைஞர், யுவதிகள் தமது சுயமுயற்சியினூடாக சிறிய தொழில் நிலையங்களை அமைத்தால் பின்னாளில் வளர்ச்சியடைந்த பெரிய தொழிற்சாலைகளாக அவற்றை மாற்றி அமைக்க முடியும் என்று மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மின்விநியோக ஆரம்ப நிகழ்வு அண்மையில் புங்குடுதீவு ஆலடியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

**மின்சாரம் இருக்கிறது என்பதற்காக மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தித்தான் எதையும் செய்வோம் என்று எண்ணக் கூடாது.**

சாதாரண தொழிலாளர்களது பிள்ளைகள் தொழிலாளிகளாகத்தான் தமது எதிர்காலத்தை நகர்த்த வேண்டும் என்பதல்ல. அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த கல்வியாளர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளக்கூடியதாக, கல்வியை வளப்படுத்த முன்வர வேண்டும். சிறுவர்களின் கல்வி என்பதில் நான் அக்கறை கொண்டுள்ளேன். சிறுவர் களுக்காகவே இந்த மின் விநியோகத்தை அவர்களைக் கொண்டு ஆரம்பித்துள்ளேன்.

மாணவர்களுக்கு படிக்க வசதியில்லை,மின்சாரம் இல்லை என்ற நிலை ஏற்படக்கூடாது. பெற்றோர்கள் மின்சாரத்தைக் கூடுதலாக தமது பிள்ளைகளின் கல்விக்காகவே பயன்படுத்த வேண்டும். ''நான் குப்பி விளக்கில் தான் படித்தேன். இன்று மின்சார அமைச்சராக இருக்கிறேன்''.

மின்சாரம் இருக்கிறது என்பதற்காக மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தித்தான் எதையும் செய்வோம் என்று எண்ணக் கூடாது. மின்கட்டணங்கள் அதிகம் என விசனப்படாது மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்க முன்வர வேண்டும்-என்றார்.

(எ-7)



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நிலைய வளர்ச்சிக்கு நீண்டகாலம் பல்வேறு துறைகளில் சேவையாற்றிய மா.கந்தசாமி, மா.சுப்பையா, த.அப்புத்துரை, ச.கிருஷ்ணன் ஆகியோர் நிலையத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட நால்வருடன் நிலைய நிர்வாகிகள் நிற்பதைக் காணலாம். (எ-9)

# யாழ். மண், சிதம்பரத்துச் சிவனுக்கு உரித்துடைய சொத்து ஒரு துளி வருமானத்தை அந்தச் சிவனுக்கு அர்ப்பணிப்போம்

## நூல் வெளியீட்டு விழாவில் நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்

யாழ். மண், சிதம்பரத் திருக்கோயிலுக்கு உரித்துடையதாகும். எனவே எமது வருமானத்தில் சிறு துளியையாவது அந்தச் சிவனுக்கு கொடுப்போம் என்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் தெரிவித்தார்.

யாழ்.இந்து சமயப் பேரவையில் அண்மையில் நடைபெற்ற ''நடேசர் ஸ்நபனம்'' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு அருளுரை ஆற்றுகையில் நல்லை ஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.இந்துசமயப் பேரவையின் செயலர் சி.சக்திகிரீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது முன்னோர்கள் சிதம்பரத் திருக்கோயிலைத் தமது உயிர் நாடியாகக் கொண்டு வாழ்ந்தனர். தமது சொத்துக்களைச் சிதம்பரத் திருத்தலத்துக்கு அர்ப்பணித்து விட்டு இறந்தமை நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். இன்று யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பெரும் பகுதி சிதம்பரத் திருக்கோயிலுக்கு உறுதி முடிக்கப்பட்டுள்ளதை எவரும் மறுத்துவிட முடியாது. சட்டப்படியும் யாழ்ப்பாண மண் சிதம்பரத்துக்கே உரித்துடையதுமாகிறது. இதனால் [illegible] எமக்கும் எமது நாட்டுக்கும் எத்தனையோ சோதனைகள் வந்த போதும், எமது ஆத்மிக வாழ்வை எவராலும் தோற்கடிக்க முடியாது போனமை எமது தனித்துவமே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எமது முன்னோர் சிதம்பரத் திருக்கோயிலுக்கு தாம் இறக்கும் போது தமது சொத்துக்களை அர்ப்பணிப்புச் செய்துவிட்டு இறந்துள்ளனர். இந்தச் சொத்துக்களை அனுபவிப்பவர்கள் சிதம்பரத் திருக்கோயிலுக்கு ஒரு ரூபாவைத் தன்னும் கொடுக்காது வாழ்வது எமக்குப் பெரும் கவலையை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய காணிகளில் வீடுகளை அமைத்தும், தோட்டங்களைச் செய்தும் வருமானம் ஈட்டுபவர்கள் அந்த வருமானத்தில் சிறுதுளி அளவு பகுதியையேனும் சிதம்பரத்துக்கு அர்ப்பணிப்புச் செய்யவேண்டும். இவ்வாறு நாம் சிவச்சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதனால் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறோம். இதனை உணர்ந்து இந்தச் சொத்துக்களை அனுபவிப்பவர்கள் சிதம்பரத் திருக்கோயிலுக்கு ஒரு துளி வருமானத்தையேனும் அர்ப்பணிப்புச் செய்ய முன்வரவேண்டும்.

சிவசொத்து குலநாசம் என்று எம்மை வழிநடத்திய பல ஞானிகள் எமக்குக் கூறி வந்துள்ளனர். இதனை நாம் மறந்து வாழக்கூடாது.

இந்து சமயப் பேரவை, சிதம்பரம் போல விளங்கும் நடராஜர் ஆலயம் ஒன்றை அமைத்து அந்தப் பெருமானுக்கு சிறப்பான பூசைகளை நடத்தி வருகிறது. இதன் பயனாகவே சிதம்பரநடராஜர் ஆலயத்தில் இருந்து சிவஸ்ரீ கணேச பரமேஸ்வர தீக்ஷிதர் இங்கு வருகை தந்து ஆவணி மாத நடேசர் அபிஷேகத்தை செய்ததோடு இங்கு வெளியிடப்படுகின்ற ''நடேசர் ஸ்நபனம்'' என்னும் நூல் வெளியீட்டு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். இந்த நிகழ்வு எமது நாட்டில் எந்தக் காலத்திலும் நடைபெற்றதில்லை. சிதம்பரத்திலிருந்து பிரதம தீக்ஷிதர் கலந்து கொள்வதென்பது சாமானியமான விடயமல்ல. அதற்கு மேலாக இந்து சமயப் பேரவையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் நடராஜருக்கு அபிஷேகம் செய்வதற்கென அங்கிருந்து பல் வேறுபட்ட திரவியங்களை எடுத்து வந்து பக்திவினயத்தோடு அபிஷேகம் செய்தமை எமது வாழ்நாளில் என்றும் மறக்க முடியாததாக மாறிவிட்டது. இதன் மூலம் உலகில் நல்ல பலன்கள் உருவாகும் என்பது திடமானதாகும்.

இந்த நிகழ்வில் சிதம்பர மகா சேத்திரத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ.கணேச பரமேஸ்வர தீக்ஷிதர் இந்து சமயப் பேரவைச் செயலர் சி.சக்திகிரீவனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். சிவாச்சாரியார்களும், கல்விமான்களும், அறங்காவலர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# சம்பளம் வாங்கும் தொழில் அல்லவே சேவை என்பது

மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை என்பது மக்களிடம் எவ்வளவு விசனத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளன என்பதைப் பழைய மாணவிகள் புதனன்று நடத்திய ஆர்ப்பாட்டம் எடுத்துக் காட்டியது.

அதிபர் நியமனத்தில் காணப்படும் குளறுபடிகள் மற்றும் இழுபறிகள் பாடசாலை மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் என்ற கவலையை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதேநேரத்தில் கல்வித்துறையில் அதிகாரத்தில், பொறுப்பில் இருப்பவர்கள் இந்தப் பிரச்சினையைக் கைகழுவிவிட்டதைப் போல் பொறுப்பற்று இருப்பதையும் பழைய மாணவிகள் சங்கம் கண்டிக்கத் தவறவில்லை.

வேம்படிப் பாடசாலையில் ''பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவதற்கான பொறுப்பை வடமாகாண கல்வி அமைச்சும் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களமும் ஏற்க வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். ஏனெனில் அவர்களே யாழ்ப்பாணத்தின் கல்விக்குப் பொறுப்பானவர்கள் என்பதுடன் அரச பணியாளர்களாகவும் இருக்கிறார்கள்.'' – இப்படி பழைய மாணவிகள் தமது போராட்டத்துக்கு முன்னர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூற்றுக்கள் வேம்படி பிரச்சினையைத் தாண்டி, யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் மற்றொரு விடயத்தையும் தீர்மானகரமாகச் சுட்டிக்காட்டுகின்றது. அது தீவிரமாக ஆராயப்பட வேண்டியதொன்று.

அரச பாடசாலை ஒன்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரச பணியாளர்களான கல்வி அதிகாரிகள் பின்னடிக்கிறார்கள். ஏன் இந்த நிலை என்றால், அதற்கு வேம்படிப் பிரச்சினையில் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதே காரணம் என்ற பதில் கிடைக்கிறது. ''மேலிடத்துப் பிரச்சினையில் நாம் என்ன செய்ய முடியும்'' என்பதுதான் அதிகாரிகளின் வாதம்.

இங்கேதான் குடாநாட்டு மக்களுக்கு நியாயமான கேள்வி ஒன்று எழுகிறது. அரச அதிகாரிகள் மக்கள் சேவகர்களா? அரசியல்வாதிகளின் சேவகர்களா? யதார்த்த தர்க்க நியாயத்தில் அதிகாரிகள் அரசியல்வாதிகளை 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொண்டே செல்வார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த இரகசியம். இருப்பினும் வேம்படி போன்ற பொதுநலன் சார்ந்த பிரச்சினையில் மக்கள் நலன் சார்ந்து செயற்படவேண்டிய பொறுப்பும் கடமையும் மனச்சாட்சியும்கூட அதிகாரிகளுக்கு இருக்க வேண்டும். ஆனால் அது இல்லை என்றாகி விட்டது இங்கே.

அப்படி இருக்கையில் இதே அதிகாரிகளால் தயாரிக்கப்படும் புள்ளி விவரங்களும் பாதிக்கப்பட்டவர்கள் விவரங்களும் பயனாளிகள் விவரங்களும் எப்படி உண்மையானவையாக அரசியல் கலப்பற்றவையாக இருக்க முடியும்? உதவிகள் நேர்மையாகவே இவர்களால் வழங்கப்படுகின்றன என்று எப்படி நம்புவது? அவற்றிலும் அரசியல்வாதிகள் சொல்வதைத்தானே இந்த அதிகாரிகள் செய்யப்போகிறார்கள்.

அரசியல்வாதிகளின் முன் நெஞ்சுரத்துடனும் நேர்மைத் திறத்திடனும் பணியாற்ற முடியாத இவர்கள் மக்கள் சேவை ஆற்றினால் என்ன? விட்டால் என்ன? யார் அழுதார்கள் இவர்கள் மக்கள் சேவை ஆற்றவில்லை என்று. சேவை என்பது வெறும் சம்பளம் வாங்கும் தொழில் அல்ல. அப்படி அரசியல்வாதிகள் தமது பணியைச் சரிவரச் செய்யவில்லை என்றால், ஒன்றித்துக் குரல் கொடுங்கள். அதைவிடுத்து சமூகத்தைச் சீரழிக்காதீர்கள்.

# கிழக்கு மாகாணத் தேர்தல் தமிழருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

■பீ.ஏ.அந்தோனி மார்க்

**அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற அரசியல் தீர்வு பேச்சு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நிலையில் மக்கள் ஓர் அணியில் நின்று தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிப்பது நடை பெறப் போகும் பேச்சுகளுக்கு ஓர் உந்து சக்தியாக அமையுமெனக் கல்விமான்கள் கூறுகின்றார்கள்.**

**நாளை** சனிக்கிழமை 8 ஆம் திகதி நடைபெற இருக்கும் கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளபடியால், அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஓர் அணியின் கீழ் ஒன்று திரண்டு, அரசியல் அடிமைகளாக்கப்பட் டுள்ள எமது இனத்தின் விடு தலைக்காக உழைக்க முன்வர வேண்டும்.

இந்த நேரத்தில் கடந்த 64 வருடங்களாகத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களை, கொலைகளை, கற்பழிப்புக்களை, சிறச்சாலை கைதிகளின் கொலைகளை, காணாமல் போனோர்களை, இளம் விதவைகளை, அனாதைக் குழந்தைகளை, ஊனமுற்றவர்களை, சிறையில் சித்திரவதை அனுபவிப்பவர்களைப் பற்றியும் சற்றுச் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இந்தத் தேர்தலின் முடிவுகளை இந்தியா, உட்பட உலகின் பல நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளையும் லட்சக் கணக்கான தமிழ் மக்களையும் அழித்து கொழும்பு அரசு போரில் வெற்றியீட்டி 3 ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால் தமிழ் மக்களுக்கென ஓர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படவில்லை. மக்களின் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. மீள் குடியமர்வு இன்னும் ஆமை வேகத்திலேயே போய்க் கொண்டிருக்கிறது. 160 பாடசாலைகள் இன்று வரையும் மூடப்பட்டுள்ளன. பல லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக 20 ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வாழ்கிறார்கள். உள்ளூரில் இன்னும் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 888 பேர் மீள்குடியமர்த்தப்படவில்லை என புள்ளி விவரங்கள் காண்பிக் கின்றன.

தமிழ், முஸ்லிம் மக்கள் மரபு வழியாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் இன்று இராணுவ மயமாக்கப்பட்டு வருகின்றன. சிங்களக் குடியேற்றங்களும் பௌத்த விகாரைகளும், அரச மரங்களும் பல இடங்களையும் ஆக்கிரமித்து வருகின்றன. தமிழ் மக்களின் குடிசன விகிதாசாரம் 40 வீதம் குறைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் 7 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களை அடக்குவதற்கு 18 இராணுவ முகாம்கள் உள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட காணிகளில் வாழ்ந்த மக்கள் இருக்க இடமின்றி தறப்பாள்களின் கீழ் வாழ்வதாக முறையிடுகிறார்கள். இராணுவ பிரசன்னத்தினால் பொதுமக்கள் இரவில் தமது வீடுகளில் நித்திரை செய்யவும் பயப்படுவதாக கூறுகிறார்கள்.

இந்த நிலையில் அரசுக்கு துதிபாடும் அமைச்சர்களாலும் நாடாளுமன்ற பிரதிநிதிகளாலும், முதலமைச்சர்களினாலும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க முடியாது. வடக்கு, கிழக்கின் மாநில ஆட்சி வரப்போகும் மாகாண சபைத் தேர்தலிலும், அதில் வெற்றி பெறும் அமைச்சர்களினது [illegible]

கடந்த பொதுத் தேர்தலில் வடகிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் அளித்த ஏகோபித்த ஆதரவு காரணமாகவே இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாணும் நோக்கத்துடன் இலங்கை அரசும் ஐ.நா. சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த முன்வருகின்றன. இந்தப் பேச்சு வார்த்தைகள் தடம் புரண்டு போகாமல் இருப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்த வேண்டுமென தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்க வேண்டுகோள்களை விடுத்து வருகின்றார்.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நிலையில் மக்கள் ஓர் அணியில் நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது நடைபெறப் போகும் பேச்சுகளுக்கு ஓர் உந்து சக்தியாக அமையுமெனக் கல்விமான்கள் கூறுகின்றார்கள். ஆகவே இந்தத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் வாக்களிப்பது பெரும் பாக்கியமாகும். எனவே இந்த வாய்ப்பை தமிழ் பேசும் மக்கள் தமக்குக் கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பம் என எண்ணி பொறுப் புணர்ச்சியுடனும் தன்மானத்துடனும் வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

கடந்த பல ஆண்டுகளாக இறந்தவர்களின் ஆத்மாக்களும் மேலும் தமிழ் மக்கள் சிந்திய இரத்தமும் கண்ணீரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். தமிழரசுக் கட்சியும் அதனுடன் இணைந்த ரெலோ ஈ.பி.ஆர்.எல்.எவ் கூட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இன்று வரையும் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனும் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக நேர்மையான முறையில் இனப்பிரச்சினைக்கான ஓர் சரியான தீர்வு கிடைக்கும் வரையில் ஒன்றுபட்டு செயற்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மையாகும்.

கடந்த 64 ஆண்டுகளாக தமிழ் பேசும் மக்களுக்காக தமது உயிரையும் தியாகம் செய்த தலைமைத்துவம் ஒன்று உண்டென்றால் அது தான் தந்தை செல்வநாயகத்தினால் உருவாக்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சியாகும். சலுகைக்காக, அமைச்சர் பதவிக்காக, பணத்துக்காக இன்று வரையும் விலைபோகாத தூய்மையான கட்சிதான் இலங்கை தமிழரசுக் கட்சியும் அதனுடன் இணைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமாகும்.

40-50 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் ஞானம் பெற்ற தலைவர் இரா.சம்பந்தனையும் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜாவையும் தன்னகத்தே கொண்டுள்ள பெருமை இந்தக் கட்சிக்குரிய சிறப்பு.

இன்று உலகத்தில் தமிழ் மொழியும் தமிழர்களும் இல்லாத நாடுகள் இல்லை. 7 கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றார்கள். இலங்கைத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனத்தினர். அவர்கள் பிறந்த மண்ணில் தம்மைத் தாமே ஆளும் உரிமை அவர்களுக்குண்டு. தாம் விரும்பிய உள்ளூர் ஆட்சித் தலைவர்களையும், மாகாண சபைத் தலைவர்களையும் நாடாளுமன்றத் தலைவர்களையும் தெரிவு செய்தபடி, ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவத்துடன் வாழும் சகல உரிமைகளும் அவர்களின் பிறப்புரிமைகளாகும்.

கடந்த 64 ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட அகிம்சை போராட்டங்களும் ஆயுதப் போராட்டங்களும் தமிழர் தாயகம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை, தேசியம் ஆகிய இந்த நான்கையும் அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டவையாகும். தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த இலட்சியங்களில் இருந்து நழுவியதே கிடையாது.

ஒரு தேசத்தில் அரசியல் உரிமைகள் அற்ற நிலையில் வாழும் மக்களுக்கு வெறும் சலுகைகளையும் அபிவிருத்திகளையும் மட்டும் வழங்கினால் அவர்களின் மனத்துயரத்தை, புண்களை உயிர்களைப் பிரிந்த துயரத்தை, விதவை வாழ்வின் துயர தர்க்கத்தை மாற்றி அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க முடியுமா?

தந்தை செல்வா இலங்கை அரசுடனும் கைச்சாத்திட்ட பல ஒப்பந்தங்கள் இந்திய அரசு மூலம் உருவாக்கப்பட்ட 13 ஆவது சரத்து இவைகளின் அடிப்படையில் தற்போது நடைபெறும் பேச்சுக்கள் மூலமும் ஐக்கிய இலங்கைக்குள் மாகாண சுய ஆட்சி (சமஷ்டி ஆட்சி) கிடைக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றிபெறச் செய்வதன் மூலம் இலங்கை அரசுடனான பேச்சு வெற்றி பெற்று பெரும்பான்மை மக்களும் சிறுபான்மை மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சுய ஆட்சியுடன் சரிநிகர் சமானமாக சமத்துவத்துடன் வாழ இறைவன் கிருபை செய்ய வேண்டும்.

கடந்த 64 ஆண்டுகளாக செய்த ஒப்பந்தங்களை கிழித்து ஏமாற்றியது போன்று அல்லாது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இலங்கை ஆசியாவிலே ஓர் அதிசயமான முன்மாதிரியான நாடாக மாறி மனித உரிமைகளுடன் ஜனநாயக உரிமைகளும் மதிக்கப்பட்ட ஓர் புண்ணிய பூமியாக மாற வேண்டுமானால் அவர் தமிழர்களுடன் ஒரு நியாயமான தீர்வுக்கு முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை செல்லரிக்கும் செல்பேசிகள்

■ மு.தியாகு

சிறியவர் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் செல்பேசிகளைப் பயன்படுத்த ஆரம்பித்தாகி விட்டது. நடந்து முடிந்த நல்லூர் திருவிழாவில் மற்றெல்லாவற்றையும்விட செல்பேசி இணைப்புகளைத்தான் அதிகம் விற்றார்கள் என்று அடித்துச் சொல்லிவிடலாம்.

இந்தச் செல்பேசிகளில் சிறப்பான இணைப்பையும் தொடர்பையும் பேணுவதற்காக ஆங்காங்கே தொடர்புக் கோபுரங்களை எழுப்பி வருகிறார்கள். இவ்வாறு மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் எழும் செல்பேசிக் கோபுரங்களால் குழந்தைகள், பொதுமக்களுக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது. கண்களால் பார்க்காமலும் காதால் கேட்காமலும் மனிதனின் புலன்களால் உணரப்படாமலேயே மின்காந்தக் கதிர்வீச்சால் மக்கள் தாக்கப்படுகின்றனர்.

**செல்பேசிக் கோபுரத்தின் பாதிப்புகள்**

செல்பேசியின் மின்நச்சுப் புகையை, செல்பேசியிலிருந்து வெளிவரும் மின்காந்தக் கதிர்வீச்சு என்றும் செல்பேசிக் கோபுரங்களில் இருந்து வெளியாகும் மின்காந்தக் கதிர்வீச்சு எனவும் இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒப்பீட்டளவில், செல்பேசிக் கோபுரங்களில் இருந்து வெளியாகும் மின்காந்தக் கதிர்வீச்சு மிக மோசமானதாகும்.

**செல்பேசி மின்காந்தக் கதிர்வீச்சு**

செல்பேசியிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு என்பது செல்பேசி இயங்குநிலையில் இருக்கும்போதும், காதுக்கு அருகில் வைக்கும்போதும், உடலோடு ஒட்டிய நிலையில் இருக்கும் போதும் ஏற்படும். இத்தகைய நிலைகளில் செல்பேசியில் இருந்து புறப்படும் கதிர்வீச்சு மனித உடலைத் தாக்கும். செல்பேசியை உரிய எச்சரிக்கையுடன் பயன்படுத்தினால் இந்தக் கதிர்வீச்சைத் தடுக்கலாம்.

**செல்பேசிக் கோபுர மின்காந்தக் கதிர்வீச்சு**

ஆனால், செல்பேசிக் கோபுரத்தின் கதிர்வீச்சு இருபத்துநான்கு மணிநேரமும் அதன் அருகே வசிப்போரைத் தாக்கிக்கொண்டே இருக்கும். இதிலிருந்து சுற்றுப்புறத்தில் வாழ்வோர் தப்ப முடியாது. செல்பேசிக் கோபுரத்திலிருந்து 50 மீற்றர் வரை இருப்பவர்களுக்கு இந்தக் கதிர்வீச்சால் கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்கின்றன சுகாதார ஆய்வுகள். மேலும் 300 மீற்றர் தூரம் வரைகூட பாதிப்பு இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மற்றபடி, இரண்டுவகை கதிர்வீச்சும் ஒரே மின்காந்தக் கதிர்வீச்சுதான் (Electromagnetic Radiation).

2009ஆம் ஆண்டு போர் முடிந்த பின்னர், இலங்கையில் செல்பேசி வர்த்தகம் மிக வேகமாக விருத்தி அடைய ஆரம்பித்தது. அந்தக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 40 செல்பேசிப் பரிவர்த்தனைக் கோபுரங்கள் இலங்கையில் நிறுவப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் 'எடிசலாட்' நிறுவனம் மட்டும் இலங்கை முழுவதும் 450 கோபுரங்களை எழுப்பப்போவதாக அறவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் எத்தனை கோபுரங்கள் இருக்கின்றன என்ற சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லையாயினும் பல ஆயிரக்கணக்கான கோபுரங்கள் ஏற்கனவே எழுப்பப்பட்டுள்ளன.

செல்பேசிக் கோபுரத்தின் கதிர்வீச்சினை வெப்பம் சார்ந்தக் கதிர்வீச்சு (Thermal radiation), வெப்பம் சாராக் கதிர்வீச்சு (Nonthermal radiation) என்று இருவகைகளாகப் பிரிக்கின்றனர். வெப்பம் சார்ந்தக் கதிர்வீச்சு என்பது சமைப்பதற்குப் பயன்படுத்தும் மைக்ரோ ஓவனில் வரும் வெப்பத்திற்கு ஈடானதாகும். செல்பேசியை காதுக்கு அருகே வைத்து நீண்ட நேரம் பேசினால் தலைசூடாவது இந்த வெப்பம் சார்ந்த கதிர்வீச்சினால்தான்.

வெப்பம் சாராக் கதிர்வீச்சு இதைவிட மிக மோசமானதாகும். இது மனித உடலின் மின்காந்தப் புலத்தைப் பாதிக்கிறது. இது உயிரியல் ரீதியிலான (biological) பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**செல்பேசிக் கதிர்வீச்சின் உடல்நல பாதிப்புகள்**

செல்பேசி மின்காந்தக் கதிர்வீச்சால் கடுமையான உடல்நலக் கோளாறுகள் ஏற்படுகின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான பன்னாட்டு முகமை (IARC) ''மனிதனுக்கு புற்றுநோயை ஏற்படுத்தும் வாய்ப்புள்ள'' கதிர்வீச்சாக செல்பேசிக் கதிர்வீச்சினை வகைப்படுத்தியுள்ளது. மூளைப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை செல்பேசிக் கதிர்வீச்சு ஏற்படுத்துவதாக அந்த அமைப்பு கூறுகிறது.

புற்றுநோய், ஆண்மைக் குறைவு, மூளையின் பாதுகாப்புத் தடுப்பில் பாதிப்பு, மரபணு பாதிப்பு, இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்தோருக்கு பாதிப்பு, உயிரணுப் பாதிப்பு, காதுக் கோளாறுகள், பார்வைக் குறைவு, எலும்புகள் வலுவிழத்தல், நோய் எதிர்ப்பு சக்திக் குறைவு, தூக்கம் குறைதல், குழந்தைகள் பாதிப்பு, கருவுற்ற தாய்மார்களுக்குப் பாதிப்பு, தூக்கமின்மை என ஏராளமான பாதிப்புகளை செல்பேசிக் கதிர்வீச்சு ஏற்படுத்துகிறது.

**மும்பையில் மூளைப் புற்றுநோய்க்கு காரணமான செல்பேசிக் கோபுரம்**

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரான மும்பையின் கார்மிகேல் சாலையில் உள்ள 'விஜய் அப்பார்ட்மென்ட்ஸ்' எனும் கட்டடத்தின் ஏழாவது தளத்தில் ஏராளமான செல்பேசிக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு நேர் எதிரிலேயே உஷா கிரண் கட்டடம் எனும் பலமாடி அடுக்குக் குடியிருப்பு இருந்தது. உஷாகிரண் குடியிருப்பின் 6 முதல் 10 வரையிலான தளங்கள் விஜய் அப்பார்ட்மென்ட்டின் செல்பேசிக் கோபுரத்திலிருந்து 50 மீற்றர் தொலைவுக்குள் நேரடித் தாக்கத்துக்கு ஆளாகின. மூன்றே ஆண்டுகளில் உஷாகிரண் கட்டடத்தின் 6, 7, 8 மற்றும் 10 ஆவது மாடியில் வசித்தோரில் 6 பேர் புற்றுநோயால் தாக்கப்பட்டுள்ளனர். இதுபோன்று கண்டறியப்படாமல் ஏராளமான புற்றுநோயாளிகளை செல்பேசிக் கோபுரங்கள் உருவாக்கிக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**ஆண்மைக் குறைவு**

செல்பேசிக் கதிர்வீச்சால் அதிக அளவில் ஆண்மைக் குறைவு ஏற்படுகின்றது. எந்த அளவுக்கு அதிகமான நேரம் செல்பேசிகளை ஆண்கள் பயன்படுத்துகின்றனரோ அந்த அளவுக்கு ஆண்மைக் குறைவின் தாக்கம் அதிகரிக்கும். ஆண்களின் விந்தணுவின் தரம் குறைதல், உயிரணு எண்ணிக்கை குறைதல் எனப்பல பாதிப்புகள் செல்பேசிக் கதிர்வீச்சால் ஏற்படுகின்றது.

**மூளையின் பாதுகாப்புத் தடுப்பில் பாதிப்பு**

மனித மூளையில் இரத்த ஓட்டத்திற்கும் மூளையின் திசுக்களுக்கும் இடையே மெல்லிய தடுப்புச் சுவர் அமைந்துள்ளது. இரத்த மூளைத் தடுப்பு (Blood Brain Barrier) எனப்படும் இந்த அமைப்பு இரத்தத்தில் உள்ள சத்துக்களில் தேவையானவற்றை மட்டுமே மூளைக்குள் அனுமதிக்கின்றன. மிகமுக்கியமான இந்தப் பாதுகாப்புச் சுவர் செல்பேசிக் கதிர்வீச்சால் பாதிப்படைகிறது. தேவையில்லாத நுண்ணூட்டங்கள் உள்ளே செல்லும் வாய்ப்பு உருவாக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகப் பலவிதமான மூளைப் பாதிப்புகள் தாக்குகின்றன.

**மரபணு பாதிப்பு**

செல்பேசி நுண்ணலைகளால் மனித மரபணு பாதிப்படைகிறது. டி.என்.ஏ சேதமடைதல், தன்னைத்தானே சீரமைத்துக்கொள்ளும் ஆற்றலைக் குறைத்தல் போன்ற பல விளைவுகள் நேருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மனித உயிரணுக்களில் ஏற்படும் சேதம் காலப்போக்கில் புற்றுநோயாகவும் மாற்றமடைகிறது.

**இருதய அறுவைச் சிகிச்சை செய்தோருக்கு பாதிப்பு**

விமானங்களின் தகவல் தொடர்பை செல்பேசி பாதிக்கிறது என்பதால் விமானப் பயணங்களின்போது செல்பேசியை அணைத்து வைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதேபோன்றுதான் மருத்துவமனைகளில் உள்ள பலவிதமான மின்னணுக் கருவிகளின் செயற்பாட்டை செல்பேசி பாதிக்கிறது. இதனால் தீவிர சிகிச்சைப் பிரிவு போன்ற சிக்கலான மருத்துவ இடங்களில் செல்பேசி அணைத்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இருதய அறுவை சிகிச்சையின் போது 'பேஸ் மேக்கர்' கருவி பொருத்தப்பட்டோருக்கு செல்பேசிகள் மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். செல்பேசியை இயக்கும் போது அளிக்கப்படும் மின்னணுக் கட்டளைகள் பேஸ்மேக்கர் கருவியின் செயல்பாட்டில் தலையிட்டு தவறான கட்டளைகளைக் கொடுத்து பேஸ்மேக்கர் கருவியை தாறுமாறாக இயக்கச் செய்யும் வாய்ப்பு உள்ளதாக அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

**காதுக் கோளாறுகள்**

செல்பேசிகளால் காது கேட்கும் திறன் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, 'ரிங்சியெட்டி' எனப்படும் ஒன்றுமில்லாமல் இறைச்சல் சத்தம் காதுக்குள் கேட்கும். இப்படிப்பட்ட துன்பத்தால் பல லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காதின் கேட்கும் திறன் என்பது காதுக்குள் இருக்கும் 16,000 இழை உயிரணுக்களின் நலத்தைப் பொறுத்ததாகும். இந்த இழை உயிரணுக்கள் செல்பேசிக் கதிர்வீச்சால் சேதமடைகின்றன. இவை மீண்டும் வளருவது நின்றால் கேட்கும் திறன் குறைய ஆரம்பித்துவிடும். தினமும் இரண்டு முதல் மூன்று மணி நேரம் செல்பேசியில் பேசுபவர்கள் மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் கேட்கும் திறனைக் கணிசமாக இழந்து போவார்கள் என ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

**கண்கள் பாதிப்பு**

தொடர்ச்சியாக செல்பேசியில் பேசுவது கண்களைக் கடுமையாகப் பாதிக்கக் கூடியதாகும். செல்பேசியை தலைக்கு அருகிலேயே வைத்துப் பேசும்போது அதிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சால் தலை சூடாகிறது. எனினும் தலைப்பகுதியில் அதிக இரத்த ஓட்டம் ஏற்பட்டு இந்த வெப்பம் மற்றப் பகுதிகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதனால் தலை, காதுப் பகுதிகள் சூட்டிலிருந்து ஓரளவுக்கு தப்புகின்றன. ஆனால், இதுபோன்ற பாதுகாப்பு ஏற்பாடு கண்ணில் இல்லை.

மனித விழியில் சரளமான இரத்த ஓட்டம் இல்லாததால், செல்போன் கதிர்வீச்சால் கண்ணில் ஏற்படும் வெப்பம் கண்ணை சூடாக்குகிறது. வெப்பத்தின் அளவு மிக அதிகமாகும் போது விழித்திரை பாதிப்படைகிறது. பார்வைக் குறைபாடுகள் நேருகின்றன.

**எலும்பு பாதிப்பு**

மனித எலும்பு தேய்வதற்கு செல்பேசிகள் காரணமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இடுப்பில் செல்பேசியை அணிந்து செல்வோரை மருத்துவ ஆய்வாளர்கள் ஆராய்ந்து பார்த்ததில், அவ்வாறு அணியாதவர்களைவிட அதிகமாக இடுப்பு எலும்புப் பகுதி தேய்ந்திருப்பதைக் கண்டறிந்துள்ளனர். எனவே, மனித உடலில் இருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு தொலைவில் செல்பேசிகளை வைக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

**தூக்கமின்மை**

செல்பேசிகளால் ஏற்படும் மிகப்பெரிய பாதிப்பு தூக்கமின்மை. குறிப்பாக நான்காம் கட்ட தூக்கம் எனப்படும், மனித உடலும் மூளையும் தன்னைதானே சீரமைத்துக் கொள்ளும் தூக்கத்தை செல்பேசிகள் கெடுப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**செல்பேசிக் கதிர்வீச்சு தூக்கத்தைக் கெடுக்கும்**

தூங்குவதற்கு முன்பு செல்பேசியில் பேசுவதால் தூக்கம் கெடுகிறது. தலைவலி, மன அழுத்தம் ஏற்படுகிறது. குறிப்பாக, இளைஞர்கள் தூங்குவதற்கு முன்பு செல்பேசியில் பேசுவதும், செல்பேசியை தலைக்கு அருகில் வைத்துத் தூங்குவதும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மன அழுத்தம், படிப்பில் கவனமின்மை, ஆளுமையில் மாற்றம் எனப் பல கேடுகள் நேருகின்றன.

**குழந்தைகள் பாதிப்பு**

செல்பேசியாலும், செல்பேசிக் கோபுரங்களாலும் சிறுவர்களும் குழந்தைகளுமே அதிகமாக பாதிப்படைகின்றனர். குழந்தைகளின் சிறிய தலை, சிறிய அளவில் மூளை, முழுமையாக வளர்ச்சியடையாத எலும்புகள், மென்மையான தோல், மெல்லிய செவி என அனைத்தும் அதிக அளவுக்கு மின்காந்த கதிர்வீச்சால் பாதிப்படைகின்றன.

குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் - கதிர்வீச்சின் பாதிப்புகள் அவர்களை எளிதில் தாக்குகின்றன. செல்பேசிக் கருவிகளை வைத்து விளையாடும் குழந்தைகள் ஞாபக சக்திக் குறைவு, கவனக் குறைவு, கற்கும் திறன் குறைவு உள்ளிட்ட பலவிதமான பாதிப்புகளுக்கு ஆளாவது உறுதி செய்யப்பட்டுள்ளாது. எனவேதான், பெரும்பாலான மேற்குலக நாடுகள் 16 வயதுக்கு கீழுள்ளவர்கள் செல்பேசியை பயன்படுத்த வேண்டாம் என வெளிப்படையாக அறிவுறுத்துகின்றன.

**பெண்கள் பாதிப்பு**

கருவுற்ற தாய்மார்கள் செல்பேசியைப் பயன்படுத்துவதும், செல்பேசிக் கோபுரங்களுக்கு அருகில் வசிப்பதும் மிக ஆபத்தானதாகும். கருவுற்ற தாய்மார்கள் செல்பேசி பேசுவதால் கருச்சிதைவு ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறே, பிறந்த குழந்தைகளிடம் நடத்தை மாற்றம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இப்படியாக - மனிதர்களுக்கு எண்ணற்ற பாதிப்புகளை செல்பேசி மின்காந்தக் கதிர்வீச்சு ஏற்படுத்துகிறது. குறிப்பாக குழந்தைகள், சிறுவர்கள், கருவுற்ற தாய்மார்கள் அதிகம் பாதிப்படைகின்றனர்.

**செல்பேசிக் கோபுரம் : 24 மணி நேரக் கதிர்வீச்சு**

செல்பேசிகள் சில மணி நேரப் பயன்பாட்டால் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றால், செல்பேசிக் கோபுரங்கள் அதைவிட பலமடங்கு அதிகமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன. செல்பேசிக் கோபுரத்திலிருந்து ஒவ்வொரு நாளும் இருபத்தி நான்கு மணி நேரமும் மிக அதிக அளவான கதிர்வீச்சு வெளிவந்துகொண்டே இருக்கிறது. இதனால் செல்பேசிக் கோபுரங்களுக்கு அருகில் வசிப்பவர்கள் எல்லா நேரமும் கதிர் வீச்சால் தாக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதகாலம் பெண்மைக்கு பெருமையா? சிறுமையா?

ஆயுள்வேதத்தின் பழமையை என்னிடம் சிகிச்சைக்கு வரும் பெண்களிடம் விவாதிக்கும்போது, அவர்கள் பெரும்பாலும் எழுப்பும் முதல் கேள்வி, ''அந்தக் காலத்தில் அதாவது வேதகாலத்தில் தான் பெண்களை அடிமைகளாக நடத்தினார்களே! அதன்பின்னர் ஆயுள் வேதம் பெண்களைப் பற்றி பெரிதாக என்ன சொல்லி யிருக்கப் போகிறது? என்பது தான்.

மனுதர்ம சாஸ்திரத்தில் இருக்கும் ஒரு குறிப்பை வைத்துக்கொண்டு, 'வேதகால சமுதாயம் பெண்அடிமைச் சமுதாயமாக இருந்தது' என பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மனு அப்படி என்ன சொன்னார்? 'பெண் என்பவள் எப்போதும் சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்பட்டவள் அல்லள். குழந்தைப் பருவத்தில் தந்தை, இளமையில் கணவன், வயதானதும் மகன் என எப்போதும் ஒரு ஆடவரின் கண்காணிப்பில் அவள் வாழவேண்டும் என்றார்.

இதன் கருத்து, பெண் அடிமையாக வைக்கப்பட வேண்டியவள் என்பதல்ல. அவள் பாதுகாப்பாகப் பராமரிக்கப்பட வேண்டிய பொக்கிஷம் என்பது தான்.

இதை இப்படி விளக்கலாம் ... ஒரு கைதி சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு கூட்டிவரப்படுகிறான். துப்பாக்கி ஏந்திய பொலீஸ் அவன் கூடவே வர, பாதுகாப்போடு வருகிறான் அவன். ஒரு அமைச்சர் ஏதோ விழாவுக்கு வருகிறார். அவருக்குத் தீவிரவாதிகளால் ஏதாவது ஆபத்து வரக்கூடும் என்று எப்போதும் அவரோடு செக்யூரிட்டிக்காக பொலீஸ் இருக்கிறது. பொலீஸ் கூட வராமல் அவரால் எங்கும் போகமுடியாது.


நினைத்துப் பாருங்கள், கைதி, அமைச்சர் இரண்டு பேருமே பொலீஸ் பாதுகாப்போடுதான் வலம் வருகிறார்கள். அதற்காக இரண்டு பேருமே ஒன்று என தீர்மானிக்க முடியாது.

இந்த அமைச்சரை எப்படி போலிஸ் பாதுகாக்கிறதோ அப்படி ஒரு பெண்ணை தந்தையும், கணவனும், மகனும் முறை பிரித்து வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்பதைத் தான் மனு சொல்ல வந்தது. சொல்லப் போனால் ஆண்களுக்கு மனு கொடுத்திருப்பது பாதுகாப்பு பணி தான். 'சுதந்திரமாக விடக்கூடாது' என்றால் நிராதரவாக விட்டுவிடக் கூடாது என்று தான் கருத்து.

இதே மனு இதே சாஸ்திரத்தில் இன்னொரு இடத்தில், 'எங்கெல்லாம் பெண்கள் பூஜிக்கப்படுகிறார்களோ அங்கே தான் சகல தேவதைகளும் வசிக்கும் ' என்கிறார். இதை அனேகம் பேர் மறந்துவிடுகிறார்கள்.

சொல்லப் போனால் வேதகாலத்தில் இருந்த மாதிரி பெண்களுக்கான ஆரோக்கியமான நிலைமை அதன் பிறகு இல்லை. பெண்குழந்தைகளை குப்பைத் தொட்டியில் தூக்கியெறியும் கொடுமை அப்போது இல்லை. குழந்தைகளை ஆண், பெண் என வித்தியாசம் பார்த்ததில்லை. அகத்திய முனிவரின் மனைவியான லோபமுத்ரா, யக்ஞவல்கியரின் மனைவி மைத்ரேயி, கார்கி என பல பெண் அறிஞர்கள் வேத மந்திரங்களை அருளியிருக்கிறாரர்கள். வேள்விகள், பூசைகள் செய்யும் உரிமையும் பெண்களுக்கு இருந்தது. 'தம்பதி' என்ற சமஸ்கிருத வார்த்தையின் அர்த்தமே, 'ஒரு வீட்டின் பொறுப்புக்களை சரிபாதியாக பிரித்து சுமக்கும் இரண்டு குடும்பத் தலைவர்கள் என்பதுதான்.


'மண்ணை மதிக்கிற மாதிரி பெண்ணை மதிக்க வேண்டும்' என்ற பழமொழிவிதைக்கப்பட்டதும் இங்கு தான்! மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் முதலிடம் அம்மாவுக்குத்தான்



சுகி.சிவம்



# 100 ஆண்டு கடந்த கல்விச் சேவையில் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி.




கோப்பாய்த் தொகுதியில் உள்ள தரம் இரண்டு பாடசாலைகளில் முன்னணிப்பாடசாலையாக விளங்கியது வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாசாலை. வாதரவத்தை, வீரவாணி, பெரியபொக்கணை ஆகிய மூன்று மக்கள்குடியிருப்பு கிராமங்களுக்கும் நடுவிடத்தில் அமைந்துள்ளது. மூன்று உபகிராமங்களையும் உள்ளடக்கிய புத்தூர் வாதரவத்தையில் அமைந்துள்ள ஒரே ஒரு பாடசாலை இது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் வாதரவத்தை கிராமத்தின் அமைவிடமும் நிலைய முக்கியத்துவமும் தனித்துவமான இயல்புகளைக் கொண்டன. யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான நெடுஞ்சாலையில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வாதரவத்தை வீதியில் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது வாதரவத்தை கிராமம். வலி.கிழக்கு பிரிவு 10 கிராமத் தலைமைக்காரர் (விதானை) பிரிவுகளாக இருந்த காலப்பகுதியில் ஆவரங்கால் கிழக்கு பிரிவில் உள்ளடங்கி இருந்தது. கிராம அலுவலர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்ட வேளையில் வாதரவத்தை கிராமம் தனி ஒருகிராம அலுவலர் பிரிவாக வேறுபடுத்தப் பட்டது. மாரிகாலத்தில் மக்கள் குடியிருப்புக்கள் நீரால் சூழப்பட்டு சிறுதீவுகள் போல் காணப்படும்.

வாதரவத்தை விக்கினேஸ்வரா முன்பள்ளி; வீரவாணி ஞானவாணி முன்பள்ளி; பெரிய பொக்கணை கணேசமுன்பள்ளி மூன்றிலும் பயிலும் பிள்ளைகள் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்து கொள்கின்றனர்.

100 ஆண்டுகளைக் கடந்து சமூகத்தின் முழு நம்பிக்கையையும் தனித்துவமான முறையில் பெற்று விளங்கும் வித்தியாலயத்தின் பூர்வீக வரலாறும் புதுமையானது. 1900 ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதியில் வாதரவத்தை கிராமத்தின் கல்வித் தேவையை உணர்ந்து திண்ணைப்பள்ளி அமைத்து எண்ணும், எழுத்தும் சைவசமயமும் போதிக்கப்பட்டு வந்தன. இதனை ஐயம்பிள்ளை வல்லிபுரம் மேற்கொண்டு வந்தார். உள்ளூர் பிரமுகரான இவரின் காலத்துக்கு ஏற்ற கல்விப் பணியை வரவேற்று ஊரவர்கள் பயின்று வந்தனர். அதுவே விக்கினேஸ்வராவின் பூர்விக கட்டமைப்பாகும்.

மெதடிஸ்த திருச்சபையினர் புத்தூரில் கால்பதித்து சமூக சமயப் பணியை முன்னெடுத்ததோடு உள்ளூர் மாணவர்களுக்கு கிறிஸ்தவ பாரம்பரியத்தோடு கூடிய கல்வியைப் புகட்டுவதற்கு வாய்ப்பாக ஆவரங்காலில் செயற்பட்ட பாடசாலையைக் கொள்வனவு செய்து (தற்போதைய மகாஜனவித்தியசாலை) ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலை; புத்தூர் மெதடிஸ்தமிஷன் பாடசாலை ஆகியவற்றுடன் வாதரவத்தையிலும் செயற்பட்ட திண்ணைப் பாடசாலையை பெற்று, 1910 ஆம் ஆண்டு நிறுவன மயப்படுத்தப்பட்ட முறையில் வாதரவத்தை மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்ற பெயருடன் கல்விப்பணியை மேற்கொண்டனர்.

> 1910 ஆம் ஆண்டில் இருந்து நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விக்கூடமாக ஓலைக் கொட்டிலில் செயற்பட்டு வந்த பாடசாலை 1962ஆம் ஆண்டு அரசால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலை ஆனது. அரச பாடசாலை ஆனதை அடுத்து பாடசாலைக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கவேண்டும் என்ற தேவை வலியுறுத்தப்பட்டது.

50 ஆண்டுகள் வரையில் மெதடிஸ்தமிஷன் பாடசாலை என்ற வகையில் வாதரவத்தையில் செயற்பட்ட போதிலும் மக்கள் தங்களுக்குத் தேவையான கல்வியைத் தாராளமாக பெற்றுக்கொண்ட போதிலும், யாரும் சமயம் மாறியதாகவோ கிறிஸ்தவ சமயத்தில் பற்றுக் கொண்டு செயற்பட்டதாகவோ அறிய முடியவில்லை. குறித்த காலப் பகுதியிலும் தற்பொழுதும் வாதரவத்தை பகுதியில் கிறிஸ்தவ குடும்பங்கள் எதுவும் இல்லை. கிறிஸ்தவ தேவாலய கட்டமைப்பும் அங்கு இல்லை. முற்று முழுதாக தூய சைவப் பாரம்பரியத்தோடு கூடியவர்களாகவே யாவரும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆரம்பகாலத்தில் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையாகவே வாதர வத்தை மெதடிஸ்தமிஷன் பாடசாலை செயற்பட்டு வந்தது. வாதரவத்தை, பெரிய பொக்கணை, வீரவாணி கிராமங்களை சேர்ந்த மாணவர்கள் ஆரம்பக் கல்வியை தமது கிராமத்தில் உள்ள பாடசாலையில் கற்று தேறியபின்னர் 5 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட தரநிலை வகுப்புக்கான கல்வியை பெற்றுக் கொள்வதற்கு கிராமத்து வெளியே சென்றனர்.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி செயற்படத் தொடங்கிய பின் அங்கு தமக்கான கல்வியை வகுப்பு 6 இல் இருந்து கற்றுக் கொண் டனர். உடல் உழைப்பாலும், கல்வியாலும் உயர்ந்த வாதரவத்தை மற்றும் வீரவாணி, பெரியபொக் கணை கிராமங்களை சேர்ந்த மக்கள் பொதுப் போக்குவரத்து வசதி குறைந்த நிலையில் ஐந்து கிலோ மீற்றருக்கு குறையாத தூரம் நடந்தோ புத்தூர் உள்ளிட்ட அயல்கிராமங்களுக்கு சென்று தமது கருமங்களை மேற்கொண்டுவருவதையோ இன்றும் சாதாரணமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

1910 ஆம் ஆண்டில் இருந்து நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விக்கூடமாக ஓலைக் கொட்டிலில் செயற்பட்டு வந்த பாடசாலை 1962 ஆம் ஆண்டு அரசால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலையானது. அரச பாடசாலை ஆனதை அடுத்து பாடசாலைக்கான நிரந்தர கட்டடம் அமைக்கவேண்டும் என்ற தேவை வலியுறுத்தப்பட்டது. 950 சதுர அடி பரப்பளவு கொண்ட நிரந்தரக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அதை அடுத்து கோப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் 'சிந்தனைச் சிற்பி' சி.கதிரவேற்பிள்ளை அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இரண்டு புதிய கட்டடத் தொகுதிகள் 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டன.

மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கி வந்த பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக மாறியதை அடுத்து 1966 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விக்கி னேஸ்வரா வித்தியாலயம் என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. 1970 ஆம் ஆண்டு இடை நிலை வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றதை அடுத்து இடை நிலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பப் பிரிவில் சித்தியடையும் மாணவர்கள் தொடர்ந்து இடைநிலை வகுப்புக்களில் இணைந்து கல்வியைக் கற்றனர்.

1974 ஆம் ஆண்டு முதற்தடவையாக தேசிய மட்டத்தில் நடைபெற்ற என்.சீ.ஜீ.ஈ. பரீட்சைக்கு தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பெரும்பாலானவர்கள் உயர்பெறு பேறுகளுடன் சித்தியடைந்தனர். தொடர்ந்து தரம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. பாடசாலைச் சமூகம் பாடசாலை மீது அதீத நம்பிக்கை கொண்டிருப்பதோடு தமது பிள்ளைகளை க.பொ.த.சாதாரண வகுப்பு வரை உள்ளூர் பாடசாலையில் கற்பதற்கு விருப்பத்தோடு இடமளித்து வருகின்றனர்.

அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாக விளங்கும் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 300 மாணவர்கள் வரையில் கல்வி கற்கின்றனர். பாடசாலையின் தற்போதைய அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் இரண்டைச் சேர்ந்த ஜே.ஏ.தவநாயகம் கடமையாற்றி வருகின்றார்.

ஞானி

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குப் பெட்டிகள் நேற்று கிழக்கில் விநியோகம்

மட்டக்களப்பு,செப்.7
கிழக்கு மாகாணசபைத் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்களிப்புப் பெட்டிகள் விநியோகம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,47,099 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அசங்க ரத்நாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா தேர்தல் தொகுதியில் 100, 616 வாக்காளர்களும், மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியில் 162,451 வாக்காளர்களும், பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 84,032 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் கிழக்கு மாகாண சபை தேர்தல் நடைபெறவுள்ளது என்று அவர் கூறினார். மட்டக்களப்பு மாவட் டத் தில் 414 வாக்களிப்பு நிலையங்களும், 38 வாக்குகள் எண்ணும் நிலையங்களும் இயங்கவுள்ளன. இவற்றில் நான்கு வாக்கெண் ணும் நிலையங்கள் தபால் மூல வாக்காளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன என்று அவர்கூறினார். (ச)



# அம்பாறையில் 34 அணிகள் களத்தில்

## 14 பேர் தெரிவுக்கு 578 வேட்பாளர்கள் போட்டி

**வேட்பாளர்களுக்கிடையிலும், கட்சி ஆதரவாளர்களுக்கிடை யிலும் அடிதடி சண்டை தொடர்கிறது.**

அம்பாறை,செப்.7
அம்பாறை மாவட்டத்தில் 14 உறுப்பினர் களைத் தெரிவுசெய்வதற்காக 16 பதிவு செய்யப்பட்ட அர சியல் கட்சிகளும், 18 சுயேச் சைக் குழுக்களுமாக 34 அணிகளில் 578 வேட்பாளர் கள் போட்டியிடுகின்றனர்.

இதில் 257 முஸ்லிம் வேட்பாளர்களும், 174 சிங்கள வேட்பாளர்களும், 147 தமிழ் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் நீண்ட வாக்குச் சீட்டு அமைந்துள்ளது. இறுதிக்கட்ட தேர்தல் நடவடிக்கைகள் அம்பாறை மாவட்டத்தில் சூடு பிடித்துள்ள நிலையில், வேட்பாளர்களுக்கிடையிலும், கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலும் அடிதடி சண்டை தொடர்கிறது.

சிலர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குருநாகல் மாவட்ட கழிவுகளை அகற்ற மத்திய நிலையங்கள்

**நிர்மாணப் பணிகளுக்காக 138 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

குருநாகல்,செப்.7
குருநாகல் மாட்டத்தில் பொல்பிதிகம, மாஹோ, அளவ்வ மற்றும் ரிதிகம ஆகிய நகரங்களில் திண்மக் கழிவகற்றும் முகாமைத் துவ மத்திய நிலையங்கள் நிர் மாணிப்பதற்கு வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்றத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று வட மேல் மாகாண ஆணையாளர் டபிள்யூ. எம். எம். பீ. வீரசேகர தெரிவித்தார்

இந்த நகரங்களில் அந்தந்த பிரதேசங்களில் தினசரி சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி மக்களுக்கு தேவையான சேதனப் பசளை தயாரித்ததலையும் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளலையும் நோக்கமாகக் கொண்டே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் கூறினார்.

இந்த மத்திய நிலையங்கள் நிர்மாணப் பணிகளுக்காக 138 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# தென்கிழக்கு பல்கலையில் புதிதாக பொறியியல் பீடமும்

**4828 மாணவர்களைக் கூடுதலாக சேர்த்துக் கொள்ளும் பல்க்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்மொழிவை உயர்நீதி மன்றம் அங்கீகரித்தது.**

அம்பாறை,செப்.7
உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய அடுத்த கல்வியாண்டில் கூடுதலான மாண வர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக, ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிய பொறியியல் பீடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று அதிகாரிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்தனர்.

4828 மாணவர்களைக் கூடுதலாக சேர்த்துக் கொள்ளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்மொழிவை உயர்நீதி மன்றம் அங்கீகரித்தது. இதற்கமைய மாணவர் அனுமதி எவ்வித தயக்கமுமின்றி அதிகரிக்கப்படும் என்று உயர் கல்வி அமைச் சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்தார்.

குறைந்தபட்சம் 200 மாணவர்களை அனு மதிப்பதற்காக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீடத்தை நிறுவத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் கூறினார்.

திடீரென இவ்வளவு அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது பல்க லைக் கழக முறைமையில் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. இதையிட்டு பல்க லைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவுடன் பேசப்படும் என்று துணைவேந்தர்களின் குழு தெரிவித்துள்ளது.

மருத்துவம், பொறியியல் ஆகியன அதிக செலவுள்ள பட்டப்படிப்புகளாகும், இவற்றுக்கு கூடுதல் மாண வர்களைச் சேர்ப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் தேவை என்று அக்குழு வின் தலைவர் றுகுணு பல்கலைக்கழகத் துணைவேந்தர் சுசிரித் மெண்டிஸ் கூறினார். (ச)



கல்முனையில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாகிப்பால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விசேட திட்டம்

கண்டி,செப்.7
கண்டி நகருக்குச் செல்லும் இந்திய மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கண்டிப் பொலிஸார் விசேட திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பீ எம். ஏம். பெரமுனே மற்றும் கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி எல்லே பொல ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய விசேட பொலிஸ் குழு இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கையர்கள் தாக்கப்பட்டமையை அடுத்து இந்தப் புதிய திட்டம் கண்டியில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மூன்று மாகாணங்களிலும் பாடசாலைகள் இன்று இயங்கா

மட்டக்களப்பு,செப்.7
மாகாணசபைத் தேர்தல்களை முன்னிட்டு சப்ரகமுவ, வடமத்தி, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் இன்று வெள்ளிக்கிழமை மூடப்படவுள்ளன என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாளை சனிக்கிழமை சப்ரகமுவ, வடமத்தி, கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தல்கள் நடை பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

# மேல் மாகாணத்திலும் டெங்கு பரவும் அபாயம்

மேல் மாகாணத்தில் டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவும் அபாயம் நிலவுவதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது நிலவும் வானிலை காரணமாக நுளம்புகள் அதிகளவில் பெருகுவதற்குச் சாதகமான நிலை நிலவுவதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ச)

# மு.கா.ஆதரவாளர்கள் சாந்தமருதில் கைகலப்பு

கொழும்பு,செப்.7
அம்பாறை, சாய்ந்தமருதுப் பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவுக் குழுக்களுக்கு இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைகலப்பு இடம்பெற்றமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தாக்குதலுக்கு உள்ளான ஒரு வேட்பாளரின் ஆதரவாளர் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கல்முனைப் பொலிஸார் கூறினர்.

இந்தக் கைகலப்புச் சம்பவம் தொடர்பில் கல்முனைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

# துப்பாக்கிகள் வைத்திருந்தவர் பொலிஸாரிடம் சிக்கினார்

மாத்தளை,செப்.7
துப்பாக்கிகள் இரண்டை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்படுள்ளார்.

இவர் வலிப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பது மில்லி மீற்றர் துப்பாக்கி ஒன்றும், ரி - 56 ரக துப்பாக்கி உருண்டைகளும், ரிவோல்வர் ஒன்றும் இதன்போது பொலிஸரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மாத்தளை இராணுவ முகாம் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போதே இந்தச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மாத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ச)

# மாணவர்களுக்கு கருத்தரங்கு

மட்டக்களப்பு,செப்.7
மட்டக்களப்பு தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி நிறுவனத்தால் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு மியானியில் கல்வி பயிலும் தகவல் தொழில்நுட்ப மாணவர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப யுகம் எனும் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் தற்போதைய காலகட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மைக்ரோ சொப்ட் மற்றும் சிஸ்கோ தொழில்நுட்பத் துறைகளில் எவ்வாறு மாணவர்கள் தங்களது திறனை வளர்த்துக்கொள்ளுதல் குறித்து மாணவர்களுக்கு செயன்முறையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டது. (ச)

# ரயில் மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பு, சித்தாண்டி விநாயகக் கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ரயில் மோதி சம்பவ இடத்திலேயே ஒருவர் மரணமடைந்துள்ளார். சித்தாண்டி, விநாயகக் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சின்னத் தம்பி கணேசமூர்த்தி (வயது 47) என்பவரே இவ்வாறு இறந்துள்ளார். மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டி ருந்த கடுகதி ரயில் இவர் மீது மோதியதாகத் தெரிவிக்கப்படுகின் றது. வேலைக்குச் சென்று வீடு திரும்பிய இவர், ரயில் பாதையை கடக்க முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீண்டநாள் எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். செயல்களில் உற்சாகம் பெறுவீர்கள். தொழிலில் அனுகூலம் ஒரு சேரக் கிடைக்கும். பணப் பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. நீண்டநாள் தேடிய பொருள் இருக்கும் இடம் அறிவீர்கள்.

**இடபம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பண வரவு பெறுவதில் தாமதம் உண்டு. கருணை மனம் இல்லாதவரிடம் உதவி கேட்கக் கூடாது. உடல் நலம் சிறக்க, ஊட்டம் தரும் உணவு உண்பது நல்லது. வெளியூர் பயணம் ஏற்படலாம்.

**மிதுனம்:** இனிய எண்ணங்களால் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் இருந்த தாமத நிலையை சரி செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். போட்டி, பந்தயத்தில் அனுகூலம் ஏற்படலாம். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப்போகிற நன்னிலை உண்டு.

**கடகம்:** உயர்ந்த எண்ணங்களை செயற்படுத்துவீர்கள். திகைப்பு தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில் சிறந்து தாராள பண வரவு கிடைக்கும். உறவினர் கேட்ட உதவியை மனமுவந்து தருவீர்கள். தகவல் தொழில் நுட்பத் துறையில் பணி புரிபவர்கள் கூடுதல் மதிப்பு, மரியாதை பெறுவர்.

**சிங்கம்:** உங்களின் பொறுப்பான செயல் தவறாக விமர்சிக்கப்படலாம். பொறுமை காப்பதால் பெருமை தேடிவரும். தொழில் இரகசியம் பிறரிடம் சொல்லக் கூடாது. குடும்பத் தேவையை நிறவேற்ற சிறு அளவில் பணக் கடன் பெறுவீர்கள். உறவினர் வருகையால் சொந்தப் பணியில் தாமதம் ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தில் எவருடனும் வாக்கு வாதம் கூடாது. தொழிலில் இடையூறு செய்ய சிலர் முயற்சிப்பர். தவிர்க்க இயலாத பணச் செலவு ஏற்படலாம். நம்பகத்தன்மை இல்லாதவருக்கு வாகனத்தில் இடம் தரக்கூடாது. தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறையை அவசியம் பின்பற்ற வேண்டும்.

**நாளை**

ஆவணி - 23 சனிக்கிழமை 08.09.2012
திதி:அட்டமி முழுவதும்
நட்சத்திரம்: ரோகிணி மு. இ 08.43 வரை
சுபநேரம்: 03.04- 04.34 வரை
ராகு காலம்: 09.04- 10.34 வரை

**துலாம்:** உழைப்பின் மீதான நம்பிக்கை வளரும். தெழில் சிறக்க புதிய நடைமுறை பின்பற்றுவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும். உறவினர், நண்பர்களிடம் பாராட்டுப் பெறுவீர்கள். பூர்வ சொத்துக்களில் கிடைக்கிற பண வருமானம் உயரும்.

**விருச்சிகம்:** பிறரை வசீகரிக்கும் ஆற்றல் பெறுவீர்கள். தொழில் வளர முக்கிய காரணி பலம் பெறும். ஆதாய பணவரவில் வீட்டு சாதனப் பொருள் வாங்குவீர்கள். உறவினர் நன்மதிப்புடன் நடத்துவர். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும். மாணவர்கள் படிப்பில் நல்ல தர தேர்ச்சி அடைவர்.

**தனுசு:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். இருப்பினும் பிறருக்கு உதவுவதில் மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தொழிலில் மாறுப்பட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு பின்பற்ற வேண்டும். வெளியூர் பயணம் ஏற்படலாம்.

**மகரம்:** குடும்ப விடயம் பற்றி பிறரிடம் விவாதிக்க கூடாது. முக்கிய பணி தாமதம் ஆவதால் பிற வேலைகளை நிறைவேற்றலாம். சக தொழில் சார்ந்த ஒருவர் உதாசீனமாக நடந்து கொள்வார். வீண் கௌரவத்தினால் உடல் நலத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

**கும்பம்:** சுயமுயற்சியால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். தொழிலில் இருந்த போட்டி, பொறாமை குறையும். பணவரவு அதிகரிக்க முக்கியமான ஒருவர் உதவுவார். நிலம் தொடர்பான வகையில் அனுகூல பலன் உண்டு. குடும்ப உறுப்பினர் பாசத்துடன் செயற்படுவர்.

**மீனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும். திட்டமிட்ட பணிகளில் சில மாற்றம் செய்ய நேரிடலாம். நண்பரின் ஆலோசனை வாழ்வு சிறக்க புதிய வழி காட்டும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9 | | | 5 | 3 |
| 1 | 8 | | 4 | | | 9 | | |
| 2 | | | 5 | 6 | 1 | | 7 | 4 |
| | 4 | | | 7 | | | | |
| 6 | | | 8 | | 9 | | | 5 |
| | | | | 5 | | | 4 | |
| 7 | 2 | | 3 | 1 | 6 | | | 8 |
| | | 1 | | | 4 | | 2 | 6 |
| 8 | 3 | | | 2 | | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 5 | 7 | 3 | 2 | 4 | 9 | 8 |
| 7 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 | 2 | 3 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 8 | 7 | 1 | 5 |
| 8 | 4 | 1 | 6 | 7 | 9 | 5 | 3 | 2 |
| 9 | 5 | 2 | 3 | 8 | 4 | 1 | 6 | 7 |
| 6 | 7 | 3 | 2 | 1 | 5 | 8 | 4 | 9 |
| 4 | 1 | 7 | 8 | 9 | 3 | 2 | 5 | 6 |
| 5 | 9 | 6 | 4 | 2 | 7 | 3 | 8 | 1 |
| 2 | 3 | 8 | 1 | 5 | 6 | 9 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் தமிழக மீனவர் ஐவர் படுகாயம்

இலங்கைக் கடற் படையால் தமிழக மீனவர்கள் மீண்டும் தாக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் 5 மீனவர்கள் படு காயமடைந்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்த மீனவர்கள் விசைப்படகுகளில் கோடியக்கரை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களது படகுகளை வழிமறித்த இலங்கைக் கடற்படையினர் மீன்வர்களை தாக்கி விரட்டி யடித்திருக்கின்றனர்.

இதையடுத்து தமிழக மீனவர்கள் உயிர்தப்பி கரைக்குத் திரும்பினர். கடந்த ஒரு வார காலத்தில் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய 3 ஆவது தாக்குதல் இதுவாகும். (வ)

## மரண அறிவித்தல்
### குணரெத்தினம் கமளாவதி



கந்தரோடை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், டி,6 கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட குணரெத்தினம் கமளாவதி (பார்க்குணத்தாரின்மனைவி), (2012.09.06) இல் மரணமடைந்துவிட்டார்.

அன்னார் குணரெத்தினத்தின் (முன்னாள் பார் உரிமையாளர்) அன்பு மனைவியும், சாந்தகுமார்(ஜேர்மனி), சுரேந் திரகுமார் (லண்டன்), கணேசகுமார் (கனடா), பிரசன்னகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ் சென்றவர்களான இராஜநாதன் (அமெரிக்கா), பத்மநாதன், லீலாவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் மற்றும் சற்குணேஸ்வரி (வதனி - கொழும்பு), கலைமகள் (ஜேர்மனி), றொரண்டா (கனடா), தனுஜா (கனடா) ஆகியோரின் மாமியும், றமிலா, சினி, றொகனி, ஆடீரிலின் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ் சென்ற இராசரெத்தினத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது 6 ஆம் வாய்க்கால் இல்லத்தில் நாளை (08.09.2012) சனிக்கிழமை நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணரெத்தினம் (கணவர் - பார்குணம்)

(19320)(6.7.8)

## விநாயகர் சிலை திருட்டு

யாழ்ப்பாணம்,செப்7

வேலணை மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள சங்குத்தறை வைரவர் கோயிலில் இருந்த விநாயகர் சிலை சில தினங்களுக்கு முன் களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்படி கோயிலின் பிரதம குரு வேலணை கடற்படையினரிடமும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (வ-7)

**வீடு விற்பனைக்கு**

பாரதிவீதி சுண்டிக்குளியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள நான்கு அறைகளைக் கொண்ட நல்ல நிலையிலுள்ள வீடு உடன் விற்பனைக்கு

தொடர்பு
0771626876

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, செப்.7

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''செவ்வான் உருவில் திகழ் வேலவன்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சோவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்துவார். (3-8)

After A/L 0212219460

aat SRI LANKA Accounting Course
0/L தகமையுடன் தொழில்த்துறைக் கணக்காளராய் (Accountant) வருவதற்கான துரித வழி
- குறுகிய காலத்தில் தொழில்த்துறைக்கு ஏற்ற கல்வி
- குறைந்த பயிற்சிக் கட்டணம்
- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்

IBSL Banking Course
CBF, DBF
வங்கியாளர் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன.

BIT
கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப்பட்டதாரி ஆவதற்கான வாய்ப்பு
பல்கலைக்கழக பதிவுகளுக்கான இறுதித் திகதி 15/ 09/2012
- இம்முறை A/L தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்
- O/L தகமையுடன் FIT பயிற்சிநெறியூடாக BITஐ தொடர முடியும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Weekend 9/9/2012
Weekday 10/9/2012
at 9 AM

(சி/3211)

MindVishion College of International Studies
2nd Floor, No 4, Clock Tower Lane, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இரத்தினக் கற்கள் நகைகள் கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானபோது....

# இறுக்கமான நடைமுறைகளால் குறைந்தது சட்டவிரோத மீன்பிடி

## நீர்வள அமைச்சு கூறுகிறது

கொழும்பு,செப்.7

சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் தற்போது குறைவடைந்துள்ளதாக மீன்பிடி மற்றும் நீர்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட முறையில் மீன் பிடிப்பதற்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை இதற்குக் காரணம் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்தல் மற்றும் மீன்பிடி அனுமதிப்பத்திரம் இன்றி மீன் பிடியில் ஈடுபட்ட 596 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை தெற்கு மீனவர்கள் மன்னார், முல்லைத்தீவு கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று அப் பிரதேச மீனவர்கள் குற்றஞ் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

(ச)

# சர்வதேச சட்டத்துக்கு அமைவாக கைதிகளைக் கவனிக்க வேண்டும்

## கத்தோலிக்க பேராயர்கள் சபை வலியுறுத்து

கொழும்பு,செப்.7

நாட்டின் சகல கைதிகளும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை கத்தோலிக்க பேராயர்கள் சபை வலியுறுத்தியுள்ளது.

நாடு எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பொலிஸார் நடத்திய தாக்குதல்களில் சில கைதிகள் கொல்லப்பட்டதுடன், காயமடைந்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று கத்தோலிக்க பேராயர்கள் சபை தெரிவித்துள்ளது.

அனைத்துக் கைதிகளும் சுயகௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதே சர்வதேச சட்டம் என்று குறித்த சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்று கத்தோலிக்க பேராயர்கள் சபை தெரிவித்துள்ளது.

(ச)

# மாகாண சபை தேர்தலை நீதியானதாகக் கருதமுடியாது

## கண்காணிப்பாளர் முன்கூட்டியே தகவல்

கொழும்பு,செப்.7

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மூன்று மாகாணங்களில் முறைப்பாடு செய்யப்பட்ட தேர்தலுக்கு முந்திய வன்முறைகள் குறைந்துள்ள போதிலும் இங்கு நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தல்கள் சுதந்திரமான, நீதியான தேர்தல்களாக கருதப்பட முடியாதவையாகவே இருக்கும் என்று தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் இரண்டு கட்சிகள் நேரடியாக மோதுவதனாலும், கிழக்கு மாகாணத்தில் பலபக்க போட்டி நிலவுவதாலும் இப்பகுதிகளில் பதற்றம் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இறுதியாக நடந்த தேர்தலில் 21 சம்பவங்களும், இந்த தேர்தலில் ஐந்து சம்பவங்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோல, சப்ரகமுவவில் இறுதியாக நடந்த தேர்தலில் 51 சம்பவங்களும் இந்த தேர்தலில் ஆறு சம்பவங்கள் தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன என பவ்ரல் அமைப்பு அறி வித்துள்ளது.

அறிவிக்கப்பட்ட 235 சட்டமீறல் சம்பவங்களில் அநுராதபுரத்தில் அதிகளவில் 112 சம்பவங்கள் நடந்துள்ளன. இதிலும், அரச சொத்துக் களை துஷ்பிரயோகம் செய்த சம்பவங்களே அதிகமாக உள்ளன.

புதிதாக நியமனம்பெற்ற பட்டதாரிகளும் அரச உத்தியோகத்தர்களும் சில பகுதிகளில் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு சார்பாக பிரசாரம் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளனர். என்று பவ்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

ஆரம்பத்தில் சட்ட விரோத பிரசாரங்களை குறைப் பதில் ஆர்வமாக ஈடுபட்ட பொலிஸாருக்கு பவ்ரல் அமைப்பு நன்றி தெரிவித்தது. (ச)

# கொழும்புத் துறைமுகத்தில் ஜப்பானிய போர்க் கப்பல்கள்




கொழும்பு,செப்.7

ஜப்பான் கடற்பிராந்திய பாதுகாப்புப் பிரிவின் இரண்டு போர்க் கப்பல்கள் இலங்கைவந்தடைந்துள்ளன.

இந்த இரு போர்க் கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த போது இலங்கைக் கடற் படையினர் அவற்றைச் சம்பிரதாய பூர்வமாக வர வேற்றனர்.

ஜப்பான் கடற்பிராந்திய பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உரகா 460 மற்றும் ஹஜ் ஜியோ 302 ஆகிய போர்க் கப்பல் களே நல்லெண்ணப் பயண மாக வருகை தந்துள் ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

141 அடி நீளமும் 61 அடி அகலமுமான இந்தக் கப்பல் களில் 160 அதிகாரிகள் உட்பட 220 பேர் வருகை தந்துள்ளனர்.

இலங்கைக்கான ஜப்பானிய விசேட சமாதானத் தூதர் யசூசிஅகாசி இலங்கை வந்து திரும்பிய சில நாள்களில் இந்த இரு போர்க்கப்பல்களும் இலங்கை வந்துள் ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

# ஆளும் கட்சியின் மேடைகளில் தோன்றி பேசினார் ஹிருனிகா



கொழும்பு,செப்.7

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இறுதிப் பிரசாரக் கூட்டங்களில் ஹிருனிகா பிரேமச்சந்திரவும் பங்கேற்றிருந்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருனிகா, எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

சிவில் விமான சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரட்ணவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு ஹிருனிகா தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் என்னையும் இணைத்துக் கொண்டு பொது எதிர்க் கட்சியொன்றை அமைக்க முயற்சிக்கின்றார்கள் என்று ஹிருனிகா தெரிவித்தார். எனினும், இந்தத் தகவல்களில் எந்தவித உண்மையும் இல்லை என்று அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா மஹாஜன கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையே நான் பிரதிநிதித்துவம் செய்கின்றேன். வேறு கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

ஆளும்கட்சியின்வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் இறுதி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஆள்கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைது

நபர் ஒருவரை கடத்திச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரை பொலிஸர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் கள் ஹப்புத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார்தெரிவித்தனர்.

கடந்த 29ஆம் திகதி கொழும்பு, புறக்கோட்டைப் பகுதியில் நபர் ஒருவரைக் கடத்திச் சென்ற குற்றச் சாட்டின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸ் ஊடக அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 21,458 பாலியல் துஷ்பிரயோகங்கள்

## ரோசி சேனாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.7

கடந்த 4 ஆண்டுகளில் 21458 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்களும் சிறுவர், சிறுமியருமே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டின் சட்ட ஒழுங்கு நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்த போதிலும், அந்த வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

இந்த ஆண்டில் மட்டும் 1700 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில்



இதுவரை அரசு எவ்வித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை- என்றார்.(ச)

# ஆஸி. புறப்பட்ட 54 பேர் கைது

கொழும்பு,செப்.7


சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த 54 பேர் மாத்தறை, மிரிஸ்ஸ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுஇலங்கைக் கடற்படை ஊடகப் பேச்சாளர் வர்ணகுல சூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் காலி கடற்பரப்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர்



# தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 07.09.2012

## நம்பி வரும் அடியவருக்கு நல்வாழ்வு அளிப்பான்



இன்று அளவெட்டி நாக வரத நாராயணர் தேர் மீது பவனி வரும் பொன்னான நன்னாளாகும். 'ஆதி மூலமே' என்று அலறிய ஆனையை முதலையிடமிருந்து காப்பாற்றிய காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு இன்று பூமி தேவி ஸ்ரீதேவி சமேதராக அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து அருட்காட்சி தருகின்றனர்.

நம்பி வரும் அடியவர்களை ஆதரித்து நல்வாழ்வருளும் ஸ்ரீமகாவிஷ்ணு இந்த அளவெட்டிப் பதியினிலே கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்க்கருளும் பெருமானாக அருளாட்சி புரிகின் றார்.

இன்று தேர்மீது பவனிவரும் தேவாதிதேவனா கிய நாகவரத நாராயணர் அனைத்து மக்களுக்கும் அருள் புரிந்து நல்வாழ்வருள வேண்டு மென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன குருமுதல்வர்.

## நாராயணனுக்கு இன்று தேர்

எல்லாம் வல்ல நாராணயப் பெருமானின்
பாதாரவிந்தங்களைப் பணிந்து கொண்டு,
தாவுசிறைக் கூடத்திலே வந்து பிறந்தான்
தவத்தாயாம் யசோதைமடி மீது வளர்ந்தான்
ஆவணி ரோகினி நாள் அட்டமித்திதி - அந்த
ஆண்டவன் அவதரித்த கிருஸ்ண ஜெயந்தி

என்றும் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரது



அருட்பாடலுக்கு இணங்க இன்று ஆவணி ரோகினி அட்ட மத் திதியில் கிருஷ்ணஜெயந்தி நன்னாளில் அளவை நாகவரத நாராயணப் பெருமான் இரத பவனி ஆற்றி அடியார்களுக்கு அருள்பாலிக்க இருக்கின்றார். எனவே அனைத்து அடியார்களும் இந்நிகழ்வில் கலந்து அவரது அருளாசிகள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டி நிற்கிறோம்.

கு.அருந்ததி, தலைவர், பொறுப்புரிமைப் பரிபாலனசபை.

## அடியவர் குறை போக்குவான் நாராயணன்



இன்று அளவெட்டி நாக வரத நாராயணர் தேர் மீது பவனி வரும் பொன்னான நன்னாளாகும். பூமிதேவி ஸ்ரீதேவி சமேதராக அழகிய சித்திரத் தேரிலே ஆரோ கணித்துபக்தர்க ளுக்கு அருள தேரில் பவனி வருகின்றனர். இந் நன்னாளில் நாகவரத நாரா யணரின் நற்பேறுகளையும் பெறுக என அவன்தாள் பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.

## நாகேஸ்வரம் தல வரலாறு

ஸ்ரீநாகவரத நாராயணர் வீற்றிருக்கும் நாகேஸ்வரம் முன்பு பற்றைக்காடாக இருந்தது. இக் குறிச்சி தம் பளாவத்தை என அழைக்கப்பட்டது. இப்பகுதிக்கூடாக மக் கள் போக்குவரத்துச் செய்யும் சிறுசிறு கால்நடை வழிகள் இருந்தன. முற்காலத்தில் தெற்கே உள்ள கிராமங்கள் வடக்கே இருக்கும் கீரிமலை, மாவிட்டபுரம் முதலிய தலங் களுக்கு அந்த கால்நடைப் பாதை ஊடாகவே செல் வர். கீரிமலை ஆடியமாவாசை தீர்த்தம் ஆடுவதற்கு இரவிரவாக நடந்து செல்வர். ஒரு நாள் இவ்வாறு சென்ற வர்களின் ஒருவரின் ஒன்பது வயதுச் சிறுவன் வழி தவறிவிட்டான்.

தந்தையும் மகன் வருகின்றான் என்று மற்றவர்களுடன் சென்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மகன் பிரிந்து விட்டான் எனத் தெரிந்து கூட்டதில் தேடினார். பலனில்லை. அழுது கொண்டு தீர்த்த மாடப் போகாது நின்றார். உடன் வந்தவர்களும் தேடினார்கள்.

சிறுவன் பற்றைக்குள் இருளில் அப்பா.... அப்பா... என்று அழுது திரிந்தான். களைத்து ஒரு மரத்தடியில் இருந்துவிட்டான். வாகை,நுணா, நாவல் மூன்று விருட்சமும் சேர்ந்த இடத்தில் ஒரு பெரியவர் வந்து ''மகனே அழாதே உன் அப்பாவி டம் கூட்டிச் செல்லுகின்றேன்'' என்று கூறி கொஞ் சம் அவலை உண்ணக் கொடுத்து தண்ணீரும் பருக வைத்தார்.மெதுவாகக் கூட்டிச் சென்று தந்தை யிடம் ஒப்படைத்து மறைந்து விட்டார். எல்லோ ரும் அதிசயப்பட்டனர். சிறுவனும் தந்தையும் தீர்த்த மாடித் திரும்புகையில் வழி தவறிய இடம், பெரியவர் அவல் கொடுத்த இடம் ஆகியவற்றை தந் தைக்கு காட்டிக்கொண்டு வந்தான். என்ன அற்புதம், சிறுவன் வழிதவறி இருந்த இடத்தில் பெரிய பாம்புப் புற்றுகள் காணப்பட்டன. அதேவேளை இரண்டு நாகங்கள் காட்சி காட்டி அமைந்தன.

அனைவரும் இது நாகதம்பிரான் இடம் என்று வழிபட்டுச் சென்றனர். காலகதியில் அவ்விடம் சிறு ஆலயமாக உருவானது. அதனருகே கேணி யொன்றும் அமைக்கப்பட்டது. 'கேணியடி நாகதம் பிரான்' என்று வழங்கப்பட்டது. ஆவணி ரோகிணியில் விஷேட பொங்கல் பூசை செய்து வந்தனர். பெரிய பலகாரமடைகள் வைத்து பஞ்சாராத்தி காட் டும் நேரம் மடைகளுக்கு மத்தியில் இரண்டு நாகங்கள் காட்சி காட்டி மறைவது வழக்கம். பிற் காலத்தில் அவ்விடத்தில் பொங்கல் காலங்களில் பந்தல் இட்டு பூசை செய்வார்கள். ஒரு வைரவ சூலம், ஒரு செப்பினால் செய்த பாம்பின் உருவம், ஒரு முக் கோணக்கல் இவை நிலத்திலேயே இருந்தன. மக்கள் வந்து வழிபட்டுப் போவார். இரவு வேளை களில் பெரிய தீச்சுவாலை தெரியும்.

இதனால் சிலர் கேணியடி முனி என்றும், கேணியடி சோதி வைரவர் என்றும், நாராயணராகிய நாகதம்பிரான் என்றும் அழைத்து வந்தனர். கண்ணன் அவதாரம் செய்த தினமாகிய ஆவணி ரோகிணி கிருஷ்ண ஜெயந்தியில் பொங்கல் செய்து வந்தமையால் திரு வருள் உத்தரவுப்படி இத் தலத்தின் நாமம் நாகேஸ்வரம் என அழைக்கப்படுவது நிச்சய மாயிற்று.

(அருட்கவி விநாசித்தம்பி புலவரின் தலவரலாறு நூலில் இருந்து)

## நாகவரத நாராயணனே தேரேறிருவாய் தேறிடவே!

அளவையூர் நாகேஸ்வரமதனில் விநாசித்தம்பியாய்
அளப்பரிய அற்புதங்கள் காட்டி ஆண்டுகொண்டவனே
உளமுறை பூதேவி ஸ்ரீதேவி சமேத நாகவரதனே
வளங்கள் பல சேர்ந்திடவே பிடிக்கின்றோம் வடமதனை
பார்புகழும் நாகவரதனே நாராயணனே நாமின்று
[illegible]
[illegible]

- தெல்லியூர்தேவி.

## ஆசியுரை



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய சீலர்களாய் அமையும் பசும்சோலைகள் சூழ்ந்த அளவெட்டி - நாகேஸ்வரம் என்றும் போற்றப்படும் புண்ணிய பதியினைத் தானமும் தவமும் கல்வியிலே மேம்பட்டு இருக்கின்ற இவ்வாலயத்தில் ஆன்மாக்கள் கொடிய நோய்களையும் வல்வினைகளும் தீர்க்கும் ஆபத்பாந்த வனாய் தன் வசப்படுத்தி அருள் ஆட்சி செய்துவரும் நாக வரத நாராயண பெருமானின் இரதோற்சவ நன்னாளின் எல்லா ஆன்ம கோடி பக்தர்களையும் காத்து தன்னகத்தே ஒன்று கூடி தேர் வடம் பற்றி வாழ்நாளில் செய்த வினைகள் போக்கி நற்பேறு அடைவதோடு அருட்கவி விநாசித்தம்பிப் புலவர் வழிநடத்தல் பெற்ற இவ் ஆலயத்தில் தேர்த்திருவிழா நாராயண பெருமானின் அருட் கோலம் கண்டு இன்மையில் நற்பேறுகளையும் வாழ்த்துப் பெற்று அகில பேறுகள் பெறுவீர்கள் அவன்தாள் பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

சிவபதி பரம சண்முகராஜக்குருக்கள்
கோவைபாதீன சிவாச்சார்யார் மஹோற்சவ
பிரதம சிவாச்சார்யார்

## நாக வரத நாராயணரே தேரேறி வருக!



அளவெட்டிப் பதியுறையும் அமரர் நாயகனே
ஆதி மூல காரணரே தேரேறி வருக!
உளமகிழ்ந்து உன்னதமாய் தேவியரிருவருடன்
ஊர் பார்த்து மகிழ்ந்திட தேரேறி வருக!
கண்ண பரமாத்மாவே தேவகியின் மைந்தனே!
மது சூதனனே! வண்ணத் தேரேறி வருக!
எண்ணமெல்லாம் இனித்திட அழகே ஒருருவாய்
ஆனந்தமாகவே அற்புதத் தேரேறி வருக!
நாகவரத நாராயணரே! நாற்றிசையும் புகழ் பரப்பி
நல்லதொரு காட்சி தரத் தேரேறி வருக!
யோகநிலை கூடி அடியார்கள் வளம்பெறவே
அற்புதமாயமர்ந்து அழகுத் தேரேறி வருக!
அளவையூர்ப் பதியமர்ந்த அற்புத நாயகனே!
ஆதி கண்ணனே நீலமயில் வர்ணனே!
உளமார உனை நினைந்து இருகரங் கூப்பினோம்
நாகவரத நாராயணரே தேரேறி வருக!

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

## தூயவனே துயர்தீர்த்தருள்க

ஆழியெழச் சங்கம் வில்லுமெழ
வாழியெழத் தண்டும் வாளுமெழ
நாளுமெழ நிலநீரு மெழ
கோளுமெழ விண்னெரிகாலுமெழ

மாயவனாய் மதுசூதனனாய் உயர்
தாயவனாய் வரத நாரணனாய் -அளவை
மேயவனாய் அருட்பூரணனாய் தேரேறி
தூயவனே துயர்தீர்த் தருள்க.

- செல்வி சி.விநாசித்தம்பி.

## இரதமேறி அருள்புரிக

மறையா நால்வேதத் துட்பொருளே மலர்சுடரே
முறையாலிவ் வுலகெல்லாம் படைத்தளந்த நாரணனே
குறை தீர்க்க ஆவணியாம் ரோகினிநன் நாளின்று
உறைமாது இருசூழ இரதமேறி அருள்புரிக.

திருச்செகநாதன் குடும்பம்.
ஜெகசூரியர் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "…. எருமையும் ஏரோபிளேன் ஓட்டும்"

கோப்பாய் கிருஷ்ணன் கோயில் திருவிழாவுக்கு ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த எனது நண்பனுடன் சென்றேன். கடந்த திங்கட்கிழமை பின்னேரம் 5 மணி இருக்கும் திருவிழா முடித்து கோப்பாயில் இருந்து யாழ். நகருக்கு இராசபாதையூடாக காரில் வந்து கொண்டிருந்தோம். கிரவல் மண்தூசிப் படலத்துக்கவூடாக எதிரே என்ன வாகனம் வருகிறது என்று கவடத் தெரியாத அளவுக்கு கார் மெதுவாக நகர்கிறது.

இராசபாதையைப் பார்க்கின்றபோது வடிவேலு நடித்த ஒரு படக்காட்சி ஞாபகத்துக்கு வந்தது. அதாவது வடிவேல் தனது வீட்டுக்கு போவதற்காக ஒரு வாகனத்தை வாடகைக்கு பிடிப்பதற்கு ஒரு வாகன உரிமையாளரிடம் "வண்டி வருமா" என்று கேட்கிறார். அதற்கு அந்த வாகன உரிமையாளர் "வரும் ஆனால் வராது" என்று சொல்லி வடிவேலுவை குழப்புகிறார். வடிவேலு ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு ஒருவாறு வரும் என்பதை அறிந்து கொண்டு அந்த வாகனத்தில் ஏறுகின்றார். வாகனத்தினை செலுத்துபவருக்கு கண் பார்வை குறைவு என்ற விடயம் வடிவேலுக்கு அந்த வாகனம் விபத்துக்குள்ளானதற்குப் பிறகு தான் தெரிய வருகிறது.

அதற்கிடையில் வாகனத்தைச் செலுத்தி வருபவர் "மஞ்சள் மஞ்சளாக கொடிகளைப் பிடித்துக்கொண்டு கூட்டம் கூட்டமாக சனம் ஊர்வலம் வருகிறார்கள்" என்று எதிரே வரும் மஞ்சள் லொறியைப் பார்த்து சொல்கிறார். இதேபோல்தான் இராசபாதை வீதியும் ஆள்கள் வருகிறார்களா அல்லது வாகனம் வருகிறதா? என்று கண் தெரிந்தும் தெரியாமல் இருக்கிறது. நண்பனின் கார் நகர்கிறது. தூசிப் படலத்தில் மூழ்கிக் கொண்டு சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும் போகிறவர்கள் சினத்துக்கொண்டு செல்கிறார்கள். இராசபாதை வீதி அகலிப்பு, புனரமைப்பதற்கான முதற்கட்ட வேலை ஆரம்பிக்கப்பட்டு கிரவல் மண் போடப்பட்ட நிலையில் பல மாதங்கள் கடந்த நிலையில் அதன் வேலைகள் மெதுவாக நகர்கிறது. வாகனப் புழுதியில் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் வருகிறவர்கள் மூழ்குவதால் "மெதுவாக காரைச் செலுத்தும்படி" நான் அவனுக்குச் சொன்னேன். அவனும் "வீதி திருத்துறாங்களா அப்படி என்றால் இந்த வீதியூடான போக்குவரத்துக்கு தடை விதிக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த வீதி விரைவாக திருத்தப்படும். இல்லாது போயின் எப்படி வீதி திருத்தவேலைகளை மேற்கொள்ள முடியும்". என்றான். நானோ அது "ஆஸ்திரேலியாவில இங்க இல்லை" என்றேன். அதற்கு அவனோ "ஆஸ்திரேலியா என்றால் என்ன இலங்கை என்றால் என்ன வீதி திருத்துவதில் ஒருநடைமுறை இருக்கு அதைப் பின்பற்றினால் விரைவாக வீதியை திருத்தமுடியும். இல்லாது போனால் இப்படித்தான் இழுபடும். வீதி திருத்தம் என்று தொடங்கினால் முதலில் அந்த வீதியூடான போக்குவரத்தை தடைசெய்ய வேண்டும். மாற்றுப் பாதை இல்லாது போனால் திருத்த வீதியூடான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கும் போது கிரவல் மண் புழுதி எழும்பாத வகையில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அந்த நடவடிக்கையை காணவில்லையே. இதனால் இந்த வீதியினூடாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் சுவாச நோய்த் தாக்கத்துக்கு கண்டிப்பாக ஆளாக வேண்டி வரும்" என்று சீறினான்.

'இங்கு எல்லாம் இப்படித்தான். கேட்பவன் கேணியன் என்றால் எருமையும் 'ஏரோபிளேன்' ஓட்டும் என்று நண்பனுக்குச் சொல்லி வைத்தேன்.

வல்லை–அராலி வீதி அகலிப்பு பணிகளும் இப்படித்தான். 'வல்லை– அராலி வீதிக்கு இடைப்பட்ட ஓட்டகப்புலத்தில் இருந்து வயாவிளான் சந்திவரை 4 கிலோமீற்றர் வீதியை புனரமைக்க இராணுவம் விடவில்லை. பிறகு என்ன இடையிலை விட்டுவிட்டு அந்த வீதி அகலிப்புப் பணி தொடர்ந்தது. சித்தன் கேணிச் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டை சந்திவரை 2 கிலோமீற்றர் தூர வீதி அகலிப்பு இல்லாமல் புனரமைக்கப்பட்டது. இப்படியாகவே இங்கு வீதி அகலிப்பு பணிகள் நடக்கின்றன. வீதியை அகலித்து புனரமைப்பதற்காக காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி என்று எல்லா வீதிகளையும் ஒரே நேரத்தில் புனரமைக்கத் தொடங்கி இன்று வரை ஒரு வீதியும் முழுமை பெறாமல் மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது" இதையெல்லாம் யார் கவனத்தில் எடுக்கிறார்கள்? இங்கு யார் மக்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்? எல்லோருக்கும் அவரவர் 'கொமிஷனில்' மட்டுமே கண் என்றான்.

"இனியாவது உந்தக் கார் கண்ணாடியை திறந்து விடன்" என்றேன். அதற்கு அவனோ "எந்த வீதியில் இங்கு கார் கண்ணாடியை துறந்து விட்டு போக முடியும்?" என்றான். "தூசி பறக்கிறது என்று ஆறுதலாகக் காரினை நீ ஓடுகிறாய். பேசாமல் காரினை விட்டு விட்டு மோட்டார் சைக்கிளில் வந்திருக்கலாம். வீதியில் போகிற ஆள்கள் எல்லாம் எங்களை நக்கல் பார்வை பார்க்கிறது. உனக்குப் புரியவில்லையா? சனம் போறதுக்கு வீதி இல்லை அதற்குள்ள காரு என்று அந்த வீதியால் வருபவர்கள் காரைப் பார்க்கிற பார்வையில் தெரிகிறது. காருக்குள்ள இருக்கிற எங்களுக்கு ஒன்றும் தெரியாது. வெளியே இந்தக் காரால கிரவல் புழுதி எழும்புகிறது. கார் மெதுவாக நகர்கிறது…. எதிரே தண்ணீர் பவுசர் ஒன்று புனரமைப்பு வீதிக்கு தண்ணீர் பாய்ச்சுகிறது. குறிப்பிட்ட தூரம் தான் தண்ணீர் நனைப்பு. இப்படித்தான் தண்ணி காட்டுறது" என்றேன். "எப்படியடா இந்த வீதியால நீ மோட்டார் சைக்கிளில் போய் வாறாய்" என்றான். "என்ன செய்ய முடியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உடுப்பு மாற்ற வேண்டியிருக்கும். ஆனால் உடம்புக்குள்ள எவ்வளவு தூசி போய் படிந்திருக்குதோ தெரியாது. பின்னாளில் வருத்தம் வரேக்கதான் தெரியும். வீதி அகலிப்பு போக்குவரத்தை இலகுபடுத்தப்போய் கடைசியில எத்தனை பேரின்ரை உயிரைப் போக்காட்டத்தான் வழி விடப் போகுதோ தெரியல. யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துல ஒருவர் இறந்து கொண்டு தான் இருக்கிறார்.

வீதி அகலிப்பை துரிதப்படுத்தும்படி

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

எவரிடம் தான் சொல்ல முடியும்? போன் எடுத்தால் 'நீ யார்' என்று தான் அதிகாரிகள் கேட்கிறார்களே ஒழிய. "எதற்கு எடுத்தீர்கள்" என்று கேட்கமாட்டார்கள். பிறகு எப்படி அவர்களுடன் வீதி அகலிப்பு சம்பந்தமாக பேசமுடியும்? கடந்த வாரம் வலிகாமப் பகுதியில் உள்ள, இது சம்பந்தமான அலுவலகம் ஒன்றில் திட்டப் பொறியியலாளரான பெண் ஒருவருடன் இது சம்பந்தமாக கதைப்பம் என்று போன் எடுத்தால் எடுத்த உடனேயே "நீ யார்" என்று கேட்டு விட்டு "அலுவலகத்தில் நேரில் வந்து கதைக்கவும்" என்று வீராய்ப்பாய் பேசிவிட்டு போனினை கட் பண்ணி விட்டார். பொதுமக்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் விழிக்கும்அதிகாரிகள் எப்படி வீதி திருத்தப் பணியில் முழு மூச்சில் ஈடுபடப்போகிறார்கள்? வலிகாமப் பகுதி ஒன்றின் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர்தான் இந்த திட்டப் பொறியியலாளரின் போன் நம்பரைத் தந்தார். போன் நம்பரைத் தந்து விட்டு "இந்த அம்மணி ஒரு மாதிரி கவனமாக கதையுங்கோ" என்றார். எந்த மாதிரியும் இருக்கட்டும் எங்களுக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை. நாங்கள் கேட்பது "வீதி அகலிப்பை துரிதப்படுத்துங்கள். மக்களின் போக்குவரத்துக்கு ஆவன செய்யுங்கள்" என்பதைத்தான். அதற்குத்தான் உங்களுக்கு அரசு சம்பளம் வழங்குகிறது.

## கோப்பாய் ஸ்ரீ சக்கராழ்வார் தேர்த் திருவிழா இன்று

கோப்பாய் ஸ்ரீசக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இந்த ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலைப் பூசையைத் தொடர்ந்து சீனடி, சிலம்படி விளையாட்டுக்கள் இடம்பெற்று உறியடியும் வாணவேடிக்கை நிகழ்வும் இடம்பெறும்.

(எ)

## மானிய உரம் பெற நாள் நீடிப்பு

அளவெட்டி செப். 7

அளவெட்டி தெற்கு விவசாய சம்மேளனம் தனது எல்லைக்குட்பட்ட காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான மானிய விலையில் உரம் பெறுவதற்கான பதிவினை மேலும் இரு தினங்களுக்கு நீடித்துள்ளது.

இந்த இரு தினங்களில் மானிய உர விண்ணப்பப்படிவம் பெறாதவர்களும் பதிவு மேற்கொள்ளாதவர்களும் நாளையும் 10ஆம் திகதி திங்கட்கிழமையும் படிவத்தினைப் பெற்று தமது பதிவினை மேற்கொள்ளலாம்.

இதற்கான பதிவுகள் அளவெட்டி தெற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த திகதிகளில் பதிவினை மேற்கொள்ளுமாறு அளவெட்டி தெற்கு விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

(3-36)

**முதலாமாண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
18 * 07 * 1943

மறைவு
07 * 08 * 2011

**திருமதி வின்சென்ட் புஸ்பமலர்**

பஞ்சும் பனியும் நாணாதோ உந்தன்
மென்மையினைக் கண்டும்-எமது
நெஞ்சின் நினைவும் மாறுமோ,ஒன்றல்ல
பல்லாண்டுகள் சென்றும்
மண்ணில் புதைந்தது வெற்றுடல் மட்டுமே
எமதன்பின் தாயன்று-எம்
கண்ணில் என்றுமே நிழலாடுகின்றாய்
காலமெல்லாம் நீ நின்று.

புஸ்பவாசம்
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

பவளமலர்
கொலின் (மகன் –கனடா)
ஜெயராசா (கனடா)
புஸ்பராசா (சகோதரன்)

(22576)(5-6-7)

**முதலாவது ஆவது பிறந்தநாள் வாழ்த்து**



அருள்மொழிவர்மன் - நித்தியா
தம்பதியரின் இனிய புதல்வி
**டன்சிகா**
அவர்களுக்கு எனது இனிய பிறந்தநாள்
நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.
HAPPY BIRTH DAY

இராஜகாரியர் வீதி,
மானிப்பாய்.

வாழ்த்துபவர்:
நிரீசன் (கட்டார்) மாமா

(22574)(6.7.8)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

1½மாதம் வளர்ச்சியடைந்த நல்லின சிவப்பு, வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
ராஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.
T.P .NO : 077 6090926

(22496)(6.7.8)

**2 ஆம் வருட நினைவலைகள்**



மண்ணின் மலர்வு
18 ★ 06 ★ 1929

மகிமையின் பிரவேசம்
08 ★ 09 ★ 2010

**திருமதி சிசிலியா தனமணி ராஜரட்ணம் B.A**

( இளைப்பாறிய உதவி அதிபர், J/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)

திருமதி சிசிலியா தனமணி ராஜரட்ணம்அம்மா அவர்களின் வாழ்வையும் சேவையையும் நன்றி கூறும் ஸ்தோத்திர வழிபாடு எதிர்வரும் (08.09.2012) சனிக்கிழமை பி.பகல் 4 மணிக்கு J.S. ராஜரட்ணம் இளைப்பாறிய ஆசிரியர் அவர்களது இல்லத்தில் நடைபெறும். சேகர சபை மக்கள், அன்பர்கள், அயலவர்கள், உறவுகள் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

பெத்தனி,
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

J.S.ராஜரட்ணம்
கணவர் ,பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(சி/3688)(6.7.8)

யாழ்ப்பாணத்தில்...
IELTS BRITISH COUNCIL
பரீட்சை நாள்கள் வரை விசேட வகுப்புகள் நடைபெறும்
பரீட்சைகள் October 27th
IELTS FOR UK STUDENT VISA APPLICANTS
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன
(சி/3119)
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road,
Thirunelvely - Jaffna.
Tel: 021 222 0384
077 8803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை திருவருள்மிகு ஸ்ரீ



# தேர்த்திருவிழா சிறப்ப

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

இன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர்த் திருவிழா. காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு இந்தப் புண்ணிய ஷேத்திரமான பொன்னாலையிலே கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். அந்த அருள்மிகு பெருமாள் இன்று சித்திரத் தேரினிலே ஆரோகணிக்கும் அற்புதக் காட்சி அருமையும் பெருமையும் மிக்கது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் பெருமாள் தேரேறி வரும் அற்புத அழகு சொல்லில் அடங்காது. இன்று பொன்னாலையே விழாக்கோலம் பூண்டு பக்தி மயமாகக் காட்சியளிக்கின்றது.

இன்று தேரேறிவரும் திவ்ய திருமாலானவர் அடியார்கள் அனைவருக்கும் மங்கள வாழ்வருளி சகல சௌபாக்கியங்களையும் வழங்கவேண்டு மென்று நல்லைக் குருமணியின் பொற்கமல பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை ஆதீன குருமுதல்வர்.

### பரிபாலனசபையினரின் ஆசியுரை

காத்தல் கடவுளாய் நாராயணன் இலங்காபுரியின் வடபால் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முதன்மைத் தலங்களில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். மிகவும் பழமையும், புதுமையும் அமையப்பெற்ற இந்தத் தலத்தில் ஆவணி ரோகிணி அட்டமி நாளான கிருஷ்ண ஜெயந்தியை இரதோற்சவமாகக் கொண்டு பதினெட்டு நாள்கள் மஹோற்சவம் நடைபெறுகின்றது. மகாபாரதப் போர் பதினெட்டு நாள்கள் நடைபெற்று அறம் வென்றதைக் கூறும் அந்தக் காப்பியத்தை அடியொற்றியே இந்தப் பதினெட்டு நாளாக உற்சவம் நிர்ணயிக்கப்பட்டதென ஒரு கருத்து உண்டு. தீயதைக் களைந்து நன்மையைப் பெருக்கிய கண்ண பரமாத்மாவின் பாதங்களைப் பணிபவர்கள் மிகப் பாக்கியம் பெற்றவர்களாவர். எல்லாம் வல்ல எம் பெருமானின் இரதோற்சவ நன்நாளில் தரிசனம் செய்பவர்களும் நாராயணனின் கழலை நினைத்துக் கொள்பவர்களும் எல்லா வகையான இன்பங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ ஆசி கூறி அமைகின்றோம்.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் பரிபாலனசபை.
தலைவர் சி.கபிலநாதர், செயலாளர் கி.பத்மநாதன், பொருளாளர் க.மகாலிங்கம்.

வசந்த மண்டப பூசை முற்பகல் 10.30 மணி
தேரில் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆரோகணிப்பது நண்பகல் 12 மணி

### மஹோற்சவகுருவின் ஆசியுரை

தசாவதாரங்களுள் இரண்டாவதாக காணப்படும் கூர்ம அவதார சேத்திரமாக விளங்கும் பொன்னாலை பதிதனில் ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாள் 07.09.2012 வெள்ளிக்கிழமையாகிய இந்நன்நாளில் திருத்தேரில் ஆரோகணித்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் புரியவுள்ளார். ஆவணி ரோகிணி நட்சத்திரத்தில் அட்டமி திதியில் அவனியை இரட்சிக்கும் பொருட்டு அவதரித்தான் கண்ணன். அவனுக்கு இன்று தேர்த் திருவிழாவாகும். பாரதப் போர் 18 தினங்கள் நடைபெற்றதை நினைவுகூரும் முகமாக இங்கும் 18 தினங்கள் உற்சவம் நிகழ்கிறது. பக்தர்கள் கேட்பதை எல்லாம் வாரி வழங்கு வள்ளலாக ஸ்ரீ மந்த வரதராஜப் பெருமான் பயமற்ற சமாதான சூழலையும் துன்பமற்ற இன்பமான வாழ்வையும் தரவேண்டி இன்றைய இப்பெருவிழா சிறப்பாக நிகழ வாழ்த்தி வழிபடுவோம்.

கோவிந்த நாம சங்கீர்த்தன கோவிந்தா - கோவிந்தா
பிரதிஷ்டா சிரோமணி ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள், மஹோற்சவ பிரதமகுரு.

### வாழ்த்துச் செய்தி

கருணை நிறைந்த கண்ணபிரான் திருக்கோயில்களில் பொன்னாலைத் திருக்கோயில் புகழ்மிக்கது. வேண்டுவார் வேண்டுவதைத் தரும் வேய்ங்குழல் வேந்தன் வாழும் இடம். பல நூறு பக்தர்கள் நாடித் தேடி வழிபாடு செய்யும் அற்புதத் திருக்கோயில். இந்தத் திருக்கோயில் தேர்த்திருவிழா, தனிச் சிறப்புமிக்க பெருவிழா. ஆடுவார்கள், பாடுவார்கள் ஆனந்த கிருஷ்ணனை அகத்தில் இருத்தி மகிழும் அடியார் கூடும் பெருவிழா.

இந்தத் திருநாள் சிறக்க வரம் தரும் வரதராஜனைப் பிரார்த்தித்து அனைத்து அடியவர்களும், அபயகரங்களோடு வரும் அருட்தெய்வத்தின் கடாட்சம் பெற்று நிறைவாக வாழப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன், தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

தட்சிணகைலாச மகாஷேத்திர
யின் வட பாகத்தில் வீன[illegible] புரபெ
வயல்களும் முன்னே இருக்கவும், உ
தாய் இவற்றுக்கு நடுவண் சதுரங்கமெ
துக்கு முன்னே குறுக்காகச் செல்லும் 
மேற்காகச்) செல்லும் மண்தெரு, மூ

தலப்பெயர்கள்

இத்தலத்துக்கு சுவர்ணாலயபுரி,

சுவர்ணாலயபுரி

இந்திரன் வசிக்கப்பெற்றானாலு

சதுரங்கம்

ஆலய உற்பத்திக் காலத்தில் கடல்
வுடன் அவ் விடத்திலேயே ஆலயம் 
வுக்கு பிரீதியாக அமைந்த தலப் பெ

பொன்னாலயம்

முன்னொரு காலத்தில் விட்டுணு
சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்
காலத்துப் பொன்னால் அமைந்த ஆ

கோயிலமைப்பு

இந்த ஆலயம் பொன்னாலை என்
யுடன் மிக அழகாக விளங்குகின்றது
பிரகாரங்கள் இருந்தன. அவற்றில் 
இப்போது தேர் ஓடும் வீதியில் அ
மைந்தவரும் வரந்தரு பவருமான நா
வட மேற்கே சனீஸ்வரன் [illegible]ாயிலும்
வசந்த மண்டபமும், ஈசான திசையி

தலப்பெருமை

செய்தற்கு அரிய பெரிய திருப்ப
கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்
களாகக் கட்டப்பட்டன. இப்போதும் 
களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அ
என்ற நூலில் இந்தலப் பெருமை கூ

## ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ பிரசுர அனுசரண


**கணேசா ஹாட்வெயர் ஸ்ரோஸ்**
மின்சார உபகரணங்கள்
ஏக விநியோகஸ்தர்
காரைநகர் றோட்,
மூளாய்.

**Seelan Aluminium Fitting**
DOHA, DUBAI இல் 10 வருட அனுபவமுள்ளவர்
No.54, K.K.S. Road, Kokuvil Junction.
Tel: 021 4902 561, 077 8050918

**ஈஸ்வரன் நெற்கபே ஈஸ்வரன் பல்பொருள் வாணிபம்**
காரைநகர் வீதி,
சுழிபுரம்.

**S.T.PARANESWARAN & CO. (PVT) LTD,**
TRAMSPORT SERVICES
Colombo - Jaffna - Colombo
Head Offioe: 182, Central Road, Colombo - 12
Tel: 011 234 7210,
Fax: 011 2395472
Branch Office: 79, Stanley Road, Jaffna. T.P. 021 222 5504

**கணேஸ் ஸ்ரோஸ்**
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நியாயவிலைக்குப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

**இளவரசி சேலைச்சோலை**
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**New Star Medicals**
Main Street
Moolai.
T.P. 021 225 0456

பொன்னாலை வரதராஜப் பெருமாளே அரகரோகரா
பலசரக்குப் பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ள
**க.கு. கந்தையாபிள்ளை அன்சன்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சிவாஸ் மில்**
பிள்ளையார் கோயிலடி,
கரைநகர் வீதி,
சுளிபுரம், மூளாய்.

**Super Shoes**
154, Navalar Road,
Jaffna.
T.P. 021 222 6809

**கேதீஸ் களஞ்சியம் பல்பொருள் வாணிபம்**
மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலைக்கு பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
வழக்கம்பரை,சுழிபுரம். தொ.பே. 021 225 9160

புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு
**சரவணா ரெக்ஸ்**
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 1723,
770, 772, கே.கே.எஸ். வீதி,(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 0421, Fax: 222 0421


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்



# பு மலர் – 07.09.2012

## தலமும் இருப்பிடமும்

ஷத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கை
ன புரமென் சொல்லுகின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத்திக்கில் நீர் நிறைந்த குளங்களும்
வும், உவர் நீர்க் கடலும் சமுத்திர மும்தெற்கு, மேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்ற
ரங்கமென்னும் மணற் பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்யஸ்தலம் இருக்கின்றது. ஆலயத்
ல்லும் தெருக் கரை மார்க்கமாகப் பருத்தித்துறை குப்போகலாம். ஆலயத்துக்கு முன் (கிழக்கு
தரு, மூளாய் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கிறது.

லயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

னாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியபடியாலும் இப்பெயர் பெற்றது.

ல் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லான
லயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணு
லப் பெயர் பாரதநாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அரங்கங்கள் உள்ளன.

விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம் பொன்னென்னும் பல பொருளொரு
க் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு
ந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

லை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல் கிழக்கு நோக்கிய சந்நிதி
கின்றது. இதற்கு இப்போது இரு பிரகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஏழு
ற்றில் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது.
யில் அதாவது கோயிலுக்குப் போகின்ற முன்னமைப்பில் இவ்வாலயத்தோடு புராதனமாய
ான நரசிங்க பைரவர் வீற்றிருந்தருளியுள்ளார். உட்பிரகாரத்தில் தெற்கே நாகதம்பிரான்,
ாயிலும், கே தீர்த்தக் கிணறும் வன்னியும் அடுத்தாற்போல நவக்கிரக கோயிலும்
திசையில் யாக மண்டபமும் இருக்கின்றன.

திருப்பணி குளக்கோட்டு மகாராசனால் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்
னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்
பாதும் சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே புலவர்களாலும் பக்தர்
கள் அநேகம் இப்போது இல்லாமல் போயின சிலவே உள்ளன. பறாளாய் விநாயகர் பள்ளு
மை கூறப்பட்டுள்ளது.

## பொன்னாலைப் பதியமர்ந்த புண்ணியனே! உன்னாமம் உச்சரித்தோம் தேரேறி வருக!



கண்ணனே! நிலமயில் வண்ணனே! கிருஷ்ணா!
கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்கினோம் ஐயா!
மண்ணை உண்ட மாயவனே! மதுசூதனனே!
மங்களமாய்த் தேரேறி அருட்காட்சி தருவாயே!

நீலமேக வண்ணனே! இராவண சம்ஹாரனே!
காலமெல்லாம் உனை நம்பி வணங்கினோம் ஐயா!
ஞாலமெலாம் புகழும் கோல அழகுக் கிருஷ்ணனே
பால வடிவேலன் மாமனே! தேரேறி வருக!

வண்ணத் தேரேறிவரும் வாசவனே! கேசவனே!
வணங்கினோம் உனையே நல்லருள் தருவாய்!
கண்ணை இமை காப்பது போல் காத்தருளும் தலைவா!
பொன்னாலைப் பதியமர்ந்த புண்ணியனே வருக!
உன்னாமம் உச்சரித்தோம் தேரேறி வருக!

"கலாபூஷணம்" இராசையா ஸ்ரீதரன்.

## துயர் களைந்தருள்வாய் தூயவனே கண்ணாஓம் நமோ நாராயணா

நமஹ என்ற நாமமோதிவழிபடும் அடியார் இன்று நின்மதியற்ற நிலையிலும், புதுப்புது விதமான நோய்த் தாக்கத்தாலும் மழையின்றியும்,

வரட்சியினாலும் படும் துன்பங்களை அறியாயோ! கண்ணா? ஆழி மழைக் கண்ணன் நீ நாம் சொல்லொணாத் துயரினால் துன்பமடையும் மக்களின் துயர் தீர்க்க தேரேறி வரும் பொன்னாலை வரதராஜப் பெருமாளே! ஆத்ம மல வாதனை நீக்கியெமை ஆளவருவதுபோல் துயர் தீர்த்தெமை ஆளையா தூயவனே கண்ணா?

கே.கே.கே. சிவபாலன்
அடியாருக்கு அமுதூட்டும் அன்னல்

## ஆமை அவதார பெருமாள் ஆலயம்

புராதன வரலாற்று சிறப்புக்களை கொண்டு விளங்கும் ஆலயம் பொன்னாலை ஸ்ரீ வரத ராஜப்பெருமாள் ஆலயம். தக்ஷசண கைலாய புராணம் இவ்வாலய அற்புத வரலாற்று சிறப்புக்களை கூறுகின்றது. தக்ஷண கைலாய புராணத்தில் பொன்னாலய பெருமை உரைத்த படலத்தில் இவ் வாலயம் தோற்றச் சிறப்புகள் கூறப்படுகின்றது.



வலைஞனாக பிறந்த இந்திரன் ஒருநாள் இப்போது ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு அருகிலுள்ள கடலில் வலை வீசினான். வலையில் ஓர் ஆமை அகப்பட்டது. அதனை அவனால் தனித்து கரை சேர்க்க முடியவில்லை. தன் இனத்தவரின் துணையை நாடி அவர்களை அழைத்து வந்தான். வந்தவர்கள் அனைவரும் அங்கே ஒரு அதிசயத்தைக் கண்ட னர். அச் சமயத்தில் ஆகாய மார்க்கமாக பொன்னொளி வீசும் விமானம் ஒன்று காணப் பட்டது. அதனைக் கண்டு அதிசயம் நிறைந்தவர்களாக ஆமை யின் பக்கத்தில் விரைவாக சென்று அடைந்தனர். அச் சமயத் தில் அவ் ஆமை கல்லாயிருத் தலைக் கண்டார்கள் இது என்ன அதிசயம் என்று வியந்தார்கள். பின்பு அவர்கள் அனைவரின தும் மனதில் இவ் ஆமை இலக்குமிபதியாகிய நாராயணனே என்றும் காணப்பட்ட இவ் விமானம் அவருடையது என்றும் ஒரு துணிவு உண்டானது. அத் துணிவை முன்னிட்டு நாராயண னின் பிரதிஷ்டைக் குரிய இந்த இடத்திலே நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் உத்தம பிராமணரைக் கொண்டு வைகாசன தந்திர விதிப்பு பிரதிஷ்டை செய்தார்கள். அவர் கள் அப்படி முயற்சித்து விஷ்ணுவை பிரதிஷ்டை செய்து வரதராஜப் பெருமாள் என்று நாம கரணம் செய்து வழிபட்டனர். இத்தகு பெருமை கொண்ட ஆலயத்தில் இன்று (07.09.2012) தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. காத்தல் கடவுளாக அபயம் தந்து தேரேறும் பொன்னாலை வாசனை நாமும் பணிந்து நல்லவண்ணம் வாழ்வோமாக.

- மதுரகவி எம்.பி. அருளாநந்தன்.



## ணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஸ்ரீ முருகன் களஞ்சியம்
புதினப் பத்திரிகை
முகவரும்
L.P.GAS
விற்பனையாளரும்
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

பானு
ரவல்ஸ்
திருமண வைபவங்கள்,
விழா நிகழ்வுகளுக்குக்
குறித்த நேரத்துக்கு
ஒழுங்கு செய்து
தரப்படும்.
காரைநகர் றோட்,
மூளாய்.

சிங்கப்பூர்
ஜுவெல்றி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கரன் ஸ்ரோர்ஸ்
பல்பொருள்
வாணிபம்
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

ஸ்ரீராம் களஞ்சியம்
(அப்பன்)
பல்பொருள்
வாணிபம்
காரைநகர் றோட்,
மூளாய்.

மாருதி ரவல்ஸ்
உங்கள் வீட்டுப்பயணங்களுக்கு
உங்களது விருப்பம் போல
சென்று வர ஏற்ற
வாகனசேவை.
தொடர்பு: 077 5771 062

உங்கள் கணினியில் ஏற்படும்
அனைத்து விதமான பிழைகளையும்
திருத்திக்கொள்ள நாடுங்கள்
GLOBAL PC
TECHNOLOGIES
K.Kannathasan
(Computer Hardware Technician)
Main Street, Chulipuram
Email - globalpc tec@gmail. com

சிக்கனமான சலவைக்கும் தூய
வெண்மைக்கும் மில்க் வைற்
நீல சோப் பாவியுங்கள்
மில்க் வைற் சோப்
தொழிற்சாலை,
527, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
வெற்று உறைகளை சேகரித்து
பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நியூ பெஷன்
அழககம்
பிரதான வீதி,
விக்டோரியா கல்லூரி
முன்பாக, சுழிபுரம்.

Rishikesh Multi shop
Main Street,Valakkamparai
Chulipuram
மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்
பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்
பாகங்கள், எலக்ரோனிக்பொருள்கள்,
அனைத்து ஒயில் வகைகளையும் இங்கு
பெற்றுக்கொள்ளலாம்.


சாரங்கா நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 0972
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 6972, Fax. 222 8869
இணை நிறுவனங்கள்
சாரங்கா ஜுவெல்லறி
சிவா நகைமாடம்
கொழும்பு ⟷ யாழ்ப்பாணம் ⟷ கொழும்பு
Venkadeswara Express
A/C Video Coach
217, Central Road, Colombo 12. Tel: 0115234588
Hot Line: 0777743578




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி மகாராசா



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மகாராசாநேற்றுமுன்தினம் 05.09.2012 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், செல்லையா-தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இலங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், மதனசூரியா(லண்டன்), எழில்மதனி (கொழும்பு), இமையகாந்தன்(கனடா),எழிலரசி(லண்டன்), காலஞ்சென்ற ஜீவகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலேந்திரன்(கொழும்பு),ஜெயரூபன்(லண்டன்) ஆகியோரின் மாமனும், இராஜேஸ்வரி,பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி,பவளக்கொடி மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவராசா, அருளானந்தம், சதாசிவம் மற்றும் சிவஞானம்,தம்பிராசா,காலஞ்சென்றவர்களான குகனேஸ்வரி,கருணானந்தம், மற்றும் இரத்தினேஸ்வரி, நித்தியானந்தம், பவானந்தம், பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும்,இராசரத்தினம்,கமலநாதன் ஆகியோரின் சகலனும்,சகுந்தலாதேவி,நாகேஸ்வரி, சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும், கரிகாலன்(லண்டன்), விகாஸ் (கொழும்பு),பவன்னா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை, உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'குறும்பன் வளவு'
ஏழாலை மேற்கு, ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(21162)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குப் பல்கலையில் பொறியியல் பீடம்

உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய அடுத்த கல்வியாண்டில் கூடுதலான மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அமைக்கும் வேலையை துரிதப்படுத்தும் அதேவேளையில் அம்பாறை, ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிய பொறியியல் பீடம் ஒன்றும் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4828 மாணவர்களை கூடுதலாக சேர்த்துக்கொள்ளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்மொழிவை உயர்நீதிமன்றம் அங்கீகரித்தது. இதன்படி மாணவர் அனுமதி எவ்வித தயக்கமுமின்றி அதிகரிக்கப்படும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்: குறைந்தபட்சம் 200 மாணவர்களை அனுமதிப்பதற்காக நாம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் யாழ்ப்பாணம் பொறியியல் பீடம் தொடர்பான வேலைகளும் விரைவுபடுத்தப்படும். பொறியியல் துறைக்கு கூடுதல் மாணவர்களை அனுமதிப்பதில் மட்டுமே எமக்கு கஷ்டங்கள் உள்ளன. என அவர் கூறினார்.

(16)

## மரண அறிவித்தல்



### இளையதம்பி மகேசன்

(மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளைய தம்பி மகேசன் நேற்று (06.09.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மாரிமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தில்லையம்மா தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கீதாஞ்சலி, மகேந்திரன் (மகான்), மனோகரன் (நாதன்), ராதா, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணராசா, ஜீவமலர், றஞ்சிதம், தயானந்தன், பாலச் சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிவக் கொழுந்து, ஐயாத் துரை, தர்மலிங்கம், இலட்சுமியம்மா மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தணிகாசலம், தையல்நாயகி மற்றும் ஆனந்தம், குணம், கலாமணி, கிளி ஆகியோரின் மைத்துனரும், டினுசாந், கபில்சாந், பவித்திரன், சந்தோஷ், கவிஷன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (சி/3122)(45-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

advt@uthayan.com
0215671111

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

CD-200 Road master NP-WPxxxx,
CBZ -x றிம் NPXI-xxxx
இலக்கங்களை உடைய
இரண்டு மோட் டார்
சைக்கிள்கள் உடன்
விற்பனைக்குண்டு.
(சி/3127)(5-6-7) தொடர்பு: 077 3610 702

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பாடசாலை பற்சிகிச்சை பிரிவில் தொழிலாளியாக கடமையாற்றும்
திருமதி பா. கவிதா அவர்களின் பாசமிகு தந்தையார்

### இளையதம்பி மகேசன் (கோப்பாய் மத்தி)

அவர்கள் நேற்று (06.09.2012) இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை, சாவகச்சேரி (சி/9364)(6.7.8)

சுகாதார வைத்திய அதிகாரியும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை இரகுபதி

(சன்மார்க்க மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஊழியர்,வாணி சவுண்ட் உரிமையாளர்)



அரியாலை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை-இரகுபதி நேற்று (06.09.2012) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், சங்கரநாதன்-அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்துமதியின் அன்புக் கண வரும், கார்த்திகாவின் பாசமிகு தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2012) சனிக்கிழமை மு.ப 10.30மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, புவனேஸ்வரி
அம்பாள் வீதி, அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (22583)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### குலசேகரன் சுரேஷ்குமார்

யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கன்னாரத் தெருவை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட குலசேகரன் சுரேஷ்குமார் கடந்த (03.09.2012) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரன் மற்றும் திருமதி சறோஜாதேவி தம்பதியரின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் திருமதி சரஸ்வதி (யாழ்ப்பாணம்) தம்பதியரின் பெறாமகனும், செல்வராஜா - லிங்கேஸ்வரி (கனடா) தம்பதியரின் மருமகனும், ரமேஸ்குமாரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் திருமதி வடிவழகி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

38/6, கன்னாரத்தெரு,
கொழும்பு- 13

தகவல்:
அம்மா, அண்ணா, தம்பிமார்,தங்கைமார், அம்மம்மா,
மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்,
சித்தப்பாமார்,சித்திமார்.

(22601)(45.6.7)

### திருமதி தில்லைநாதன் கமலாசனி (ராணி)



நீராவியடி,யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் கமலாசனி நேற்று(06.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-இரத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர் களான தாமோதரம்பிள்ளை-தில்லையம்மா தம்பதிய ரின் மருமகளும், தில்லைநாதனின்(சிவம்) பாசமிகு மனைவியும், காயத்திரி,துஷியந்தன்(தொழிநுட்ப உத்தியோகத்தர் Acces, Engineering(Pvt) Ltd) ஆகியோரின் அன்புத் தாயும்,நாகேந்திரன்(தொழில் உத்தியோகத்தர், தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜனந்தினி(ஆசிரியை, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், புருஷோத்தமன், நியந்திரி, பபிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் செல்வராணி கிருஷ்ணகுமாரி(குஞ்சு) ஆகியோரின் சகோதரியும்,பத்மாதேவி,சின்னத்தம்பி,பாலச்சந்திரன்,கனகேஸ்வரி, அழகேஸ்வரி,சர்வேஸ்வரி, கயிலைநாதன், இராம நாதன், அற்புதநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.09.2012) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (சி/3123)(5-6-7)

தகவல்:
தா. தில்லைநாதன்(சிவம்-கணவர்)






Sep 8 ஆம் திகதி யாழ் மாநகரில் BCAS CAMPUS

BCAS வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு
Seminar & Counseling 2012

- நவீன சர்வதேச தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள்
- சர்வதேச உயர்கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகள்
- உயர்கல்விக்கான புலமைபரிசில் வாய்ப்புகள்
- மிக குறைந்த செலவில் குறுங்கால தொழிற்பயிற்சி மூலமான உயர்தொழில் வாய்ப்புகள்
- குறைந்த தகைமையுடன் பொறியியல் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்புக்களுக்கான இலகு வழிமுறைகள்
- UK. Australia, Canada, USA போன்ற நாடுகளுக்கான Student Visaக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளும் புதிய ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளும்.

பெறுமதிமிக்க ஊக்குவிப்பு பரிசுகளுடன்.........



திகதி
2012-09-08 (சனிக்கிழமை)

நேரம்
காலை 10.00a.m - 02.00p.m

இடம்
Gnanams Hotel
301, Clock Tower Rd
(யாழ் போதனா வைத்தியசாலை பின்புறம்)

இது போன்ற பெறுமதிமிக்க ஆலோசனைகளோடு தனிப்பட்ட முறையில் மாணவர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்களால் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு
0777 444 225
0777 286 877

அனுமதி முற்றிலும் இலவசம்

British College of Applied Studies
• Colombo • Dehiwela • Kandy • Batticaloa • Doha - Qatar

(சி/2215)

மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இவ்வறிவுரை பட்டறையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.
www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சொனியின் புதிய டேப்லெட்

மக்களின் நம்பிக்கையை வென்ற நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் ஜப்பானின் சொனி நிறுவனமானது நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய *Xperia* டேப்லெட்டுக்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதற்கான அலுவலக ரீதியான அறிவித்தலை வெளியிட்டுள்ள சொனி நிறுவனம் குறித்த டேப்லெட் தொடர்பான தகவல்களையும் வெளியிட்டுள்ளது.

இதன்படி அன்ரோயிட் 4.0 ஐஸ்கிரீம் சான்விச் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட இந்த டேப்லெட் ஆனது *Nvidia Tegra 3 quad & core* புரோசசரை உள்ளடக்கியுள்ளது.

மேலும் 9.4 அங்குலமுடையதும், 1280 x 800 பிக் சல்களைக் கொண்ட தொடுதிரை முகப்பைக் கொண்டுள்ளதுடன் இதில் காணப்படும் மின்கலமானது தொடர்ச்சியாக 10 மணித்தியாலங்கள்வரை செயற்படக்கூடியது.

## வெளிவருகிறது உபுன்டு 12.10

கணினி இயங்குதளங்களில் இலவசமானதும், வைரஸ் தாக்கங்களிலிருந்து பெருமளவு பாதுகாப்பைக் கொண்டதுமான லினக்ஸின் பதிப்பான Ubuntu 12.10 ஐ எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் வெளியிடுவது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

GNOME ஐ மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த இயங்குதளமானது முன்னைய பதிப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த அப்பிளிக்கேசன்களை விட மேலும் மெருகூட்டப்பட்ட அப்பிளிக்கேசன் பக்கேஜ்களை உள்ளடக்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விரைவில் புதிய தோற்றத்தில்...



காணொலிகளைப் பகிரும் சேவையை வழங்குவதில் முன்னணியில் திகழும் யூ.ரியுப் இணைய சேவையானது தனது இணையப் பக்கத்தில் காணொலிகளைக் காட்சிப்படுத்தும் விதத்தை அதன் பயனாளர்களுக்காக மாற்றியமைக்கவுள்ளது.

தற்போது பரீட்சார்த்த நிலையில் காணப்படும் இந்தப்புதிய அம்சமானது Moodwall எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயனாளர்கள் தமக்குத் தேவையான காணொலி வகைகளைக் கொண்டு இலகுவாகத் தேட முடிவதுடன் அவை தொடர்பான மேலதிக காணொலிகளையும் பார்வையிட முடியும்.

அதாவது 'லேபிள்' களை அடிப்படையாகக் கொண்ட இந்தப்புதிய தோற்றத்தைக் கொண்ட யூ.ரியுப் இணையப் பக்கத்தினை விரைவில் அனைத்துப் பயனாளர்களும் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எல்.ஜியின் Optimus L9

எல்.ஜி. நிறுவனமானது இரட்டை சிம் வசதி கொண்டதும் நவீன தொழில்நுட்பத்தில் அமைந்ததுமான Optimus L9 எனப்படும் கைப்பேசிகளை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

கொரிய நாட்டிலில் தயாரிக்கப்பட்டு வரும் இந்தக் கைப்பேசிகள் கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடியவாறு உருவாக்கப்படுகின்றது.

1GHz வேகத்தில் செயற்படவுள்ள புரோசசர், 4.7 அங்குலமுடைய தொடுதிரை, 5 மிகப்பெரிய அளவிலான பிக்சல்கள் உடைய கமரா போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாவும் காணப்படுகின்றது.

125 கிராம்களே உடைய இந்த கைப்பேசியின் உள்ளக நினைவகமானது 4GB வரை காணப்படுவதுடன் 44 வகையான மொழிகளுக்கு துலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய Optical Character Recognition மென்பொருளையும் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## துல்லியமான புகைப்படம் எடுக்கும் துணைச்சாதனம்

குறைந்த காலத்தில் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்த அப்பிளின் தயாரிப்பான iPhoneகளில் காலத்துக்குக் காலம் பல்வேறு அம்சங்களை அந்த நிறுவனம் உட்புகுத்தி வருகின்றது.

இவற்றின் அடிப்படையில் தற்போது Olloclip எனும் 3 in 1 வில்லைகளை (lens) உள்ளடக்கிய துணைச்சாதனம் ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச்சாதனமானது iPhoneகளைப் பயன்படுத்தி துல்லியமானதும், பரந்த கோணத்திலும் புகைப்படங்களை எடுப்பதற்கு பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.



## கையில் பிடித்தபடி கைபேசியை 'சார்ஜ்' செய்யலாம்

மின்சாரத்தைச் செலுத்தாமல் கையில் பிடித்த படியே கைபேசிகளை மின்னேற்றம் செய்யும் புதிய தொழில்நுட்பம் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதை அமெரிக்காவில் உள்ள வாக் போர ஸ்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நானோ டெக்னாலஜி பேராசிரியர் டேவிட் கரோல் என்பவர் கண்டு பிடித்துள்ளார்.

நானோ தொழில் நுட்பத்தைக் பயன்படுத்தி உடல் வெப்பம் மின்சாரமாக மாறும் வகையில் இது வடி வமைக்கப்பட்டுள்ளது.

அவற்றை கையில் பிடித்தாலோ அல்லது அதன் மீது உட்கார்ந்தாலோ போதும், உடல் வெப்பம் மின்சாரமாக மாறி கைபேசிகளுக்கு சார்ஜ் ஆகும்.

## அன்ரோய்டில் Sky Drive

கூகுளின் அன்ரோயிட் இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களில் இணையத்தளம் சேமிப்பு வசதியாக காணப்படும் Sky Drive எனும் வசதியைப் பயன்படுத்தி கோப்புக்களை சேமிப்பு செய்வதற்கு மென்பொருள் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மிகச்சிறிய கோப்பு அளவுடைய இந்த மென்பொருளைப் பயன்படுத்தி இலகுவாகவும், விரைவாகவும் கோப்புக்களை ஒன்லைனில் சேமிக்க முடிவதுடன் பாதுகாப்பானதாகவும் காணப்படுகின்றது.

அன்ரோயிட் சாதனங்கள் தவிர்ந்த மைக்ரோசொப்டின் விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படும் கைப்பேசிகள், அப்பிள் சாதனங்கள் என்பவற்றிலும் இந்த வசதியைப் பயன்படுத்துவதற்கு தனி யான மென்பொருள்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயர்பொக்ஸ் 16 பீற்றா




இணைய உலகில் ஏனைய உலாவிகளுக்கு போட்டிபோடும் வகையில் காணப்படும் பயர்பொக்சானது, தனது 15 ஆவது பதிப்பை சில நாள்களுக்கு முன்னரே அறிமுகப்படுத்தியது. இந்தநிலையில் தற்போது அதிரடியாக அதன் 16 ஆவது பதிப்பின் பீட்டா பதிப்பை வெளியிட முடிவு செய்துள்ளது.

இணையத்தள வடிவமைப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் Command Line இல் அமைந்த Developer ரூல்களைக் கொண்ட பதிப்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Firefox 16 ஆனாது விண்டோஸ், லினக்ஸ், மெக் போன்ற இயங்குதளங்களில் செயற்படக்கூடிய வகையில் தனித்தனியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வலுவான பல அம்சங்களைக் கொண்ட இந்தப்பதிப்பின் மூலம் பயனாளர்கள் இலகுவாக இணைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## பொன்னாலை வரதராஜப்பெருமாளுக்கு இன்று தேர்த்திருவிழா

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழா கடந்த மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இன்று முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும். தொடர்ந்து உறியடி உற்சவமும் இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருவடி நிலைக்கு சுவாமி தீர்த்தமாடுவதற்குச் சென்று மீண்டும் தீர்த்தமாடிய பின் ஆலயத்தை வந்தடைவார். அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (3)

# இந்தோனேசியாவில் மனித அவலம் அரங்கேறும் புகலிடக் கோரிக்கையாளர் தெரிவிப்பு

வலி,வடக்கு செப்.07

படகில் இருந்து இறங்க மறுத்த உண்ணாவிரதம் இருக்கும் புகலிடம் கோரும் ஈழத்தமிழர்கள் இந்தோனேசியாவில் கடந்த சில நாள்களாக நடந்துகொண்டுள்ள மனித அவலம் இன்னும் ஊடகங்களின் பார்வையில் எட்டாமல் உள்ளதுடன் இது இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி இந்தியாவில் தமிழ் நாட்டு கிழக்குக் கடல் மகாபலிபுரத்திற்கும் காசிமேட்டுக்கும் இடையில் உள்ள துறைமுகப் பகுதி ஒன்றில் இருந்து ஆஸ்திரேலியா நோக்கி ஈழப் புகலிடக் கோரிக்கையாளர்கள் 53 பேருடன் புறப்பட்ட படகு ஒன்று எரிபொருள் தீர்ந்த நிலையில் இந்தோனேசியாவில் கரையொதுங்கியுள்ளது. அந்தப் படகை இந்தோனேசியக் கடற்படை சுற்றி வளைத்ததுடன் அவர்களை கரையிறக்கி சிறிலங்கா அரசிடம்



கையளிக்க முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

ஆனால் படகில் இருந்து இறங்க மறுத்து வரும் புகலிடக்கோரிகையாளர்கள் தாம் ஸ்ரீலங்காவிடம் திருப்பி கையளிக்கப்பட்டால் கொல்லப்பட்டு விடுவோம் என்றும் தம்மை ஐ.நா. நிறுவனங்கள் அல்லது மனித உரிமை நிறுவனங்களிடம் கையளிக்கும் படியும் கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளதுடன் உணவுத் தவிர்ப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

53 பயணிகளைக் கொண்ட இந்தப் படகில் இரு ஊனமுற்றவர்கள் மற்றும் மூன்று குழந்தைகள் நான்கு பெண்களும் இருக்கின்றனர் என்று அறிய முடிகின்றது.

கடந்த 19 ஆம் திகதி எரிபொருள் தீர்ந்த நிலையில் தத்தளித்த படகை சில மீனவர்கள் கண்டு 100 லீற்றர் டீசல் வழங்கி நகர உதவியதாக தெரிவிக்கும் அந்தப் புகலிடக்கோரிக்கையாளர்கள் மீண்டும் 28 ஆம் திகதி வரை பயணம் மேற்கொண்ட நிலையில் எரிபொருள் தீர்ந்து காற்றில் அடித்துச் செல்லப்பட்டு இந்தோனேசியாவில் சிக்காப் எனப்படும் பிரதேசத்தில் உள்ள துறைமுகத்தில் தரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆபத்தான கடல் பயணத்தை தொடர்ந்து கடந்த ஐந்து நாள்களாக உணவுத் தவிர்ப்பை மேற்கொண்டு வரும் இவர்களின் உடல் நிலை மிகவும் மோசமடைந்து வருவதாகவும் இன்னும் ஓரிரு நாள்கள் தாமதித்தால் மனித அவலம் ஒன்று இந்தோனேசியா கரையில் நிகமும் எனவும் அந்தப் படகில் உள்ள ஈழப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேநேரம் பிறிதொரு படகில் பயணித்த இன்னொரு தொகுதி புகலிடக் கோரிக்கையாளர்கள் படகில் இருந்து இறக்கப்பட்டு ஒரு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிலும் பெண்கள் குழந்தைகள் அடங்கிய ஈழத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளனர் என்றும் அறிய முடிகின்றது.(3-86)

## யாத்திரிகர் மீதான தாக்குதலை கண்டிக்கிறார் ஜயலத் எம்.பி

சமய வழிபாடுகளுக்காக இந்தியாவுக்கு சென்றிருந்த இலங்கை யாத்திரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் வழிமறிப்புகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாகும். இவை கண்டனத்திற்குரியவை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தென்னிந்திய அரசியல்வாதிகள் பலர் கருத்துடன் செயற்படுகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். தற்போதைய இலங்கை அரசு அண்மையில் இந்திய அரசுக்கு பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளன. ஆயினும் இலங்கை அரசு அளித்துள்ள வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றவில்லை. யுத்தம் முடிந்து 3 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள், புனர்வாழ்வு பணிகள், மனித உரிமைப் பாதுகாப்புகள், வடக்கில் ஜனநாயகத்தை உறுதி செய்தல் ஆகியவை தொடர்பிலும் விசேடமாக அரசியல் தீர்வு தொடர்பில் இழுத்தடிப்பிணை இந்த அரசுமேற் கொண்டுவருகிறது.

எனவே இப்போதாவது இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் காலம் தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தமது கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளார். (3)

## சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கலமாதா தேவாலய வருடாந்தத் திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.இன்று மாலை 6 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும், நற்கருணை பவனியும் இடம்பெறும். நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப தேர்ப்பவனியும், சொரூப ஆசீரும் இடம்பெறும். (3)

* * *

பூநகரி முழங்காவில் கிருஷ்ணன் கோயில் உறியடித் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். உறியடித் திருவிழாவைத் தொடர்ந்து மேளக்கச்சேரி, பட்டிமன்றம், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன எனவும் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-4)

* * *

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு கிருஷ்ண ஜெயந்தி திருவிழா நடைபெறும். இரவு விசேட அபிஷேகமும் அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (3-9)

* * *

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய தேர்த் திருவிழா இன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். மாலை 6மணிக்கு வசந்த மண்டபப் பூசை முடிவுற்று இரவு 7.30 மணிக்கு உறியடி உற்சவ நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெறும். நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும். (3-36)

* * *

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இரவு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும் உற்சவம் தொடர்ந்து அதிகாலை வரை இடம்பெறும் அபிஷேக ஆராதனைகளை அடுத்து ''கிருஷ்ண லீலைகள்'' என்ற தலைப்பில் பண்டிதர் பொன் சுகந்தனின் சொற்பொழிவும் 'அபிநயசுரபி' நடன மன்ற மாணவிகளின் 'நிருத்தியாஞ்சலி நடன நிகழ்வும் இடம்பெறும். தொடர்ந்து நள்ளிரவு கிருஷ் ணன் பிறப்பும், பொலிகண்டி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ''பத்தி வைராக்கியம்'' என்னும் தலைப்பில் வில்லுப் பாட்டும் நிகழ்த்தப்படும். அதிகாலை 4 மணிக்கு சுவாமி வீதிவலம் வந்து வடக்கு வீதியில் உறியடி உற்சவம் நடைபெறும்.(3-8)

## இறைவன் அருளைப் பெற....

ஞானக்கதிர்

நம் ஐம்புலன்களுக்கு எட்டாத அற்புதமான சக்தி ஒன்று உண்டு. அது எங்கும் நிறைந்துள்ளது. எல்லாமாக விளங்குகிறது. எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்குகிறது. இந்த சக்தி ஆதியும் அந்தமும் இல்லாத அருட் பெருஞ்சோதி. இது எள்ளில் எண்ணெய் மறைந்திருப்பது போல் எல்லாப் பொருள்களிலும், உயிரிலும் மறைந்து விளங்குகின்றது. இது ஐம்புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதது. வார்த்தைகளால் விளக்கமுடியாதது இதையே இறைவன் என்கிறோம். தேனைப் பற்றிப் படிப்பதாலோ, அறிவதாலோ என்ன பயன்? சுவைத்துப் பார்க்காவிட்டால் தேனின் சுவையை முழுமையாக அறிய முடியாது அல்லவா? இறைவனும் அப்படிப்பட்டவன்தான்.

இறைவனின் அருள் கிடைத்தால் தான் இறைவனை நாம் அறிய முடியும். ''அகம் புகுந்தார் அடியேற்று அருளாலே'' என்கிறார் திருமூலர். ''நம் அறிவுக்கு அப்பாற்பட்ட இறைவன், எண்ணத்துக்கும் எட்டாத இறைவன், பக்தி என்னும் வலையை வீசினால் அதில் அகப்படுவான்'' என்கிறார் மணிவாசகப் பெருமான். இவ்வாறு இறைவன் மீது அன்புகாட்டும் நெறியே பக்திநெறியாகும். பக்தியால் பரமனை அடைவது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது. நாம் இறைவன்மீது செலுத்தும் பக்தியின்மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

நன்றி: ஞானச்சுடர்



நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழாவின்போது முருகப் பெருமான் தேரில் வீதியுலா வருகிறார். (3-100)

## 'இந்துமாமன்றத்தால் நடுத்தீர்ப்பு மையம்'

இந்து ஆலயம், அல்லது இந்துசமய நிறுவனம் அவற்றின் நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக ஏதாவது பிணக்குகள் ஏற்படின் அந்தப் பிணக்கினை ஆற்றுப்படுத்தும் நோக்குடன் அகில இலங்கை இந்துமாமன்றம், 'நடுத்தீர்ப்பு மையம்' ஒன்றினை நிறுவியுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்ற நடுத்தீர்ப்பு விதிகளுக்கமைய இந்து நடுத்தீர்ப்பாளர்கள் எதுவித கட்டணமுமின்றி விசாரணைகளை நடத்தி நடுத்தீர்ப்பு வழங்குவார்கள். இதன் மூலம் இந்து ஆலயங்களோ நிறுவனங்களோ தமது பிணக்குகளை நீதி மன்றுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. இந்து சமய அறிவு சார்ந்த நடுத்தீர்ப்பாளர்கள் பிணக்குகளை விரைவாகவும் இலகுவாகவும் தீர்த்து வைப்பார்கள்.

இந்த நடுத்தீர்ப்பு சம்பந்தமான மேலதிக விவரங்கள் தேவைப்படின் அகில இலங்கை இந்துமாமாமன்றத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அகிலஇலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.(3)



கொழும்புத்துறை எழிலூர் வேளாங்கண்ணி மாதா ஆலயத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது அன்னையின் திருச்சொரூபப்பவனி. (3-135)



குருநகர் ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த திருவிழாவில் புனிதரின் திருப்பவனி சிறப்பாக நடைபெற்றது. (3-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண '20/20' கிரிக்கெட் வடமாகாணத்தில்

## நாளை கோலாகல ஆரம்பம்

சர்வதேசக் கிரிக்கெட் சபை, குட்னஸ் நிதியம், ரெட் டொட்ஸ், மஹேல நிதியம் மற்றும் பிளை எமரட்ஸ் என்பவற்றின் அனுசரணையுடன், தேசிய ரீதியிலான தெரிவு செய்யப்பட்ட 19 வயது பாடசாலை ஆண்கள் அணிகள், 23 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் தெரிவு அணிகள் பங்குபற்றும் 'முரளி நல்லிணக்கக் கிண்ணத்துக்கான' 20/20 கிரிக்கெட் சுற்றுத் தொடர் நாளை சனிக்கிழமை பிரமாண்டமான முறையில் ஆரம்பமாகவுள்ளது.

அகில இலங்கை ரீதியிலான தெரிவு அணிகளும் மோதவுள்ள இந்தச் சுற்றுத் தொடரின்போட்டிகள் அனைத்தும் வடமாகாணத்திலேயே நடைபெறவுள்ளன. இதற்கென மாங்குளம் மகாவித்தியாலயம், வவுனியா மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், கிளிநொச்சி மத்தியகல்லூரி ஆகியபாடசாலைகளின் மைதானங்கள் விசேடமாகத் தயார் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பாக இறுதிப் போட்டி நடைபெறவுள்ள ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் இராணுவத்தினரதும், மஹெல நிதியத்தினதும் பங்களிப்புடன் சர்வதேச ஆடுகளங்களுக்கு நிகரான வசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள பாடசாலைகள் மற்றும் கழகங்களில் உள்ள இளம் வீரர்களின் கிரிக்கெட் திறனை வளர்த்து அவர்களை தேசிய அணிக்குள் உள்நுழையக் கூடியவர்களாக மாற்றும் நோக்கத்துடன் முரளி நல்லிணக்கக் கிண்ண 20/20 தொடர் நடத்தப்பட்டுவருகிறது. போரால் சிதைந்து போன வடமாகாணத்தை மையமாகக் கொண்டு இந்த முறை முரளி நல்லிணக்க கிண்ணத் தொடர் நடத்தப்படுவதற்கு பல்வேறு அமைப்புகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

குறிப்பாக சர்வதேசப் போட்டிகளுக்கு மாத்திரமே இதுவரை காலமும் அனுசரணை வழங்கிவந்த சர்வதேசக் கிரிக்கெட் சபை, முரளி நல்லிணக்கக் கிண்ணத் தொடருக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. சர்வதேசக் கிரிக்கெட் சபை முதன்முறையாக ஓர் உள்ளூர் கிரிக்கெட் தொடருக்கு உத்தியோகபூர்வ அனுசரணையை வழங்குவது இதுவே முதன்முறை.

அத்துடன் கிரிக்கெட் துறையின் வளர்ச்சிக்கு நிதிப்பங்காளராக உதவி வரும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நிறுவனத்தின் 'பிளை எமிரேட்ஸ்' முரளி நல்லிணக்கத் தொடருக்கு பிரதான நிதி அனுசரணையாளராகச் செயற்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும் போட்டிகளில் 19 வயதுக்குட்பட்ட 12 பாடசாலைகளைச் சேர்ந்த ஆண்கள் அணிகள், 23 வயதுக்குட்பட்ட மகளிர் அணிகளைச் சேர்ந்த 8 தெரிவு அணிகள் என்பன பங்குபற்றவுள்ளன. நாளை முதல் 10ஆம் திகதிவரை முதல் சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. 11ஆம் திகதி ஆண், பெண் அணிகளுக்கான அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்று அவற்றில் வெற்றியீட்டும் அணிகள், 12 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் மோதவுள்ளன. அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு மகளிருக்கான இறுதிப் போட்டியும், பிற்பகல் 2 மணிக்கு ஆண்களுக்கான இறுதிப்போட்டியும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.




இறுதிப்போட்டியன்று உலக சாதனை பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன், இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, முன்னாள் அணித் தலைவர் குமார் சங்ககார உள்ளிட்ட கிரிக்கெட் பிரபலங்களும், சர்வதேசக் கிரிக்கெட் சபை அதிகாரிகளும், இலங்கைக் கிரிக்கெட் நிறுவன அதிகாரிகளும், படை உயர் அதிகாரிகளும், விளையாட்டுத்துறை அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ங-23-6-500)

### புத்தூர் வளர்மதி வெற்றிக்கிண்ணம்

# இறுதியாட்டங்கள் இன்று



புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்



ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணி



ஆவரங்கால் இந்து இளைஞர் 'பி' அணி



அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி சனசமூக நிலையமும், வளர்மதி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை வளர்மதி விளையாட்டுக்கழக தலைவர் க. நீதிராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

'ஏ' பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் புத்தூர்கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர்அணிமோதவுள்ளது.

'பி' அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் கௌரவ ஆலோசகர் தேசமானிய எம்.ரி.எஸ் இராமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வலி கிழக்கு புத்தூர் பிரதேச சபை தவிசாளர் ஏ. உதயகுமார், கோப்பாய்ப் பிரதேச செயலர் எம். பிரதீபன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் ஆர். மனோகரன், கோப்பாய்ப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஆர். அகல்யா, அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ. ஸ்ரீநிசங்க, புத்தூர் மேற்கு கிராம உத்தியோகத்தர் ஐ. சிவானந்தம், புத்தூர் வடக்கு கிராம உத்தியோகத்தர் ரி. குணசீலி, நிலாவரை இராணுவப் பொறுப்பதிகாரி எல். ஜி. அஜித்குமார, யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட நடுவர் சங்க தலைவர் எஸ். அப்புத்துரை ஆகியோரும் மற்றும் பல்வேறு திணைக்கள உயர் அதிகாரிகளும், சமயப் பெரியார்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு

கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் எதிர் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்

பி.ப. 4.30 மணிக்கு

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம்

* * *

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கற்கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் மனோகாரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். பீற்றஸ்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * *

மன்னார் பெரிய கடை ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'மன்னார் பிறிமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பெறவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு -

ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் எதிர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

ஏசியன் விளையாட்டுக்கழகம் எதிர் சென். ஜோசப் விளையாட்டுக்கழகம்

ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் எதிர் விக்டோரிஸ் விளையாட்டுக்கழகம்.

* * *

இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3 மணிக்கு

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம்.

பி.ப. 4 மணிக்கு

அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் எதிர் வடமராட்சி கலைமதி விளையாட்டுக்கழகம்

(ங-23-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இக்கட்டில் ஆடுவதே பிடிக்கும்

நெருக்கடியான நேரங்கள்தான் என்னிடம் உள்ள திறமைகளை வெளிக்கொண்டுவர உதவியது, என்று ஓய்வு பெற்ற இந்திய வீரர் லக்ஸ்மன் தெரிவித்தார்.

இந்திய அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் லக்ஸ்மன் (வயது-37). நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் பெற்ற நிலையிலும், திடீரென ஓய்வை அறிவித்து எல்லோருக்கும் அதிர்ச்சி கொடுத்தார். கிரிக்கெட் வாழ்க்கையில் வெற்றிகரமாக ஜொலித்தது எப்படி என்று லக்ஸ்மன் கூறியதாவது:

எப்போதெல்லாம் அணி நெருக்கடியான நேரத்தில் தவிக்கிறதோ, அதுபோன்ற கடினமான சூழ்நிலையில் விளையாட எனக்கு அதிகம் பிடிக்கும். இதுதான் என்னிடம் உள்ள திறமைகளை வெளிக்கொண்டு வந்தது. இதனால் தான் ஹைதராபாத்தின் முக்கிய துடுப்பாட்ட வீரராக உருவெடுத்தேன் என்று நினைப்பதுண்டு. சிக்கலான நேரங்களில் பொறுப்பெடுத்துக் கொண்டு, வழக்கத்துக்கு மாறாக அதிகமான திறமையை வெளிப்படுத்துவேன். இப்படி நெருக்கடியான நேரங்களில் சிறப்பாக விளையாடுவது தான் எனது பெரிய வலிமை.

**வெற்றி முக்கியம்**

ஒவ்வொரு வீரருக்கும் ஒரு திறமை இருக்கும். அது அணியின் வெற்றிக்கு உதவ வேண்டும். துடுப்பாட்ட வீரராக இருந்து அணிக்கு தேவையான ஓட்டங்கள் எடுப்பது, கிடைக்கும் வாய்ப்புகளில் பிடியெடுப்புக்கள் எடுப்பது தான் எப்போதும் எனது வேலை. என்னை சிறப்பான துடுப்பாட்ட திறனுள்ள வீரராக பார்த்த அனைவருக்கும் நன்றி.

சச்சின், கங்குலி, கும்ளே என்று, அனைவருமே என்னைக் கவர்ந்தனர். இந்த வீரர்கள் அனைவருமே, அணியின் தலைவர்களாக இருந்தவர்கள். இவர்களது திறமை குறித்த அனுபவங்களை, ஆடைமாற்றும் அறையில் கேட்டுத் தெரிந்துகொள்வேன். இந்தியாவுக்காக தொடர்ந்து திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற லட்சியம் மட்டுமே இவர்களிடம் இருந்தது.

**சேவாக்கைப் பிடிக்கும்**

இப்போதுள்ள வீரர்களில் சேவக்கின் துடுப்பாட்டத்தை ரசித்து பார்ப்பேன். ஏனெனில், ஒரு சிலநேரங்களில் இவர் நம்ப முடியாத அளவில் விளையாடுவார். இவருக்கு திறன் உள்ளதோ இல்லையோ, சேவாக் ஒரு திட்டத்துடன் தான் களத்தில் விளையாடுவார். இவரை நம்ப வேண்டும். சேவாக் போல ஏன் விளையாட முடியவில்லை என நான் கூட வியந்தது உண்டு - என்றார். (5)

# ஆடுகளத்தை சாடும் டோனி



நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆடுகளம் குறித்து இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளார். சுழற்பந்து வீச்சாளர்களுக்கு போதிய உதவியை குறித்த ஆடுகளம் வழங்கவில்லை என்றே டோனி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது ஆட்டம் இடம்பெற்ற பெங்களூர் எம்.சின்னசுவாமி மைதானத்தில் மாத்திரமன்றி, முதலாவது ஆட்டத்துக்குரிய மைதானத்திலும் டோனி தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டு போட்டியிலும் வென்ற பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள டோனி, அதிகமான சுழற்சியை வழங்கக்கூடிய ஆடுகளங்களில் விளையாடுவதற்கு விரும்புகிறோம் எனவும், இந்தத் தொடரில் அது தங்களுக்குக் கிடைத்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் இந்தியாவின் ரவிச்சந்திரன் அஷ்வின் 2 போட்டியில் 18 இலக்குகளையும், பிரக்ஜான் ஓஜா 13 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார்கள். 40 இலக்குகளில் 31 இலக்குகள் சுழற்பந்துவீச்சாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தன. எனினும் டோனி தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும் குறித்த கருத்துக்கள் தொடர்பாக மறுப்புத் தெரிவித்த மைதானப் பராமரிப்பாளர்கள், 2 ஆடுகளங்களும் பலராலும் பாராட்டப்பட்டதாகவும், மோசமாகத் திரும்பக்கூடிய ஆடுகளமொன்றை டோனி கேட்கிறார் எனவும், அதைத் தங்களால் வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர். (5)



# விருதுக்கு அஜ்மல் நிராகரிப்பு

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான குறும் பட்டியலில் தெரிவுசெய்யப்படாதிருந்த பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மலை அந்தக் குறும் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கையை சர்வதேசக் கிரிக்கெட் சபை நிராகரித்துள்ளது. குறும் பட்டியலில் இடம்பெற்றிருந்த வீரர்கள் வாக்களிப்பு முறையிலேயே தெரிவுசெய்யப்பட்டதாகவும் சர்வதேசக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தாண்டுக்கான சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விருதுக்கான நெடும் பட்டியலில் இடம்பெற்றிருந்த சயிட் அஜ்மல், சிறந்த டெஸ்ட் வீரர்களுக்கான பட்டியல் அறிவிக்கப்பட்டிருந்த போது நால்வரில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதற்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, விருதுகளுக்கான குறும் பட்டியல் கிரிக்கெட் விற்பன்னர்களின் வாக்குகள் மூலமே தெரிவுசெய்யப்பட்டதாகவும், அதில் தலையிடும் உரிமை சர்வதேசக் கிரிக்கெட் சபைக்குக் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

நெடும் பட்டியல்கள் சர்வதேசக் கிரிக்கெட் சபையைச் சேர்ந்த கிளைவ் லொயிட்டின் தலைமையில் இந்தாண்டு கிளெயன் கொனர், ரொம் மூடி, கார்ல் கூப்பர், மார்வன் அத்தப்பத்து ஆகியோரால் தெரிவுசெய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, குறும் பட்டியலுக்கான தெரிவிற்காக 32 கிரிக்கெட் விற்பன்னர்கள் வாக்களித்ததாகவும், அதிக வாக்குகளைப் பெற்ற நான்கு வீரர்கள் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவானதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தாண்டுக்கான சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களுக்கான பட்டியலில் குமார் சங்ககார, வேர்ணன் பிலாந்தர், ஹசிம் அம்லா, மைக்கல் கிளார்க் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# தென்னாபிரிக்கா வென்றது தொடர் சமனானது

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 5 ஆவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ட்ரென்ட் ப்ரிட்ஜ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவ்வணி, அதன் பின்னர் நிதானித்து 79 ஓட்டங்கள் வரை மேலதிக இலக்குகளை இழக்காமல் ஆடிய போதிலும், 3 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டதும் இலக்குகள் தொடர்ந்து வீழ்த்தப்பட்டன.,

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் 51 ஓட்டங்களையும், கீஸ்வெட்டர் 33 ஓட்டங்களையும், கிறிஸ் வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், ஜொனி பெயர்ஸ்ரோ 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக றொபின் பீற்றர்சன் 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஸ்ரெய்ன் 24 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மோர்னி மோர்க்கல் 41 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

183 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 34.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. மோசமான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. ஆனால் ஹசிம் அம்லாவும், ஏ.பி.டி.வில்லியர்ஸும் சிறப்பாக ஆடி பிரிக்கப்படாத 172 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 107 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 41 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா தெரிவானார். (5)



# மூன்று விருதுகளை தட்டிச் சென்ற சங்கா

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான சியட் ஸ்ரீலங்கா விருது வழங்கல் விழா-2012 நேற்று முன்தினம் இரவு கொழும்பில் நடைபெற்றது. இந்த விழாவில் இலங்கை வீரர் குமார் சங்ககார, வருடத்தின் சிறந்த வீரர் வருடத்தின் மக்கள் அபிமானம் பெற்ற வீரர், வருடத்தின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் ஆகிய மூன்று விருதுகளை வென்றார். சியட் ஸ்ரீலங்கா விருது வழங்கல் விழா நான்காவது தடவையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. மக்கள் அபிமான வீரர் விருதை தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக குமார் சங்ககார வென்றுள்ளார். மக்கள் அபிமானம் பெற்ற வீரர் விருதையும் வருடத்தின் சிறந்த சியட் கிரிக்கெட் வீரர் விருதையும் ஒரே வருடத்தில் அவர் வென்றமை இது இரண்டாவது தடவையாகும்.

சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளருக்கான விருது ரங்கன ஹேரத்துக்கு வழங்கப்பட்டது. ஒரு நாள் சர்வதேச போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது மஹேல ஜெயவர்தனவுக்கும் ஒரு நாள் சர்வதேச போட்டியின் சிறந்த பந்துவீச்சாளர் விருந்து லசித் மலிங்கவுக்கும் வழங்கப்பட்டது. ஒரு நாள் சர்வதேச போட்டியின் சிறந்த சகலதுறை வீரருக்கான விருது திலகரட்ன டில்ஷானுக்கு வழங்கப்பட்டது. சிறந்த வளர்ந்துவரும் வீரருக்கான விருது தினேஷ் சந்திமாலுக்கு வழங்கப்பட்டது. ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சியட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவன அனுசரணையுடன் இந்த விருது வழங்கல் விழா இடம்பெற்றது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் கண்டது ஆஸ்திரேலியா

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட 'ரி-20' சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

டுபாய் சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 19.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

90 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 14.5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்து 7 இலக்குகளால் வெற்றிபெற்றுக் கொண்டது. சிறிய இலக்காக அமைந்து கொண்டதால் வெற்றி இலக்கை அடைவதற்கு பாகிஸ்தான் அணி சிரமங்களை எதிர்கொண்டிருக்கவில்லை.

After A/L English Course From nodes
ஆங்கிலப்பயிற்சி நெறி உயர் கல்வி அமைச்சின் சான்றிதழ்
National Online Distance Education Service
The Online University
0212219460
Course Fee 4,500/= Only
இணையதளத்தினூடாக மிகவும் இலகுவாக, சுயமாக, குறுகிய காலத்தில் ஆங்கில மொழியை கற்றுக்கொள்ளுங்கள்
Courses
- Basic Certificate in English
- Intermediate Certificate in English
- Advance Certificate in English
Certificate Issued by
National Online Distance Education Service of the Ministry of Higher Education
MindVishion College of International Studies
Authorized Center For
NODES of the Ministry of Higher Education
2nd Floor, No 4, Clock Tower Lane, Jaffna

advt@uthayan.com
0215671111

ஆண்டு 1 தொடக்கம் A/L வரையான மாணவர்களுக்கு

| MS Office | DesktopPublishing |
|---|---|
| MS Word | Photoshop |
| MS Excel | Pagemaker |
| MS Powerpoint | Coreldraw |
| MS Access | ICT (O/L) |
| Internet & Email | GIT (A/L) |

சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுக்கள்
தொடர்புகளுக்கு:
Group Classes, 077 114 7617
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

BIT Project மற்றும் Semester வகுப்புக்கள்
- 2007 ல் இருந்து Supervisor (30 Projects)
- யாழில் 25 இற்கு மேற்பட்ட Software
- Windows and Web based Projects
- BIT மற்றும் ஏனைய IT Group classes
- சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில்
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS) 0779785796
இல: 28/23, மணல்தரை வீதி, கந்தர்மடம்.(4.30pm - 8.30 pm)

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா?, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15514)

FRENCH LANGUAGE CENTRE
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French
France, Canada க்கு திருமணம் முடித்துச் செல்லவுள்ளோர், France க்கு செல்லவுள்ளோர், மொழி ஆர்வம் உள்ளோரும் கற்றுக் கொள்ளலாம்.
(எமது நிறுவனத்தில் French கற்பதற்கு ஆங்கில அறிவு அவசியமில்லை)
DELF A1 பரீட்சைக்கு எமது நிறுவனத்தின் ஊடாக தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6 மாதகாலத்தில் உங்களால் French கதைக்க முடியும். எமது வகுப்புக்களின் தரம் பற்றி எமது பழைய மாணவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.
யாழ்ப்பாணத்தில் தரமான French கல்வியை வழங்குவதே எமது நோக்கம்.
ஆசிரியர்:- Mr. V. Jegan
83, Palaly Road, Kantharmadam, Jaffna.
(பீசா உணவகம் அருகில் உள்ள லேனில்)
ஆரம்பம்: நாளை (08.09.2012) சனி 2 pm
தொடர்புகளுக்கு:- 0779789456 (சி/3124)(3.6.7)

சல்லிகள் விற்பனைக்கு
தரமான கருங் சல்லிகள்
(½", ¾", 1", 1½", 4", 9x6)
போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு- 0775890730.

தென்மராட்சியில்.....
இன்று முதல் புதிய நடைமுறைக் கேற்ப வாகன சாரதிகள் அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் அனுமதி பெற்ற வைத்தியர்களால் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள நியூ மெடிக் கெயர் வைத்திய சாலையில் வழங்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.
(21519)(3.6.7) நிர்வாகத்தினர்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
மாபெரும் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு
- A/L பரீட்சை எழுதிவிட்டீர்களா?
- உங்களுடைய எதிர்காலம் எவ்வாறு அமையவேண்டும் என தீர்மானித்து விட்டீர்களா?
- உங்கள் எதிர்கால கற்றல் தொடர்பான திட்டம் என்ன?
- எதைப்படிப்பது? எதைத் தெரிவு செய்வது?
- எப்படிப் படிப்பது? எங்கே படிப்பது?
- அடிப்படை தகைமை என்ன? கட்டணம் என்ன?
கவலையை விடுங்கள்
Birtish College of High Studies உம் British Council உம் இணைந்து நடாத்தும் இக் கருத்தரங்கில் மேற்படி கேள்விகளுக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் துறைசார் நிபுணர்களினால் வழங்கப்படும்.
கருத்தரங்கில் ஆராயப்படும் விடயம்
1. உள்நாட்டில் எவ்வாறான கற்கைநெறிகளை தொடரலாம் University, Open University, Advanced Technical Institue, External - Degree program, Sri Lanka Law College, CIMA, ACCA, AAT, IT, ect,
2. UK, Canada, Australia ஆகிய நாடுகளுக்கான Student Visa ஏனைய, Settilment Visa, Migration Visa, Tourist Visa, Dependant Visa ஏனைய அனைத்து Visaக்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பான ஆலோசனைளும், வழிகாட்டல்களும் துறைசார் சட்டத்தரணிகளால் வழங்கப்படும்.
3. சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆங்கில கற்கை நெறிகளை எவ்வாறு தொடரலாம் என்பது பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படும். (A1, B1, IELTS)
இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 08.09.2012 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி
இக்கருத்தரங்கில் அனைவரும் பங்குபற்றி உங்கள் வாழ்க்கையினை வளமுள்ளதாக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (c/2994)
மேலதிக தொடர்புகளுக்கு:
British College of Higher Studies
No. 15, Sirampiyady Lane, Off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

CIMA Education
வடக்கு கிழக்கில் முன்னணி நிறுவனத்துடன் இணைந்து கொள்ளுங்கள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Foundation Batch Starts on (8th Sep - 2012) Saturday
நீங்கள் பெற்ற தகைமைகளை ஆதாரப்படுத்தி உங்களுக்கே உரிய புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

CAPSTONE,
154 A/1, Navalar Road,
Jaffna.
T.P. 077 1250350, 021 222 0727

AFTER A/L? JOIN THE LEADING SOFTWARE DEVELOPMENT COMPANY & BECOME A SOFTWARE ENGINEER
TRANSITION

NEW
PSD iT
PROFESSIONAL SOFTWARE DEVELOPMENT IN IT
COURSE CONTENT
Duration 5 months
- Software Engineering concepts
- Introduction to development platforms
- Opensource Web frameworks & Development
- Windows programming using VB.net 2010
- Advanced Java Programming
- Techniques of Artificial Intelligence
- Database Designing Concept
- Project Management
- Final Guided Project
புதிய பிரிவுகள் வருகின்ற 10.09.2012 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
LIMITED SEATS. REGISTER YOUR SEAT TODAY.
மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
021-2219230
கற்கை நெறியின் முடிவில் 20,000 க்கு மேற்பட்ட சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு.
E-TRANSITION
Software Development Company
TRANSITION
166/3, Navalar road, Jaffna. TP: 021-2219230

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org